# ஆண்டறிக்கை
# 2012



## இலங்கை மகாவலி அதிகார சபை

கௌரவ நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர்
நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

கௌரவ அமைச்சர் அவர்களே,

இலங்கை மகாவலி அதிகார சபையின் 2012 ஆண்டுக்கான ஆண்டறிக்கையை தங்களுடைய தகவலுக்கென இத்துடன் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

உங்கள் நம்பிக்கையுள்ள,

காமினி ராஜகருணா,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை

# இலங்கை மகாவலி அதிகார சபையின்
# ஆண்டறிக்கை – 2012

| **உள்ளடக்கம்** | | **பக்கம்** |
|---|---|---|
| நோக்கு மற்றும் பணி | | ை |
| வரலாற்று பின்னணி | | ைை |
| 2012 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை | | ைைை |
| சிரே்'ட முகாமைத்துவம் | | ைஎ - எ |
| 2012 ஆண்டறிக்கை தொடர்பான பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | | எை -எைை |
| பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு | | எைைை |
| 2012 கணக்காய்வு கமிட்டியின் அறிக்கை | | ைஒ |
| கடந்த 7 ஆண்டுகளின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் | | ஒ |
| இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பனிகளின் பணிப்பாளர் சபை – 2012 | | ஒை |
| **1 பாகம்** | | |
| அறிக்கை | | நிர்வாக |
| **முதலாவது அத்தியாயம்** | இலங்கை மகாவலி அதிகார சபையின் ஸ்தாபிதம் | 1 |
| | அதன் கட்டமைப்பு மற்றும் கருமங்கள் | 2 |
| | இலங்கை மகாவலி அதிகார சபையின் முக்கிய கருமங்கள் | 3 |
| | இலங்கை மகாவலி அதிகார சபையின் பொது நிர்வாக கட்டமைப்பு | 4 |
| | மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிர்வாகம் | 5 – 8 |
| | தலைமை அலுவலக செயற்பாட்டுப் பிரிவு | 9 |
| | திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுப் பிரிவு | 10 |
| | உள்ளக கணக்காய்வு பிரிவு | 11 |

**இரண்டாவது அத்தியாயம் - தொழில்நுட்ப பிரிவு சேவைகள் பிரிவு (12 - 40)**

2.1 கருத்திட்ட திட்டமிடல் மற்றும் அமுலாக்கல்

2.2 ஏனைய செயற்பாடுகள்

முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பிரிவு

நீர் முகாமைத்துவ செயலகம்

காணி பயன்பாட்டு திட்டமிடல் பிரிவு

சுற்றாடல் மற்றும் வன வள பாதுகாப்புப் பிரிவு

2.3 விசேட கருத்திட்டங்கள்

மொறகஹகந்த – களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டம்

அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம்

மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம் - டீ வலயம்

ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

வெலிஓயா ஒருங்கிணைந்த கருத்திட்டம்

ரம்பக்கன்ஓய ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

**மூன்றாவது அத்தியாயம் - அபிவிருத்தி பிரிவு (41 - 57)**

3.1 காணிப் பிரிவு

3.2 விவசாய அபிவிருத்தி Æ கால்நடை அபிவிருத்தி மற்றும் மீன்பிடி அபிவிருத்தி பிரிவு

3.2.1 விவசாய அபிவிருத்தி பிரிவு

3.2.2 கால்நடை மற்றும் மீன்பிடி அபிவிருத்தி பிரிவு

3.3 கால் நடை மற்றும் மீன்பிடி அபிவிருத்தி பிரிவு

3.4 நிறுவன அபிவிருத்தி பிரிவு

3.5 வணிக அபிவிருத்தி பிரிவு

**நான்காவது அத்தியாயம் - மனித வளங்கள் மற்றும் நிதி முகாமைத்துவ பிரிவு (58 - 66)**

4.1 மனித வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

4.2 சட்டப் பிரிவு

4.3 நிதிப் பிரிவு

4.4 மகாவலி பாதுகாப்புப் படை

4.5 மகாவலி நிலையம்

4.6 போக்குவரத்து பிரிவு

**ஐந்தாவது அத்தியாயம் - இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பெனிகள் (67 - 71)**

| | | |
|---|---|---|
| பாகம் ii | வருடாந்த கணக்குகள் | (72 - 85) |
| பாகம் iii | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | (86 – 104) |
| பாகம் iv | பணிப்பாளர் நாயகத்தின் குறிப்புக்கள | (105 -114) |
| பாகம் v | இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒட்டுமொத்த செயலாற்றுகை | (115-130) |

## நோக்கு

“இலங்கையின் ஆற்றுப் பள்ளத்தாக்கு பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் என்பவற்றை திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல், இயக்குதல் மற்றும் நெறிப்படுத்தல் தொடர்பான முதன்மையான நிறுவனமாக செயற்படுதல்”

## பணி

- ❖ தேசிய உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் காணி மற்றும் நீர் வளங்களின் செயல் திறனை உயர்த்துதல்.
- ❖ நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் முகாமைத்துவத்துக்கென விவசாயிகள் அமைப்புக்களின் முகாமைத்துவ ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் அவற்றின் முகாமைத்துவத்தை விவசாய அமைப்புக்களிடம் ஒப்படைத்தல்.
- ❖ தற்போதைய நீர்த் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் விதத்தில் மகாவலி நீர்த் தேக்கங்களில் நீரைத் தக்க வைத்துக் கொள்ளும் ஆற்றலை விரிவாக்குதல் மற்றும் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.

# வரலாற்றுப் பின்னணி

இரண்டாவது உலகப் போரின் முடிவையடுத்து உலகின் அனைத்து நாடுகளுமே தமது அபிவிருத்திச் செயற்பாடுகளை புதிய திசைகளில் நெறிப்படுத்துவதில் ஆர்வம் காட்டின. குறிப்பாக, உலக வல்லரசுகளின் கெடுபிடி யுத்தத்தில் அகப்பட்டுக் கொண்ட அரசுகள் அந்தந்த அரசியல் செல்வாக்குகளுக்குள் ஈர்க்கப்பட்டதுடன், தமது நாடுகளின் முன்னேற்றத்திற்கென தமது நம்பிக்கையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அரசியல் கோட்பாடுகளுக்கூடாக தமக்கான அரசியல் பாதைகளை தேடத் தொடங்கின.

இலங்கை மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு தரப்பினரிடமிருந்தும் செல்வாக்கைப் பெற்று, அது வரையில் தன்னை அடிமைப்படுத்தி வைத்திருந்த பிரித்தானிய காலனித்துவப் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு புதிய அபிவிருத்திப் பாதையை தேடுவதில் முனைப்பாக ஈடுபட்டிருந்தது. குறிப்பாக, தீவிர வேகத்தில் அதிகரித்து வரும் குடித்தொகைக்கு இணையான விதத்தில் மிதமான மட்டத்தில் அபிவிருத்தி கண்டு வரும் உற்பத்திச் செயற்பாட்டை விருத்தி செய்யாவிட்டால் ஏற்படக் கூடிய மோசமான தாக்கம் குறித்து நாடு கவனம் செலுத்தியது. அதன் அடிப்படையில் உணவு உற்பத்தி செயன்முறையை விருத்தி செய்வதற்கு அது முன் வந்தது. அதற்கான ஒரு அணுகுமுறையாக, 1950 களின் இறுதிப் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய அமெரிக்க தூதுக் குழு மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பன இணைந்து ஓர் ஆய்வை மேற்கொண்டன. அந்த ஆய்வின் அடிப்படையில் மகாவலி கங்கையின் நீரை உலர் வலயத்தின் நீர்த் தட்டுப்பாடு நிலவி வரும் பிரதேசங்களுக்கு திசை திருப்புவதற்கெனமகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் ஓர் அறிக்கை 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மகாவலி கங்கை அண்மித்த பிரதேசங்களில் விவசாயத்திற்கென நீர்ப்பாசன வசதிகளை திட்டமிடுதல் மற்றும் நீர் மின்சார உற்பத்தி ஆகிய யோசனைகளை உள்ளடக்கிய மகாவலி அபிவிருத்தி பெருந்திட்டம் 1968 இல் வெளியிடப்பட்டது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உலக உணவு விவசாய தாபனம் என்பவற்றால் கூட்டாக இணைந்து தயாரித்த இந்த அறிக்கை நீர்ப்பாசன திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டது.

அந்தத் திட்டத்தின் முதலாவது செயற்பாடாக வினாடியொன்றுக்கு 57 கன மீற்றர் நீரை உலர் வலயத்திற்கு விடுவிக்கும் நீர் மின் உற்பத்தி மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான பொல்கொல்ல திசை திருப்பல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதனையடுத்து 1959 – 1977 கால கட்டத்தின் போது இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக போவதன்ன நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டு, அங்கு ஒரு நீர் மின் உற்பத்தி திட்டமும் உருவாக்கப்பட்டது. அதன் மூலம் வெளியிடப்படும் நீர் கலாவெவ கீழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கென பயன்படுத்தப்பட்டது.

முப்பது வருட காலப் பிரிவை கொண்ட ஆரம்ப திட்டத்தை ஆறு வருடங்களுக்குள் பூர்த்தி செய்யும் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டம் 1978 இல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் மூலம் பெரிய பிரித்தானியா, சுவீடன், மேற்கு ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளிலிருந்து கிடைத்த உதவியை பயன்படுத்தி விக்டோரியா, மாதுருஓய, ரன்தெனிகல – ரன்தெம்பே , கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அந்த நீர்த்தேக்கங்களுக்கூடாக மகாவலி டீ , ஊ , ர் வலயங்களில் அமைந்திருந்த பாரிய நிலப் பரப்புக்களில் புதிதாக விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. அதனையடுத்து நாட்டில் உணவு உற்பத்திச் செயன்முறை வேகமடைந்ததுடன், அதனுடன் இணைந்த விதத்தில் நீர் மின்சார உற்பத்தியும் விருத்தி செய்யப்பட்டது.

அதனையடுத்து, மகாவலி பெருந்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சமூக, பொருளாதார, அரசியல், சுற்றாடல் நிலைமைகளை அனுசரித்து ஹுருலுவெவ, மெதிரிகிரிய, உடவளவே, ரம்பக்கன்ஓயா, வெலிஓயா பிரதேசத்தை உள்ளடக்கிய டு வலயம் ஆகிய பிரதேசங்களும் மகாவலி வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றில் அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இன்று வரையில் அப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கென இலங்கை மகாவலி அதிகார சபை பங்களிப்பை வழங்கி வருகின்றது. இது தவிர, தற்பொழுது மகாவலி பெருந்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஐந்து பாரிய நீர்த்தேக்கங்களில் முதன்மையான நீர்த்தேக்கமான மொரகஹகந்த – களுகங்க நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. வெலிஓயா பகுதியில் கியுல்ஓயா நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## 2012 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபை

| வரிசை எண் | பதவி Æபெயர் |
|---|---|
| 01 | திரு.காமினி ராஜகருணா<br>பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை மகாவலி அதிகார சபை<br>தலைவர் |
| 02 | திரு. கே. டப்ளிள்யூ. ஐவன் டி சில்வா<br>செயலாளர்<br>நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு<br>பணிப்பாளர் |
| 03 | பொறியியலாளர் (கலாநிதி) ஜீ.ஜீ.ஏ. கொடலியத்த<br>பணிப்பாளர் நாயகம்<br>நீர்ப்பாசன திணைக்களம்<br>பணிப்பாளர்<br>(ஜனவரி தொடக்கம் ஜூலை வரையில்) |
| | பொறியியலாளர் (திருமதி) பத்ரா கமலதாஸ<br>பணிப்பாளர் நாயகம்<br>நீர்ப்பாசன திணைக்களம்<br>பணிப்பாளர்<br>(ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் வரையில்) |
| 04 | திரு. கே.எம்.எம். சிரிவர்தன<br>பணிப்பாளர் நாயகம்<br>அரசிறை கொள்கை திணைக்களம்<br>பணிப்பாளர் |
| 05 | பொறியியலாளர் எம்.ஏ.பி.ஹேமசந்திர<br>செயற்பாட்டு பணிப்பாளர்<br>மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம்<br>பணிப்பாளர் |

# சிரே்ஷ்ட முகாமைத்துவம்

| வரிசை எண் | பதவி | பெயர் |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | திரு. காமினி ராஜகருணா |
| 01 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) | பொறியியலாளர் திரு. என்.சி.எம். நவரத்ன |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) | திரு. ரஞ்சித் ஆரியரத்ன |
| 01 | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்பாடுகள் | திரு. சி. வெல்லப்பிலி |
| 02 | பணிப்பாளர் (விவசாயம்) | திரு. எம்.எஸ். தயாரத்ன |
| 03 | பணிப்பாளர் (காணி பயன்பாடு திட்டமிடல்) | திரு. கே. சோமபால |
| 04 | பணிப்பாளர் (முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு | பொறியியலாளர் திரு. எஸ்.எஸ். ஜயவீர |
| 05 | பணிப்பாளர், ( பொறியியல் நிர்மாணம் மற்றும் திட்டமிடல்) | பொறியியலாளர் திருமதி பி. தலகல |
| 06 | பணிப்பாளர் (கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி) | பொறியியலாளர் திரு. கே. ஜி. பெரேரா |
| 07 | பணிப்பாளர் (நீர் முகாமைத்துவ செயலகம்) | பொறியியலாளர் செல்வி பி.கே.டி. சமரதுங்க |
| 08 | பணிப்பாளர் (ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவம்) | பொறியியலாளர் திரு. எச்.எச்.சி. பிரேமகுமார |
| 09 | பணிப்பாளர் (மகாவலி பாதுகாப்புப் படை | மேஜர் திரு. எல்.ஏ.பி. ஜயவர்தன |
| 10 | பணிப்பாளர் (காணி) | திரு. எல்.பி. சமரக்கோன் (17.03.2012 வரை)<br>திரு. எம்.எஸ்.ஏ.எஸ்.குமார (பதில்) (17.03.2012 தொடக்கம்) |
| 11 | பணிப்பாளர் (கால்நடை வளங்கள்) | திரு.எம்.ஏ.ரஞ்சித் (17.03.2012 வரையில்)<br>திரு. எம்.டி. பியதிலக (17.03.2012 தொடக்கம்) |
| 12 | பணிப்பாளர் (நிதி) | திரு. டப்ளியூ.கே.என்.கே.வீரசூரிய |
| 13 | பணிப்பாளர் (வணிக அபிவிருத்தி) | திரு. டப்ளியூ.ஏ.பி.சி. பெரேரா |
| 14 | பணிப்பாளர் (சட்டம்) | திருமதி ஆர்.எல். ராஜபக்ஷ |
| 15 | பணிப்பாளர் (நிறுவன அபிவிருத்தி) | கலாநிதி டி.எம்.எஸ். திசாநாயக்க |
| 16 | பணிப்பாளர் (வன வளங்கள் மற்றும் சுற்றாடல்) | திரு. ஏ.எம்.கே.பி. அத்தநாயக்க |
| 17 | பணிப்பாளர் (தலைமை அலுவலக செயற்பாடுகள்) | திரு. டி.கே.வி. விஜயவீர |
| 18 | பணிப்பாளர் (மகாவலி நிலையம்) | திரு. ரி.எம்.பி. மல்லஹெவ |
| 19 | பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம் | திரு. என்.சி. விதானகே |

| | | |
|---|---|---|
| 01 | கருத்திட்ட பணிப்பாளர் (அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம்) | பொறியியலாளர் திரு. டி. சி. எஸ். எலகந்த |
| 02 | கருத்திட்ட பணிப்பாளர் (மொறகஹகந்தÆகளுகங்க அபிவிருத்தி கருத்திட்டம்) | பொறியியலாளர் திரு. ஆர்.பி. தென்னக்கோன் |
| 03 | கருத்திட்ட பணிப்பாளர் (கருத்திட்டம் டீ- வலயம்) | பொறியியலாளர் திரு. ஜீ.ஜீ. குணபால |
| 01 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (டீ) | திரு. டப்ளியூ.கே. ரஞ்சித் பெரேரா |
| 02 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (ரம்பக்கன்ஓய) | திரு. ஏ.டி.எஸ். இந்திரசேகர (11.12.2012 வரையில்) |
| | | திரு. ஏ.எம்.ஏ.பி.பி. குணவர்தன (12.12.2012 தொடக்கம்) |
| 03 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (ஊ) | பொறியியலாளர் திரு. எச்.எம். ரணசிங்க |
| 04 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (விக்டோரியா) | திரு. டப்ளியூ.எம்.ஆர்.டப்ளியூ. விஜயதுங்க |
| 05 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (ஹுருலுவெவ) | பொறியியலாளர் செல்வி சந்திரா செனரத் |
| 06 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (ர்) | திரு. எம்.எம். அஸங்க குணதிலக (17.03.2012 வரையில்) |
| | | திரு. ஆர்.பி. சிரிசேன (18.03.2012 தொடக்கம்) |
| 07 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (டு) | திரு.ஜீ.ஜீ. தயானந்த |
| 08 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (னு) | திரு. ஐ.எம்.யூ.கே.குமார |
| 09 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (பு) | திரு. எச்.எம்.கே.ஆர். ஹேரத் |
| 10 | வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (வளவே) | திரு.ஆர்.ஏ.டப்ளியூ. பெரேரா (04.03.2012 வரையில்) |
| | | திரு.எம்.எம். அஸங்க குணதிலக (18. 03. 2012 தொடக்கம்) |

## 2012 ஆம் வருட ஆண்டறிக்கை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு குறிப்பு

இலங்கை மகாவலி அதிகார சபை 1979 ஆம் ஆண்டின் இல. 23 சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மகாவலி பள்ளத்தாக்கு நிலப் பிரதேசங்களின் அபிவிருத்தியை முதன்மையாக கருத்தில் கொண்ட ஒரு பல்நோக்கு அபிவிருத்தித் திட்ட என்ற முறையில் மகாவலி திட்டம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு பாரிய பாத்திரத்தை வகித்து வருகின்றது. ஆரம்ப காலத்தில் ஐந்து பாரிய நீர்த்தேக்கங்களை நிர்மாணித்து, இலங்கையின் உலர் வலய பிரதேசங்களின் செழிப்பு நிலையை எடுத்து வந்து, அரிசியில் சுயதேவைப் பூர்த்தியை எடுத்து வரும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக கொண்டோம். இன்று “மஹிந்த சிந்தனை தூர நோக்கு” கொள்கையின் பிரகாரம் மகாவலி திட்டம் ஒரு புதிய அணுகுமுறைக்கூடாக புதிய இலக்குகளை நோக்கி நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது.

2012 ஆம் வருடத்தின் போது எம்மால் நிறைவேற்றப்பட்ட முக்கியமான பணிகள் மகாவலி நீர்ப்பாசன அமைப்புக்களின் செயல் திறனை மேலுயர்த்தி, ஓர் அலகு நீர் மற்றும் ஓர் அலகு நிலம் என்பவற்றின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதுடன் சம்பந்தப்பட்டவையாகும். இதன் மூலம் ஹெக்டாயார் ஒன்றுக்கான வருடாந்த நீர் நுகர்வு 1·2 மீற்றர் சராசரி அளவில் பராமரிக்கப்பட்டு வந்ததுடன், ஹெக்டயார் ஒன்றுக்கான நெல் உற்பத்தியை 6·5 மெற்றிக் தொன் வரையில் உயர்த்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. வாழைப்பழம், அன்னாசி போன்ற பழ வகைகளின் உற்பத்தி மற்றும் மேலதிக உணவுப் பயிர்களின் உற்பத்தி என்பவற்றை 20மூ ஆல் அதிகரிக்க முடிந்தது. நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் பராமரிப்பு மற்றும் இயக்குதல் ஆகிய பணிகளை விவசாய அமைப்புக்களிடம் ஒப்படைப்பதன் மூலம் அத்தகைய அமைப்புக்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதில் முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது. மேலும், பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் வெளிக்கள குளங்கள் என்பவற்றின் ஆற்றலை அதிகரித்துக் கொள்வதற்கென அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் விசேட தலையீட்டின் பேரில் விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டது. இதன் மூலம் இரண்டு பிரதான நீர்த்தேக்கங்களிலும், 52 சிறு அளவு நீர்த்தேக்கங்களிலும் சேற்றுப் படிவு அகற்றப்பட்டு, அவை புனருத்தாரணம் செய்யப்பட்டன.

மொறகஹகந்தÆகளுகங்க கருத்திட்டத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், காணி நிர்வாகம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகள் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் பிரதான அணையின் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரம்பக்கன்ஓய நீர்த்தேக்கத்தின் ஆற்றின் கீழ் பகுதி அபிவிருத்தி செயற்பாடுகளுக்கென ரூ. 150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் ஒரு உப நகரமும், நான்கு கிராமங்களும் அமைக்கப்பட்டதுடன், அவற்றுக்குத் தேவையான பாதைகள், மின்சார விநியோகம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன. அதனையடுத்து மக்களின் மீள்குடியேற்றம் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தின் கீழ் 2300 விவசாய குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 1½ ஏக்கர் நீர்ப்பாசன காணியையும், ½ ஏக்கர் மேட்டுக் காணியையும் பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துவதற்கென மகாவலி டு வலயத்தில் (வெலிஓயா Æ சம்பத் நுவர) ஒரு விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2900 குடும்பங்களை மீளக் குடியேற்றுவதற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டதுடன், காணிகளும் இனங்காணப்பட்டுள்ளன. ஒரு பிரதான நீர்ப்பாசன திட்டமென்ற முறையில் கிவுல்ஓயா நீர்த்தேக்கத்தை நிர்மானிப்பதற்கான ஆரம்ப வேலைகளும் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் சுமார் 4000 ஏக்கர் அளவில் காணி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இலங்கை கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் நல்லாட்சி தொடர்பான வழிகாட்டுதல்கள் என்பவற்றின் பிரகாரம் நிறுவனத்தின் கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன், நிறுவனத்தின் நிதி ஒழுக்காற்றினை பராமரித்து வரும் பொருட்டு ஒரு விசேட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமும் செயற்படுத்தப்பட்டது. அதே போல மகாவலி அதிகார சபையின் கீழ் செயற்பட்டு வரும் கம்பெனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், கலைக்கப்பட வேண்டிய கம்பெனிகளை கலைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

2006 ஆம் வருடத்தில் அரச துறையில் மேற்கொள்ளப்பட்ட சம்பள மற்றும் ஊழியர் அணி மீள் ஒழுங்கமைப்பின் பிரகாரம், தற்போதைய தேவைகளை கருத்தில் கொண்டு ஊழியர் எண்ணிக்கையை

நிர்ணயிப்பதற்கும், அத்தகைய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும், பதவிகளை வழங்குவதற்குமென ஓர் ஆட்சேர்ப்பு நடைமுறை உருவாக்கப்பட்டமையை இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய பணியாக குறிப்பிட முடியும்.

அக்காணி நிர்வாகத்தை முறைப்படுத்தும் பொருட்டு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக அளிப்புப் பத்திரங்களை வழங்கும் ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டது. இதன் கீழ் கௌரவ நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் அவர்களின் விசேட வழிகாட்டுதலின் கீழ் 63000 காணித் துண்டுகள் அளவை செய்யப்பட்டு, அவை தொடர்பான திட்டங்களை தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 25000 காணித் துண்டுகள் தொடர்பாக வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மகாவலி நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் பொது நிர்வாகம் மற்றும் இயக்குதல், காணி மற்றும் நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளிட்ட பொதுவான பணிகளை நிறைவேற்றி வைத்ததுடன், விசேட கருத்திட்டங்களை திட்டமிடுதல், அமுல் செய்தல், இயக்குதல் என்பவற்றை உள்ளடக்கிய 2012 ஆம் வருடத்திற்கென இதற்கு நிர்ணயிக்கப்பட்ட பௌதீக மற்றும் நிதி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அர்ப்பணிப்புணர்வுடனும், உற்சாகத்துடனும் தமது, கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றி வைத்த மகாவலி அதிகார சபை ஊழியர்கள் அனைவருக்கும், இதற்கென எமக்கு வழிகாட்டுதலை வழங்கிய பணிப்பாளர் சபையினருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது மனமுவந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**காமினி ராஜகருணா**
பணிப்பாளர் நாயகம்
இலங்கை மகாவலி அதிகார சபை

## பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு

இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அறிக்கையை 31.12.2012 திகதியில் நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கின்றோம்.

**வருடம் தொடர்பான மீளாய்வு**

பணிப்பாளர் நாயகம் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மீளாய்வில் 2012 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான விரிவான ஒரு கூற்று உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதே போல நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாத்தல், ஊழல், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் என்பவற்றை கண்டறிதல் மற்றும் இடர்நேர்வுகளை குறைத்துக் கொள்ளல் என்பவற்றை நோக்காகக் கொண்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான ஒரு சிறந்த முகாமைத்துவத்துடன் நிறுவனம் செயற்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் அனைத்து ஊழியர்களும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணிகளை நிறைவேற்றி வைக்கும் விடயத்தில் அவர்கள் காட்டியிருக்கும் அதியுயர் அர்ப்பணிப்புணர்வு தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் என்ற முறையில் எமது நன்றியினை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

காமினி ராஜகருணா
தலைவர்

பொறியியலாளர் திரு. கே. டப்ளியூ. ஐவன் டி சில்வா
பணிப்பாளர்

திரு. கே.எம்.எம். சிரிவர்தன
பணிப்பாளர்

பொறியியலாளர் (கலாநிதி) திரு. ஜீ.ஜீ.ஏ. கொடலியத்த
பணிப்பாளர்
(ஜனவரி தொடக்கம் ஜூலை வரையில்

பொறியியலாளர் திருமதி பத்ரா கமலதாஸ
பணிப்பாளர்
(ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் வரையில்)

பொறியியலாளர் திரு. எம்.ஏ.பி. ஹேமச்சந்திர
பணிப்பாளர்

எனை

## கணக்காய்வு கமிட்டியின் அறிக்கை – 2012

இலங்கை மகாவலி அதிகார சபையின் கணக்காய்வு கமிட்டி பணிப்பாளர் சபையின் நிறைவேற்று தரம் சாராத மூன்று பணிப்பாளர்களை கொண்டு அமைக்கப்பட்டிருப்பதுடன், திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளர் அக்கமிட்டியின் தலைவராக செயற்பட்டு வருகின்றார்.

**<u>வருடத்தின் போது கணக்காய்வு கமிட்டியின் உறுப்பினர்கள்</u>**

- திரு. கே.எம்.எம். சிரிவர்தன — கமிட்டியின் தலைவர்
- கலாநிதி ஜீ.ஜீ.ஏ. கொடலியத்த — உறுப்பினர் (ஜனவரி – ஜூலை 2012)
- பொறியியலாளர் திருமதி பத்ரா கமலதாஸ — உறுப்பினர் (2012 ஆகஸ்ட் தொடக்கம்)
- திரு. எம்.ஏ.பி. ஹேமச்சந்திர — உறுப்பினர்

**<u>கமிட்டி கூட்டங்களில் பங்கேற்பவர்கள்</u>**

- பணிப்பாளர் சபையின் செயலாளர்
- பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)
- பணிப்பாளர் (நிதி)
- பிரதம உள்ளக கணக்காய்வாளர்
- கணக்காய்வாளர் நாயகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வெளி கணக்காய்வாளர் ஒருவர்
- தேவையின் பிரகாரம் அழைக்கப்படும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள்

**<u>கமிட்டியின் பணிகள்</u>**

- ❖ உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறையை கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மீளமைப்புச் செய்தல், வருடாந்த கணக்காய்வு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குதல்.
- ❖ உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை மீளாய்வு செய்தல், பிரச்சினைகளை பரிசீலனை செய்து, நிவர்த்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென நடவடிக்கை எடுத்தல்.
- ❖ 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 142 (இ) உட் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டிருக்கும் விடயங்களை கவனத்தில் எடுத்தல்.
- ❖ நிறுவனத்தின் செயலாற்றுகை அறிக்கைகளை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்து ஒப்பிடுதல்.

**<u>உள்ளக கணக்காய்வு பிரிவு</u>**

2012 ஆம் வருடத்தின் போது கணக்காய்வு கமிட்டியின் ஆலோசனையின் பிரகாரம் ஓர் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், செயல்திறனற்ற நடைமுறைகளை இல்லாதொழித்தல், உள்ளக கட்டுப்பாட்டினை விருத்தி செய்தல், ஊழல் மற்றும் மோசடிகள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களை குறைக்கும் விதத்தில் செயற்படுதல் என்பவற்றுக்கென இப்பிரிவின் மூலம் தொகுதி கணக்காய்வு முறைமையியல் ஒன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**<u>பரிந்துரைகள்</u>**

திறைசேரியின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அதிகார சபையின் கணக்காய்வு கமிட்டியின் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன், டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த நிதியாண்டின் போது கணக்காய்வு கமிட்டி இரு கூட்டங்களை நடத்தியது. அக்கூட்டங்களில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்து வைப்பதற்கென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், கமிட்டியினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், நிறுவனத்தில் நிவர்த்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கடந்த 7 வருடங்களின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

| | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. "000 | ரூ. "000 | ரூ. "000 | ரூ. "000 | ரூ. "000 | ரூ. "000 | ரூ. "000 |
| | | | | | | | |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | | | | | | |
| இயந்திரம், உபகரணம், பொறித்தொகுதி | 3,732,900 | 4,011,792 | 5,325,181 | 5,271,286 | 5,031,173 | 1,210,750 | 1,177,269 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | - | - | 59,848,291 | 72,794,406 | 71,941,143 | 70,566,371 | 66,401,615 |
| இடம்பெற்று வரும் வேலைகள் | 12821 | - | 2,940,429 | 1,940,878 | 1,076,819 | - | - |
| முதலீடுகள் | 137,590 | 135,392 | 124,801 | 134,967 | 145,827 | 125,623 | 69,148 |
| | **3,883,311** | **4,147,184** | **68,238,702** | **80,141,537** | **78,194,962** | **71,902,744** | **67,648,032** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| கையிருப்புக்கள்Æபட்டியல் | 161,801 | 157,725 | 162,219 | 140,686 | 178,128 | 253,016 | 182,643 |
| கிடைக்க வேண்டியவை | 893,430 | 684,392 | 1,129,552 | 1,494,204 | 1,183,988 | 1,028,909 | 2,908,725 |
| முற் கொடுப்பனவுகள் | 1,548 | 19,470 | 4,209 | 1,353 | 312 | 3,639 | 306 |
| வங்கி பிணைப் பத்திரங்கள் | 2,210 | 2,160 | 359 | 503 | - | 302 | - |
| காசு, காசுக்கு இணையானவை | 121,802 | 143,521 | 209,735 | 44,435 | 55,454 | 79,299 | 50,076 |
| நடைமுறைச் சொத்துக்களின் மொத்தம் | 1,180,791 | 1,007,268 | 1,506,074 | 1,681,181 | 1,417,882 | 1,365,165 | 3,141,750 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **5,064,102** | **5,154,452** | **69,744,776** | **81,822,718** | **79,612,844** | **73,267,909** | **70,789,782** |
| | | | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | | | |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | | | | | |
| செலுத்த வேண்டியவை | 472,849 | 364,983 | 238,803 | 254,085 | 259,194 | 2,412,322 | 643,023 |
| திரண்ட செலவுகள் | 61,525 | 47,494 | 39,385 | 70,231 | 64,707 | 57,414 | 51,177 |
| நடைமுறை பொறுப்புக்கள் மொத்தம் | 534,374 | 412,477 | 278,188 | 324,316 | 323,901 | 2,469,736 | 694,200 |
| பணிக்கொடைக்கென ஒதுக்கிய தொகை | 1,077,205 | 1,022,674 | 1,071,471 | 1,091,555 | 988,026 | 927,275 | 729,399 |
| கடன்கள் | 612 | 612 | 1,142 | 370 | 8,100 | - | - |
| குத்தகைகள் | 9,269 | | | | | | |
| நடைமுறையல்லாத பொறுப்புக்களின் மொத்தம் | 1,087,086 | 1,023,286 | 1,072,613 | 1,091,925 | 996,126 | 927,275 | 729,399 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **1,621,460** | **1,435,763** | **1,350,801** | **1,416,241** | **1,320,027** | **3,397,011** | **1,423,599** |
| | | | | | | | |
| **தேசிய சொத்துக்கள்Æமதிப்பு** | | | | | | | |
| திரண்ட நிதியம் | 22,870,420 | 23,009,463 | 87,422,561 | 98,404,890 | 96,161,823 | 92,650,767 | 89,501,788 |
| வருமான ஒதுக்கு | 53,560 | 53,560 | 65,731 | 59,904 | 10,990 | - | - |
| மீள் கணிப்பீடு | 3,061,097 | 3,061,146 | - | 3,119,639 | 3,340,644 | 3,238,397 | - |
| | | | | | | | |
| மேÆகொ வருமான – செலவு நிலுவை | (22,542,434) | (22,405,480) | (22,213,956) | (21,709,177) | (21,273,471) | (20,900,053) | 21,743,787) |
| மொத்த தேறிய சொத்துக்கள்Æமதிப்பு | **3,442,643** | **3,718,689** | **65,274,336** | **79,875,256** | **78,239,986** | **74,989,111** | **67,758,001** |

# இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பெனிகளின்

## பணிப்பாளர் சபை – 2012

| வரிசை எண் | கம்பெனி | தலைவர் | பணிப்பாளர் சபை | தலைமை அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 01 | வÆப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பெனி | | திரு. எம்.டி. பியதிலக<br>திரு.எட்வர்ட் டி மெல்<br>திரு நிமல் மஹவத்த<br>திரு ஒஸ்மன் டி சில்வா | இல. 260Æ20, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 |
| 02 | வÆப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி | டாக்டர் ஹர்' சமரவீர | திரு. டி.சி.எஸ். எலகந்த<br>திரு. காமினி விஜயநாயக | இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05 |
| 03 | மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் கம்பெனி | | திரு. எம். விஜிதசேன<br>திரு. ரத்னசிரிவேரகல | இல. 96, மகவலி நிலைய கட்டடம், ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 |
| 04 | இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி | திரு. கே. டப்ளியூ. என். சி. கருணாரத்ன | திரு. ஆ.மு.டீ அத்தநாயக்க<br>திரு. டீ.று.ஆ செனவிரத்ன | அணைக்கட்டு பிரதேசம் பொல்கொல்ல |
| 05 | மகாவலி பொறியியல் சேவைகள் கம்பெனி | | திரு. நி'ாந்த பியசேன<br>திரு.என்.எம். அபேரத்ன | இல. 100, கல்தேமுல்ல வீதி, ரத்மலானை |

# நிர்வாக அறிக்கை

## பாகம் I

# முதலாவது அத்தியாயம்

## இலங்கை மகாவலி அதிகார சபையின் ஸ்தாபிதம், அதன் உள்ளடக்கம் மற்றும் கருமங்கள்

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், அச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் அல்லது ஒரு விசேட பிரதேசம் தொடர்பாக அதிகார சபையின் கருமங்கள் பின்வரும் விதத்தில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளன:

(அ) நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் என்பவற்றை நிர்மாணித்து இயக்குதல் மற்றும் மின்சார விநியோகம், மின்சார வழங்குதல் என்பவற்றுக்கான இயந்திர உபகரணங்களை நிறுவுதல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் மகாவலி கங்கை அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் அமுல் செய்தல்.

எவ்வாறிருப்பினும், மின்சார விநியோகம் தொடர்பான கடமைகள், வேறேதேனும் எழுத்து மூலமான ஒரு சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அதிகாரத்தை பெற்றிருக்கும் வேறேனும் ஓர் அதிகார சபையினாலும் மேற்கொள்ளப்பட முடியும்.

(ஆ) முழுமையான ஒருங்கிணைந்த அபிவிருத்தியை போஷித்து வளர்த்தல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்க வைத்துக் கொள்ளல்.

(இ) விவசாயத் துறையின் உற்பத்தித்திறன் மற்றும் வேலை வாய்ப்பு ஆற்றல் என்பவற்றை உயர் மட்டத்தில் நிலை நிறுத்துதல். அத்துடன், விவசாய பொருளாதார அபிவிருத்தியை எடுத்து வருதல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(ஈ) பௌதீகச் சூழலை பாதுகாத்தல் மற்றும் பராமரித்து வருதல்.

(உ) பொதுமக்களின் நலனோம்பல் மற்றும் கலாசார முன்னேற்றம் என்பவற்றை விருத்தி செய்தல் மற்றும் நிர்வகித்தல்.

(ஊ) விவசாய அபிவிருத்தியில் உள் மற்றும் வெளியார் மூலதனத்தை பயன்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(எ) மகாவலி அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல் செய்வதிலும் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்;ராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், தனியார் அல்லது வேறு எவரேனும் நபர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

## 1.0 இலங்கை மகாவலி அதிகார சபையின் கருமங்கள்

பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒவ்வொரு விடயப் பரப்பின் கீழும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கருத்திட்டங்கள் மற்றும் கள அலுவலகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் பிரகாரம், பின்வரும் கருமங்களை இலங்கை மகாவலி அதிகார சபை நிறைவேற்றியுள்ளது:

- ❖ தொகுதி திட்டம் மற்றும் வருடாந்த செயல் திட்டம் என்பவற்றின் பிரகாரம் நிறுவனத்தின் முன்னேற்றத்தை மாதாந்த அடிப்படையில் மீளாய்வு செய்து, தேவையான தலையீடுகளின் மூலம் குறிப்பிட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளல்.

- ❖ சொத்துக்களை பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான உரிய திட்டமொன்றின் பிரகாரம் செயற்படுவதன் மூலம் சொத்துக்களை கையுதிர்த்தல்.

- ❖ கால அட்டவணையின் பிரகாரம் மொறகஹகந்த - களுகங்க நீர்த்தேக்கம் மற்றும் கிவுல்ஓய நீர்த்தேக்கம் என்பவற்றை நிர்மாணித்தல்.

- ❖ வலயம் டீ வலது கரை மற்றும் வலயம் டு என்பவற்றின் நீர்ப்பாசனத்தை பெற்றுக் கொள்ளும் நிலப்பரப்பினை அதிகரித்துக் கொள்வதற்கென பிரதேசங்களை இனங்கண்டு, ஆரம்ப சுற்றாடல் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

- ❖ உப உணவுப் பயிர்களின் உற்பத்தியை 30மூ வரையில் அதிகரிக்கும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்ட களப் பயிர்களின் சாகுபடி தொடர்பாக விவசாயிகளை ஊக்குவித்தலும், சந்தைப்படுத்தல் பிரச்சினைகளை தீர்த்து வைத்தலும்.

- ❖ நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் பராமரிப்பு, முகாமைத்துவம் என்பவற்றை விவசாயிகள் அமைப்புக்களிடம் ஒப்படைக்கக் கூடிய விதத்தில் விவசாயிகள் அமைப்புக்களை பலப்படுத்துவதற்கென உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகள் ஆகியோருக்கு வலுவூட்டுதல்.

- ❖ அனைத்து மட்டங்களையும் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஆற்றல் மற்றும் அபிவிருத்திக்கென செயல்படுதல்É ஊழியர்கள் தொடர்பான தகவல்களை கணினியில் உட்படுத்துதல் மற்றும் ந மனிதவள முகாமைத்துவ தொகுதியொன்றை அறிமுகம் செய்து வைத்தல்.

- ❖ அமைச்சின் ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடி சாகுபடி பருவ செயற்பாட்டு திட்டமொன்றை தயாரித்து, நீர்ப்பாசனம், குடியிருப்புக்கள், நீர் மின் வலு உற்பத்தி, வீடுகளுக்கான மின்சார விநியோகம் மற்றும் வீடுகளுக்கான நீர் விநியோகம் என்பவற்றுக்கென பிரதான நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை ஒதுக்குதல்.

- ❖ வலயங்கள் டீ.ஊ.ர்.டு.னு , மொறகஹகந்த, ஹுருலுவெவ, வளவே, விக்டோரியா மற்றும் ஒரு புதிய வலயமாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் ரம்பக்கன்ஓய ஆகிய கருத்திட்டங்களில் பயிர் பன்முகப்படுத்தல், சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- ❖ நீர் முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, கால்நடை வள அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மண் மற்றும் நீர் பாதுகாப்பு, நீர் நிலைகள் முகாமைத்துவம், சுற்றாடல் மாசடைதல் மற்றும் நீர் மாசடைதல் தொடர்பாக சமூகத்திற்கு அறிவூட்டுதல்

❖ முதன்மை நீர்த்தேக்கங்களின் திசைத் திருப்பல் அளவுகளை பாதுகாப்பான விதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பயனுள்ள செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், அமுல் செய்தல் மற்றும் விவசாய அமைப்புக்களுக்கு அது தொடர்பாக அறிவூட்டுதல்.

## 1.1 இலங்கை மகாவலி அதிகார சபையின் பொதுவான நிர்வாக கட்டமைப்பு



## 1.2 மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிர்வாகம்

மகாவலி கங்கை பள்ளத்தாக்கு அபிவிருத்தி பெருந்திட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கும் குடியிருப்புக்களின் நிர்வாகம், நீர்ப்பாசன கட்டமைப்புக்களை இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் என்பவற்றிற்கென மகாவலி பிரதேசம் 10 நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மகாவலி பள்ளத்தாக்குக்கு அருகில் டீஇஊஇனுஇர்இ மொறகஹகந்த, விக்டோரியா, ஹுருலுவெவ ஆகிய வலயங்களும், உடவளவே, வெலிஓயா டு மற்றும் ரம்பக்கன்ஓயா போன்ற விசேட வலயங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

மகாவலி வலயங்கள் மற்றும் விசேட பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ கருமங்கள் வதிவிட கருத்திட்ட முகாமையாளர்களின் அதிகாரங்களின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் நேரடியாக பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு பொறுப்புக் கூறுவதுடன், பிரதிப் பணிப்பாளர் நாயகங்களின் கண்காணிப்பின் கீழ் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கென தலைமை அலுவலகத்தில் ஒவ்வொரு விடயப் பரப்பு தொடர்பாக நியமனம் செய்யப்பட்டிருக்கும் பணிப்பாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கின்றது.

அதே போல வதிவிட கருத்திட்ட முகாமையாளர் ஒவ்வொரு வலயத்திலும் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருந்து வருவதுடன், தொழில்நுட்பம், காணி, விவசாயம் மற்றும் அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கான கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சில அலகுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு பிரிவு முகாமையாளர் அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பதுடன், அந்த அலுவலகத்தில் ஒவ்வொரு விடயப் பரப்பு தொடர்பாக பிரிவு முகாமையாளர்கள் நேரடியாக கண்காணிப்பின் கீழ் ஒரு நீர்ப்பாசன பொறியியலாளர், நிர்வக அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர் மற்றும் காணி உத்தியோகத்தர் ஆகியோர் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் அனைத்து விடயப் பரப்புக்கள் தொடர்பாகவும் கடமைகளை நிறைவேற்றி வைப்பதற்கென ஒவ்வொரு அலகுக்கும் ஒரு முகாமையாளர் வீதம் அமர்த்தப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஒவ்வொரு அலகிலும் காணிகளை பெற்றுக் கொண்டவர்கள் சுமார் 250 – 300 அளவில் குடியமர்த்தப்படுகின்றனர்.

மகாவலி வலயங்களில் காணி நிர்வாகம், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் அரச காணிகள் கட்டளைச் சட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் காணிக் கொள்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அபிவிருத்தி செயற்பாடுகளுக்கென அரச காணிகளை பகிர்ந்தளிப்பது தொடக்கம் அளிப்புப் பத்திரங்களை வழங்குவது வரையிலான அனைத்துச் செயற்பாடுகளும், அதே போல காணிகள் பகிர்ந்தளிப்புக்கு பின்னரான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, வர்த்தக மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்கென காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளும், ஆரம்ப குடியேற்றவாசிகளுக்கு மேலதிகமாக இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறையினருக்கு காணிகளை பகிர்ந்தளிப்பதும் வலய அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதே போல நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம், நிறுவன அபிவிருத்தியின் மூலம் நீர்ப்பாசன கட்டமைப்புக்களை பராமரித்தல், முகாமைத்துவம் மற்றும் விருத்தி செய்தல் என்பனவும் இடம்பெறுகின்றன. விவசாய அபிவிருத்தியின் கீழ் விதை உற்பத்தி, பண்ணை அபிவிருத்தி, பயிற்சி மற்றும் மாதிரிப் பண்ணைகளை செயற்படுத்துதல், கால்நடை வளங்கள், கடற்றொழில் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் செயற்பாடுகள், கருத்திட்ட அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர அளவு கடன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல், விவசாய வர்த்தக தொழில் முயற்சிகளை நெறிப்படுத்துதல், விவசாய கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்துதல் என்பனவும் வலயங்களின் நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தேசப் படம் இல. 01 – மகாவலி அபிவிருத்தி திட்டம் மற்றும் விசேட அதிகார பிரதேசங்கள்



### அட்டவணை 01 – வலயங்கள் தொடர்பான தகவல்கள்

| | டீ | ஊ | னு | மொறகஹகந்த | ர் | டு | வளவே | விக்டோரியா | ஹுருலுவெவ | ரம்பக்கன் ஓய |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிர்வாக மாவட்டம் | பொÆனறுவ மட்டக்களப்பு | அம்பாற பொÆனறுவ பதுளை | பொÆனறுவ திருகோணமலை | பொÆ னறுவ மாத்தளை | அநுÆ புரம்குருநாகல் | வவுனியாÆமுல்லைதீவுÆஅநுÆ புரம்Æதிருமலை | அம்பாந்தோட்டைÆமொனரகாலÆஇரத்தினபுரி | கண்டிÆ நுவரெலியா | அநுÆபுரம்Æ மாத்தளை | அம்பாறÆ பதுளை |
| பிரிவுகள் எண்ணிக்கை | 8 | 7 | 2 | 4 | 7 | 2 | 6 | 2 | 5 | 3 |
| அலகுகள் எண்ணிக்கை | 48 | 31 | 6 | 17 | 25 | 9 | 36 | 2 | 12 | |
| விவசாய அமைப்புக்கள் | 133 | 196 | 15 | 42 | 223 | | 283 | | 138 | 5 |
| நிலப்பரப்பு (ஹெக்) | 75441.5 | 52614 | 90370 | 11913 | 44982 | 199207 | 64530 | 10386 | 32500 | 136558 |

### அட்டவணை 02 – 2012 ஆம் வருடம் தொடர்பாக நிதி ஒதுக்கீடு

| வலயம் | ஒதுக்கிய தொகை (ரூ.மில்) | | கிடைத்த தொகை (ரூ.மில்) | | மொத்தச் செலவு | |
|---|---|---|---|---|---|---|
| | மூலதனம் | மீள வரும் செலவு | மூலதனம் | மீள வரும் செலவு | மூலதனம் | மீள வரும் செலவு |
| டீ | 210.0 | 69.0 | 59.2 | 186.75 | 57.881 | 185.467 |
| ஊ | 80.0 | 185.0 | 66.5 | 181.35 | 71.229 | 183.787 |
| னு | 157.2 | 150.0 | 131.9 | 146.0 | 147.991 | 140.984 |
| பு – (மொறகஹகந்த) | 98.76 | 44.0 | 49.65 | 45.75 | 52.946 | 35.859 |
| ர் | 20.0 | 25.0 | 21.10 | 33.150 | 16.006 | 31.126 |
| டு | 77.0 | 185.0 | 61.0 | 178.8 | 58.274 | 166.099 |
| வளவே | 16.9 | 28.0 | 8.15 | 36.3 | 12.421 | 34.649 |
| விக்டோரியா | 22.0 | 44.0 | 22.20 | 44.45 | 21.079 | 43.003 |
| ஹுருலுவெவ | 30.0 | 65.0 | 25.9 | 49.75 | 25.365 | 45.805 |
| ரம்பக்கன்ஓயா | 30.0 | 26.0 | 26.3 | 29.0 | 20.954 | 30.976 |

அட்டவணை 3 – வலயங்களில் உள்கட்டமைப்பு வசதிகள்

| <u>**உள்கட்டமைப்பு வசதிகள்**</u> | டீ | ஊ | னு | மொறகஹ கந்த | ர் | டு | வளவே | விக்டோரியா | ஹூருலு வெவ | ரம்பக்கன் ஓய |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலைகள் | 84 | 107 | | 26 | 87 | 5 | 71 | | | |
| கிணறுகள் | 8477 | 19635 | | 3613 | 19234 | 520 | 9233 | | | |
| கழிப்பறைகள் | 28030 | 40112 | | 9004 | 41446 | 2526 | 49570 | | | |
| வீடுகள் | 28030 | 38742 | | 8803 | 41044 | 2623 | 48907 | | | |
| | | | | | | | | | | |
| <u>**நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள்**</u> | | | | | | | | | | |
| பிரதான கால்வாய் கி.மி. | 76 | 29 | | | 102 | | 112 | | 48 | |
| கிளைக் கால்வாய் கி.மி | 72 | 125 | | 5 | 87 | | 146 | | 11 | |
| விநியோக கால்வாய் கி.மி | 649 | 559 | | 90 | 493 | 155 | 510 | | 133 | |
| வயல் கால்வாய் கி.மி | 1719 | 1337 | | 293 | 1277 | 65 | 1625 | | 331 | |
| | | | | | | | | | | |
| <u>**பாதைகள்**</u> | | | | | | | | | | |
| தரம் டீ கி.மி. | 57 | 125 | | 35 | 63 | 157 | 46 | 11 | 92 | |
| தரம் ஊ கி.மி. | 66 | 96 | | 60 | 153 | 105 | 102 | 5 | 159 | |
| தரம் னு கி.மி. | 589 | 639 | | 170 | 30 | 60 | 595 | 1 | 93 | |
| கிராமிய கி.மி | 22 | 67 | | 8 | | | 31 | 70 | | |
| | | | | | | | | | | |
| <u>**குடியேற்றம்**</u> | | | | | | | | | | |
| மேட்டு நிலம் | 7420 | 10828 | | 1343 | 8555 | 2578 | 24424 | | 2971 | |
| நீர்ப்பாசன நிலம் | 21269 | 21138 | | 4751 | 19656 | 1910 | 23088 | | 5212 | |
| ரணவிரு போன்ற ஏனையவை | 250 | 527 | | 57 | | | | | | |

## 1.3 பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாக நிர்வகிக்கப்பட்டு வரும் பிரிவுகள்

- தலைமை அலுவலக செயற்பாடுகள் பிரிவு
- திட்டமிடல் மற்றும் செயற்பாடுகள் பிரிவு
- உள்ளக கணக்காய்வு பிரிவு

### 1.3.1 தலைமை அலுவலக செயற்பாடுகள் பிரிவு

- நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகள், கருத்திட்டங்கள் மற்றும் விசேட செயற்பாடுகள் என்பவற்றை பணிப்பாளர் நாயகத்துடன் இணைந்து ஒருங்கிணைத்தல்
- இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடத்துதல், அதன் பணிகள் தொடர்பான சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- நிறுவனத்திற்கு கிடைக்கும் தபால்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு, முகாமைத்துவம் மற்றும் தொடர் நடவடிக்கை.
- பணிப்பாளர் நாயகத்தினால் நடத்தப்படும் அனைத்து உள் மற்றும் வெளி கூட்டங்கள், மாநாடுகள் என்பவற்றை திட்டமிடுதல் மற்றும் நடத்துதல்.
- வலய, தேசிய, சர்வதேச மாநாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நெறிப்படுத்துதல்
- வெளிநாட்டு உதவிக் குழுவினர் மற்றும் தூதுக் குழுவினர் ஆகியோர் இங்கு வருகை தரும் பொழுது அது தொடர்பான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டு புலமைப் பரிசில்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றுக்கு பெயர்களை சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- இலங்கை மகாவலி அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக பாரளுமன்றம், ஜனாதிபதி அலுவலகம், நிதியமைச்சு என்பவற்றை உள்ளிட்ட ஏனைய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- அமைச்சரவை பத்திரங்கள், வரைவுகள் என்பவற்றை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சரவையின் ஒப்புதலின் பிரகாரம் செயற்படுதல்.
- திணைக்கள பொருள் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பிராந்திய மற்றும் கருத்திட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் முடிவுகளை உறுதிப்படுத்தல்.
- நிறைவேற்று முகாமைத்துவ கமிட்டிக் கூட்டங்களை ஒருங்கிணைத்தல், ஆவணப்படுத்தல் மற்றும் முடிவுகளை தெரியப்படுத்துதல்.
- கணக்காய்வு முகாமைத்துவ கமிட்டிக் கூட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் ஆவணப்படுத்தல்.
- விசேட கருத்திட்டங்களை அமுல் செய்யும் அலகு ரீஜருரு தொடர்பான ஒருங்கிணைப்பு, முடிவுகளை சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு தெரிவித்தல்.

### 1.3.2 திட்டமிடல் மற்றும் இயக்குதல் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிகள் தொடர்பான தகவல்களின் பாய்ச்சலுக்கு வசதி செய்து கொடுக்கும் நோக்கத்துடன், திட்டமிடல் மற்றும் இயக்குதல் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பாரிய அளவிலான திட்டமிடல் மற்றும் புள்ளிவிபர தரவுகளை வழங்கும் சேவைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம், இப்பிரிவின் மூலம் பின்வரும் கருமங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

- நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணி என்பவற்றின் பிரகாரம் தொகுதி திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் வருடாந்த திட்டத்தின் பிரகாரம் செயற்படுதல்.
- விசேட கருத்திட்டங்கள் தொடர்பான அறிக்கைளை தயாரித்தல்.
- சமூக, பொருளாதார மதிப்பீட்டாய்வுகள் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றை மேற்கொள்ளல்
- செயல் திட்டம் மற்றும் கருத்திட்ட அறிக்கைகள் என்பவற்றின் முன்னேற்றத்தை மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்தல், கருத்திட்ட மதிப்பீட்டை ஒருங்கிணைத்தல் மற்றும் இயக்குதல்.
- தொழில்நுட்ப அறிக்கைகள், சாத்தியப்பாட்டு அறிக்கைகள், இயக்குதல் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பவற்றை பாதுகாத்து வைத்தல் மற்றும் உபயோகத்திற்கு வழங்குதல்.
- மகாவலி கணினி வலையமைப்பை நெறிப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- உத்தியோகப்பூர்வ இணையதளத்தை ஸ்தாபித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
- பாதிக்கப்படும் துறைகள் தொடர்பான ஆய்வுகளை ஒருங்கிணைத்தல்.

#### 1.3.2.1 திட்டமிடுதல் மற்றும் இயக்குதல் பிரிவு வருடத்தின் போது மேற்கொண்ட விசேட செயற்பாடுகள்

- உள்நாட்டு நிதிப்படுத்தல் கருத்திட்டங்கள் 9, வெளிநாட்டு நிதிப்படுத்தல் கருத்திட்டங்கள் 7 என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் பிரதேசங்கள் 10 ஐ உள்ளடக்கிய விதத்தில் வருடாந்த செயல் திட்டமொன்றை தயாரித்தமை.
- 2012 – 2014 காலப் பிரிவு தொடர்பான மீள வரும் செலவுகளை தயாரித்தமை.
- வருடாந்த கொள்வனவுத் திட்டத்ததை தயாரித்தமை.
- மகாவலி அபிவிருத்தி பணிகளின் கீழ் பிரதேசங்கள் தொடர்பான இரு எண்ணக் கரு பத்திரங்கள் இரண்டை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பித்தமை.
- வெளிக்கள அலுவலகங்களிலிருந்து கிடைத்த தகவல் அறிக்கைகள் 7 மற்றும் விசேட முன்னேற்ற அறிக்கைகள் 7 என்பவற்றை தயாரித்தல்.
- தேசிய அறுவடை ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்தியமை.

➢ தற்போதைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவை உரிய விதத்தில் மதிப்பீடு செய்யும் பொருட்டு பல்வேறு மென்பொருட்களை பயன்படுத்தியமை.

➢ மகாவலி வலையமைப்பின் ஒருங்கிணைப்பு மற்றும் இற்றைப்படுத்தல்.

➢ இலங்கை மகாவலி அதிகார சபையின் தகவல் தரவுகளை உள்ளடக்கிய தொகுப்புக்களைக் கொண்ட நூல்நிலையமொன்றை பராமரித்தல்.

➢ தேசத்திற்கு மகுடம், கண்காட்சி மற்றும் தேசிய விவசாய வார கண்காட்சி என்பவற்றுக்கு பங்களிப்பு வழங்கியமை.

**1.3.3 உள்ளக கணக்காய்வு பிரிவு**

இலங்கை கணக்காய்வு தர நியமங்கள், நல்லாட்சிக்கான பொதுத் துறை தொழில் முயற்சிகள் (பொதுத் துறை முயற்சி கொள்கை சுற்றறிக்கை "நுனு.∴12), இலங்கை ஜனநாயக சோ'லிச குடியரசின் நிதி ஏற்பாடுகள் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சு, பொது நிதி திணைக்களம் என்பவற்றின் உள்ளக கணக்காய்வு கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், முகாமைத்துவ முடிவுகள் என்பவற்றின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு விடயப் பரப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், இந்தப் பிரிவிற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடம் பின்வரும் பணிகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், அவர் நேரடியாக அந்தப் பணிகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்திற்கு பொறுப்புக் கூறும் அதிகாரியாக இருந்து வருவார்:

❖ தொழில்நுட்ப அல்லது கணக்கியல் பார்வைக்கு அப்பால், முகாமைத்துவ கோணத்திலிருந்து நிறுவனத்தின் செயற்பாட்டு பணிகளை பரீட்சித்துப் பார்த்து, அறிக்கையிடுதல்.

❖ வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றம் மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய காலப் பிரிவிற்குள் எந்த அளவுக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதனை மதிப்பீடு செய்தல்.

❖ வேலைகளின் அமுலாக்கம் தாமதமடைவதற்கு வழிகோலும் பிரச்சினைகள் தொடர்பாக உரிய இடத்திற்கு போய் பரிசீலனைகளை மேற்கொள்ளல்.

❖ செயற்பாட்டு பணிகளை கண்காணிப்பதில் பயன்படுத்தப்பட்டு வரும் கட்டுபாட்டு முறைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

❖ இவ்வருடத்தின் போது 25 வெளிக்கள கணக்காய்வுகள், 4 விசேட பரிசீலனைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக 11 பூர்வாங்க விசாரணைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

# இரண்டாவது அத்தியாயம்

## தொழில்நுட்ப சேவைகள் பிரிவு

(தொழில்நுட்ப சேவைகள்) பிரதிப் பணிப்பாளர் நாயகத்திடம் பின்வரும் கருமங்களை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது:

1. தொகுதி திட்டம்Æ வருடாந்த திட்டம் என்பவற்றின் பிரகாரம், அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு உபாய ரீதியான திட்டங்களை தயாரித்தல்.

2. தொழில்நுட்ப திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களையும், நெறிப்படுத்தலையும் வழங்குதல்.

3. பிரதான அணைக்கட்டுக்கள், நீர் திசை திருப்பும் வழிகள் மற்றும் ஆற்றின் கீழ் பிரதேச நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய பௌதீக வளங்கள் உரிய விதத்தில் பராமரித்து, பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பொருத்தமான ஒரு செயன்முறையை உருவாக்குதல்.

4. நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்புக்க;டாக விவசாய நடவடிக்கைகளுக்கும் ஏனைய சேவைகளுக்கும் அவசியமான நீரை உரிய அளவில், உரிய காலத்தில் வழங்குவதற்கென முறையான திட்டங்களை தயாரித்துக் கொள்ளல்.

5. கருத்திட்டங்களை திட்டமிடுதல், சாத்தியப்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்ளல், நெறிப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை இலக்காகக் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவு செயற்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம், 2012 ஆம் வருடத்தின் போது இந்தப் பிரிவின் மூலம் பின்வரும் கருமங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளன.

### 2.1 கருத்திட்ட திட்டமிடல் மற்றும் அமுலாக்கல்

#### 2.1.1 களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டம்

- ❖ களுகங்கை பிரதான வேலைகளுக்கான கட்டுமான திட்டமிடல் தொடர்பான ஆலோசனை ஒப்பந்தத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுமான வேலைகளுக்கான ஒப்பந்ததாரர்களுக்கு பொருள் கொள்வனவு நடைமுறையை மேற்கொள்ளல்.

- ❖ களுகங்கை வலது மற்றும் இடது கரைகளில் உத்தேசிக்கப்பட்டிருக்கும் குடியேற்றப் பிரதேசங்களில் நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் மற்றும் பாதை வலையமைப்பு என்பவற்றை திட்டமிடுதல் மற்றும் நிர்மாணித்தல்.

- ❖ களுகங்கை பள்ளத்தாக்கு தொடர்பான சமூக உள் கட்டமைப்பு வசதிகளை திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல்.

### 2.1.2 ஆற்றின் கீழ் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகள்

- ❖ இந்தப் பிரிவின் பிரதான கருமங்கள் வருமாறு: மகாவலி அதிகார சபை பிரதேசத்தில் இருக்கும் நிர்ப்பாசன கட்டமைப்புக்களை இயக்குதல், பராமரித்தல், கட்டடங்கள் மற்றும் பணிமனைகளை பராமரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், வீதிகளை புனரமைத்தல் மற்றும் அது தொடர்பான திட்டங்களை தயாரித்தல், மதிப்பீடுகளை தயாரித்தல், கட்டுமான வேலைகளை மேற்கொள்ளல், தரக் கட்டுப்பாடு மற்றும் முன்னேற்ற மீளாய்வு.

- ❖ அதன் பிரகாரம், 2012 ஆம் வருடம் தொடர்பாக திறைசேரியினால் அனைத்து மகாவலி வலயங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன:

**அட்டவணை 04 – வலயங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகைகள் மற்றும் செலவுகள் - 2012**

| வலயம் | 2012 ஆம் வருடம் தொடர்பாக ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மில்) | 2012 இல் செலவிடப்பட்ட தொகை (ரூ. மில்) |
|---|---|---|
| வலயம் டீ | 39.5 | 34.125 |
| வலயம் ஊ | 56.185 | 44.65 |
| வலயம் ர் | 12.6 | 9.4 |
| வலயம் னு | 2.92 | 1.612 |
| வலயம் பு | 117.2 | 99.356 |
| வலயம் டு | 30.8 | 20.655 |
| வளவை வலயம் | 40.0 | 21.941 |
| விக்டோரியா வலயம் | 9.525 | 5.089 |
| ஹுருலுவெவ வலயம் | 21.7 | 15.468 |
| ரம்பக்கன்ஓய வலயம் | 26.1 | 9.744 |
| முதன்மை வேலைகள் நிர்வாக மற்றும் இயக்குதல் பிரிவு | 206.0 | 164.0 |
| **மொத்தம்** | **562.5** | **426.0** |

### 2.1.3 சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி கருத்திட்டங்களின் அபிவிருத்தி

- 2012 ஆம் வருடத்தின் போது பின்வரும் நிறுவனங்கள் நீர் மின் உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கென பங்களிப்பை செய்திருந்தன:

1. ஈ பவர் (தனியார்) கம்பெனி - மாதுரு ஓயா (மெ.வா. 2.0)
2. கென்ட ஹைட்ரோ ப்ரொஸெஸர் (தனியார்) கம்பெனி - லெனதொர (மெ.வா. 1.40)
3. எனர்ஜி ஜெனரேட்டர் (தனியார்) கம்பெனி - ரஜ்ஜம்மன (மெ.வா. 6.0)
4. லோவர் கொத்மலை ஓய (தனியார்) கம்பெனி - கீழ் கொத்மலை (மெ.வா. 4.8)
5. எஸ்கெஸ் பவர் (தனியார்) கம்பெனி - ஓவல (மெ.வா. 2.8)

இது தவிர, கிவுல் ஓயா சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி திட்டத்திற்கான சுற்றாடல் மதிப்பீட்டாய்வு அறிக்கைக்கு ஒப்புதல் கிடைத்திருப்பதுடன், பின்வரும் கருத்திட்டங்கள் தொடர்பாக சுற்றாடல் மதிப்பீட்டாய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன:

1. உக்குவல (மெ.வா. 2.0)
2. சந்திரிக்காவெவ (மெ.வா. 2.0)
3. நாயக்ககும்புர (மெ.வா. 2.0)
4. தம்புலு ஓய (மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒப்புதல் கிடைத்துள்ளது)

- பின்வரும் சிறு அளவு நீர் மின் உற்பத்தி கருத்திட்டங்களின் நிர்மாண வேலைகள் முழுமையாக பூர்த்தியடைந்திருப்பதுடன், அவற்றின் மூலம் பின்வரும் விதத்தில் நிறுவனக் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

1. பிரான்போர்ட் (மெ.வா. 2.5) - வருவாய் 13மூ
2. கொலதெனிய (மெ.வா. 1.2) - வருவாய் 6மூ

### 2.1.4 ஆற்றங் கரையோர மற்றும் நீர்த்தேக்க அபிவிருத்தி

**ஆற்றங்கரையோர செயற்பாடுகள்**

- கலா ஓய நீர்த்தேக்கத்தின் கரையோரங்களில் நீரின் தரத்தை முகாமைத்துவம் செய்தல்
- மேல் நீரோட்டம் Æஆற்றங்கரை முகாமைத்துவம்
- பாடசாலை பிள்ளைகளுக்கான விழிப்பூட்டல் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான நீரின் தரத்தை பரீட்சிப்பது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- நீரோட்டம் Æ கால்வாய் கட்டமைப்புக்களில் சிறு குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் என்பவற்றின் அபிவிருத்தி (கலாஓய பள்ளத்தாக்கு)
- நீர் மூலாதாரங்களின் தகவல்களை இற்றைப்படுத்தல் (கலாஓய பள்ளத்தாக்கு)
- கலாவெவ குளத்தில் சேற்றுப் படிவை அகற்றுதல்

**அட்டவணை 05 – 2012 ஆம் வருடத்தின் போது ஒதுக்கப்பட்ட தொகைகள் மற்றும் செலவுகள்**

| வரிசை எண் | விளக்கம் | மதிப்பீடுத் தொகை (ரூ. மில்) | செலவு (ரூ. மில்) |
|---|---|---|---|
| 01 | மூலதனச் செலவு | 38.0 | 35.02 |
| 02 | மீள வரும் செலவு | 20.0 | 19.5 |
| 03 | சேற்றுப் படிவை அகற்றும் செயற்பாடுகள் | 350 | 142.19 |

### 2.1.5 செவனகல புனருத்தாரன கருத்திட்டம்

உடவளவே இடது கரையில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படும் பிரதேசத்தில் 1700 ஹெக்டயார் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசன நீர் வழங்கப்படுவதுடன், 557 ஹெக்டயார் நிலப்பரப்பு நெற்சாகுபடிக்கென விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் நீர்ப்பாசன கட்டமைப்பு நீண்ட காலமாக பராமரிப்பின்றி இருந்த வந்தமையினால் இப்போது சேதமடைந்துள்ளது. விவசாயிகள் அமைப்புக்கள் உரிய விதத்தில் செயற்படாதிருந்து வந்தமையினால் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் முறையான விதத்தில் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலைமையை தவிர்க்கும் பொருட்டு, 2011 ஆம் ஆண்டின் போது, ஒரு விசேட புனருத்தாரன கருத்திட்டமாக செவனகல கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பின்வரும் கால்வாய்களை அபிவிருத்தி செய்வதற்கென திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன:

- நீர் விநியோக கால்வாய் ஊழ 2 (0,000 ம.அ இருந்து 6,098 ம.அ வரை)
- நீர் விநியோக கால்வாய் ஊழ 2 (0,000 ம.அ இருந்து 2,650 ம.அ வரை)
- நீர் விநியோக கால்வாய் ஊழ 2 (0,000 ம.அ இருந்து 0,807 ம.அ வரை)

#### 2.1.5.1 நிதிசார் முன்னேற்றம்

- 2012 ஆம் வருடத்தின போது செவனகல புனருத்தாரன கருத்திட்டத்திற்கென செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1·781 மில்லியனாகும்.

#### 2.1.5.2 ஏனைய செயற்பாடுகள்

- ❖ அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டத்தின் பல்துறை நீர் வளங்கள் முகாமைத்துவ திட்டமிடலின் கீழ் மகாவலி நீர் வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு உதவியமை.
- ❖ டு வலயத்தின் கியுல் ஓயா வலயத்திற்கான கட்டுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டமை.
- ❖ மகாவலி டீ வலயத்தின் மல்வென்ன மற்றும் மகாவெலிதன்ன அலகுகளின் திட்டமிடல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டமை.
- ❖ மகாவலி கங்கையைச் சேர்ந்த ஒரு நீரோட்டத்தில் சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி பொறியொன்றை நிர்மாணிப்பதற்கு உதவியமை.
- ❖ அனைத்து மகாவலி வலயங்களினதும் பராமரிப்புக்குத் தேவைப்படும் பொதுவான கட்டுமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டமை.

## 2.2 முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு

துரிதப்படுத்தப்பட்ட மகாவலி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பாரிய நீர்த்தேக்கங்கள், கால்வாய் தொகுதிகள், அணைக்கட்டுகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட கட்டுமானங்கள் என்பவற்றை இடையறாது இயக்கிச் செல்லக் கூடிய விதத்தில் அவற்றை முகாமைத்துவம் செய்வதற்கென 1985 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு உருவாக்கப்பட்டது.

### 2.2.1 முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவின் மூலம நிர்வகிக்கப்பட்டு வரும் வேலைத் தலங்கள்

| | |
|---|---|
| கொத்மலை | விக்டோரியா |
| பொல்கொல்ல | ரந்தெனிகல |
| மினிப்பே | ரன்தம்பே |
| உல்ஹிட்டிய | மாதுரு ஓயா |
| கண்டலம | தம்புலு ஓயா |

### 2.2.2 முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவின் முதன்மையான செயற்பாடுகள்

யு நிர்வாகம்
ட இயக்குதல்
ஊ பராமரிப்பு

### 2.2.3 இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவின் செயற்பாடுகள்

- நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுக்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த கட்டுமானங்களின் பராமரிப்பை இடையறாது மேற்கொண்டு வருதல்.
- அனைத்து அணைக்கட்டுகளையும் உள்ளடக்கும் விதத்தில் அணைக்கட்டு பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துதல்.
- அணைக்கட்டு கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் அவற்றின் நீண்ட கால செயற்பாடு என்பவற்றை உறுதிப்படுத்தக் கொள்வதற்கென நடவடிக்கை எடுத்தல்.
- அனைத்து அணைக்கட்டுகளும் தொடர்பாக (வெள்ளப் பெருக்கு, மண் சரிவு போன்ற, அவசர நிலைமைகளை எதிர்கொள்ளும் பொருட்டு கட்டமைப்பின் அனைத்து கூறுகளையும் பரிசீலனை செய்து, இற்றைப்படுத்தி, பராமரித்து வருதல்.
- கூறுகள் தொடர்பான தரவுகளை தொடர்ச்சியாக சேகரித்தல்.
- நீரின் தர பராமரிப்புச் செயற்பாடுகள் தொடர்பான வேலைத் திட்டங்களை உரிய விதத்தில் முன்னெடுத்தல்.
- நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கையகப்படுத்திக் கொள்ளல் என்பவற்றை மேற்கொள்ளல்.
- நிறுவனத்திற்குள் பரிசோதனை செயற்பாடுகளை திட்டமிட்ட விதத்தில் மேற்கொள்ளல்

### 2.2.4 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றம்

- நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள் அவற்றுடன் இணைந்த கட்டுமானங்கள் என்பவற்றின் பொதுவான பராமரிப்பை முழுமையாக மேற்கொண்டமை

- அனைத்து அணைக்கட்டுகள் தொடர்பாகவும் திட்டமிடப்பட்டிருந்த பாதுகாப்பான இயக்குதல் செயற்பாடுகள் மற்றும் நிரந்தர பராமரிப்பு செயற்பாடுகள் என்பன பூர்த்தி செய்யப்பட்டமை

- கூறுகளின் மூலம் திரட்டப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்யும் செயற்பாடு திட்டமிடப்பட்ட விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நீரின் தரம் தொடர்பான திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் முழுமையடைந்துள்ளன.

- நீர்த்தேக்க பாதுகாப்பு நடவடிக்கைகள், ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களை மீண்டும் கையகப்படுத்தல் என்பன தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.

- நிறுவன பரிசோதனைகள், முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு அலகுடன் இணைந்திருக்கும் பொறியியலாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டமை

- திகன கிராமத்தின் நிரந்தர பராமரிப்பு நடவடிக்கைகள்

**அட்டவணை 06 – 2012 ஆம் ஆண்டின் நிதி நிலைமை மற்றும் நிதிசார் முன்னேற்றம்**

| விவரம் | ஒப்புதலளிக்கப்பட்ட செலவுத் தொகை (ரூ. மில்) | பூர்த்தி செய்யப்பட்ட வேலைகள் (ரூ. மில்) | கிடைத்த தொகை (ரூ. மில்) | செலவு (ரூ. மில்) |
|---|---|---|---|---|
| மூலதனச் செலவு | 190இ000 | 187இ073 | 156இ700 | 167.073 |
| மீள வரும் செலவு | 219இ600 | - | 202இ950 | 198.751 |

## 2.3 நீர் முகாமைத்துவ செயலகம்

கீழே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நோக்கமாகக் கொண்டு நீர் முகாமைத்துவ செயலகம் உருவாக்கப்பட்டதுடன், அதன் செயற்பாடுகளுக்கான பொறுப்பினை (நீர் முகாமைத்துவ செயலக) பணிப்பாளர் வகித்து வருகின்றார்.

- ❖ அனைத்து மகாவலி நீர்த்தேக்கங்களினதும் நீர் மட்டம் மற்றும் கொள்திறன் என்பன தொடர்பான தகவல் தொகுப்பை பராமரித்து வருதல்.
- ❖ சாகுபடி பருவத்தின் அடிப்படையில் அந்தந்த நீர்த்தேக்கங்களில் நீரின் கொள்ளளவை பகுப்பாய்வு செய்தல்.
- ❖ மகாவலி மற்றும் அதனுடன் இணைந்த நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்த் தொகுதிகள் என்பவற்றுக்குத் தேவையான நீர்ப்பாசன நீர், நீர் மின் உற்பத்தி, குடி நீர் மற்றும் ஏனைய நீர்த் தேவைகள் என்பன தொடர்பாக வாராந்தம் வெளியிடப்பட வேண்டிய நீரின் அளவை தீர்மானித்தல்.
- ❖ நீர் முகாமைத்துவம் தொடர்பான கணினி மொடியூலை இற்றைப்படுத்தி செயற்படுத்துதல்.
- ❖ நீரியல் தரவுகளை பகுப்பாய்வு செய்தல், அதன் மூலம் உருவாக்கப்படும் தகவல் தொகுப்புக்களை பராமரித்து வருதல் மற்றும் அத்தகைய தகவல்களை தேவையான தரப்பினர்களுக்கு பெற்றுக் கொடுத்தல்.
- ❖ ஒவ்வொரு சாகுபடி பருவம் தொடர்பாகவும் நீர்ப்பாசன நீர் விநியோக திட்டமொன்றை தயாரித்தல், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்த் தொகுதிகளுக்கு நீரை வழங்குவது தொடர்பான சாகுபடி பருவ கூட்டங்களை மீளாய்வு செய்தல்.

### 2.3.1 2012 ஆம் வருடம் தொடர்பான மீளாய்வு

- இரு பருவப் பெயர்ச்சி காற்றுகளுக்குமிடையிலான காற்றுக்கள் மற்றும் வட கீழ் பருவப் பெயர்ச்சி காற்று என்பவற்றின் காரணமாக அனைத்து தாழ் நில நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் நடுத்தர மட்டத்தில் அல்லது உயர் மட்டத்தில் நிலவி வந்தன.
- அக்டோபர் மாத நடுப்பகுதி தொடக்கம் டிசம்பர் மாதம் முதலாம் வாரம் வரையிலான காலப் பிரிவின் போது அனைத்து நீர்ப்பாசன கட்டமைப்புக்களிலும் சாகுபடி நிலம் பண்படுத்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.
- மொத்த நிலப்பரப்பில் சுமார் 100மூ அனைத்து நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் மூலமும் நீரை பெற்றுக் கொண்டன.
- இச்சாகுபடி பருவத்தின் போது மகாவலி, களனி, வளவே நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உலர் நிலைமையில் காணப்பட்டது. அதன் காரணமாக, பாரிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உலர் காலப் பிரிவின் போது எதிர்பார்க்கப்படும் மட்டத்திற்கு அண்மிய அளவில் பராமரிக்கப்பட்டு வந்தது. ஆகவே, மொத்த நீர் மின் உற்பத்திக்கு 44மூ பங்களிப்பு மகாவலி நீர் மின் உற்பத்தியிலிருந்து வழங்கப்பட்டது.
- வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை காரணமாக நீர்ப்பாசன கட்டமைப்புக்களுக்கு மேலும் நீரை திசை திருப்ப வேண்டிய தேவை ஏற்படவில்லை.
- போவதென்ன நீர்த்தேக்கத்தின் ஆய்வுப் பணிகள் மற்றும் உக்குவல மின் உற்பத்தி நிலையத்தின் பராமரிப்புச் செயற்பாடுகள் 2011 அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டன.

### 2.3.2 2012 சிறு போகம் (ஏப்ரல் 01 தொடக்கம் செப்டம்பர் 30 வரையில்)

- தென் மேற்கு பருவப் பெயர்ச்சி மழை கிடைக்காமை காரணமாக பொல்கொல்ல அணைக்கட்டிலிருந்து திசை திருப்பப்படும் நீரின் மூலம் நீர்ப்பாசனத்தை பெற்றுக் கொள்ளும் சாகுபடி நிலங்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடன் கண்டலம மற்றும் வலயம் பு என்பவற்றில் சாகுபடியை மேற்கொள்வதில்லை என முடிவு செய்யப்பட்டது.

- நீர் தட்டுப்பாடு காரணமாக, கிரிதலே மற்றும் கலாவெவ போன்ற குளங்களிலிருந்து நீர்ப்பாசன வசதிகளை பெறும் ஒரு சில பிரதேசங்களில் பயிரழிவு ஏற்பட்டது. 2012 சிறுபோகத்தின் போது மினிப்பே வலது கரை, இடது கரை மற்றும் மாதுரு ஓய நீர்த்தேக்கம் என்பவற்றின் கீழ் வரும் சாகுபடி நிலங்களை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு நீர் வழங்கப்பட்டது. அதன் காரணமாக, விக்டோரியா, ரந்தெனிகல நீர்த்தேக்கங்கள் ஒதுக்கு மட்டத்தில் காணப்பட்டன. மினிப்பே வலது கரை, இடது கரை மற்றும் மாதுரு ஓயா, கந்தளாய், அல்லை போன்ற பிரதேசங்களில் நெல் சாகுபடி 100மூ வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், ஏனைய வலயங்களில் சுமார் 20 – 30மூ அளவில் பயிரழிவு இடம்பெற்றது.

- ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது உள்ஹிட்டிய, மாதுரு ஓயா மற்றும் வளவை கருத்திட்ட பிரதேசங்களில் காணப்பட்ட மழை வீழ்ச்சி மற்றும் அதன் பரவல் என்பன சாகுபடி நடவடிக்கைகளுக்கு உசிதமானதாக இருந்து வந்தன.

- 2012 சிறு போகத்தில் நிலவி வந்த கடுமையான வரட்சி காரணமாக மகாவலி, களனி மற்றும் வளவை ஆகிய வலயங்களில் அமைந்திருக்கும் நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள் வெற்று ஒதுக்கு மட்டங்களில் காணப்பட்டன.

- எவ்வாறிருப்பினும், நாட்டின் ஒட்டுமொத்த நீர் மின் உற்பத்தியில் (1014 புறா) 43மூ மகாவலி திட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டது

### 2.3.3 பெரும்போகம் (2012Æ2013)

- வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை காரணமாக டிசம்பர் மாத நடுப் பகுதி அளவில் கிரிதலே மற்றும் மாதுரு ஓய நீர்த்தேக்கங்களை தவிர, ஏனைய அனைத்து நீர்த்தேக்கங்களிலும் நீர் உச்ச மட்டத்தை எட்டியது. விக்டோரியா நீர்த்தேக்கம் உச்ச மட்டத்தையடைந்துடன், மகாவலி, களனி மற்றும் வளவே அமைப்புக்களின் ஏனைய பிரதான நீர்த்தேக்கங்களினதும் நீர் மட்டம் உயர்ந்து வந்தது.

- மாதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்ந்து செல்லும் வரையில் ஷஊ“ வலயத்தில் சாகுபடி நடவடிக்கைகள் டிசம்பர் 10 வரையில் தாமதப்படுத்தப்பட்டன. 2012Æ2013 பெரும்போகத்தை முழுமையாக ஆரம்பிப்பதற்கு உடவளவை நீர்த்தேக்கத்தில் போதிய நீர் இருந்து வரவில்லை. அதன் காரணமாக, வளவை வலது கரை மற்றும் இடது கரை பிரதேசங்களுக்கு நவம்பர் மாதத்தில் நீர்ப்பாசன நீர் வழங்கப்பட்டது. வட கீழ் பருவப்பெயர்ச்சி மழையின் உதவியுடன் ஏனைய அனைத்து வலயங்களிலும் நவம்பர் மாதத்தில் சாகுபடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

## 2.4 காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவு (பௌதீக திட்டமிடல் பிரிவு)

பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு இலங்கை மகாவலி அதிகார சபைக்குள் காணிப் பாவனை மற்றும் திட்டமிடல் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது:

- ❖ மகாவலி பிரதேசங்களில் காணி பயன்பாடு மற்றும் பௌதீக திட்டங்களை தயாரித்தல், புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களில் காணிகளை கையகப்படுத்தல், மீள் குடியேற்றம் குறித்த தேசிய கொள்கையின் பிரகாரம் உத்திகளை திட்டமிடுதல்.

- ❖ புதிய கருத்திட்டங்கள் மற்றும் விசேட கருத்திட்டங்கள் என்பவற்றின் காணிகள் மற்றும் பௌதீக திட்டங்களை தயாரிப்பதற்கென தரவுகள் மற்றும் தகவல்கள் என்பவற்றை திரட்டுதல்.

- ❖ இரண்டாம் நிலை மற்றும் முதன்மை தகவல்களின் அடிப்படையில் பூகோள ரீதியிலான தகவல் அடிப்படையிலான வரைபடங்களை தயாரித்தல், இற்றைப்படுத்துதல்.

- ❖ மகாவலி பிரதேங்களில் குடியிருப்புக்கள் மற்றும் நகரங்கள் என்பவற்றை திட்டமிட்டு நிர்மாணித்தல்.

- ❖ மகாவலி பிரதேசங்களில் குடிசன பரம்பல், விவசாயம், பௌதீக உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய மனிதச் செயற்பாடுகள் என்பன குறித்த தகவல்களை திரட்டுதல் மற்றும் அறிக்கைகளை தயாரித்தல்.

### 2.4.1 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்த மீளாய்வு

#### 2.4.1.1 ரம்பக்கன்ஓய நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம்

- ○ ரம்பக்கன்ஓய வேலைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் கல்வளயாய கிராமத்தின் ஒருங்கிணைந்த கிராம திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், கல்வளயாய கிராமத்தின் அடிப்படைத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.

- ○ பொல்லேபெத்த கிராமத்தின் அடிப்படை ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டது. பொல்லேபெத்த ஒருங்கிணைந்த திட்டம் இப்பொழுது அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

- ○ பொல்லேபெத்த கிராம உத்தியோகத்தர் பிரிவு தொடர்பான காணியுரித்து தொடர்பான மதிப்பீட்டாய்வு பூர்த்தி செய்யப்பட்டதுடன், அந்த மதிப்பீட்டாய்வு தொடர்பான தரவுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது

- ○ மகாஓயா மற்றும் பதியதலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும், கிழக்கு மாகாண அரச நிறுவனங்களிலும் றப்பர் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமான காணிகள் இனங்காணப்பட்டன. பதியதலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் றப்பர் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

- ○ மகாஓயா நகர மத்தியில் சமூக, பொருளாதார மதிப்பீட்டாய்வு 2012 ஆம் வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்டதுடன், நகர அபிவிருத்தி திட்டம் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- ○ பதியதலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் இரு நகரங்களில் சமூக, பொருளாதார மதிப்பீட்டாய்வு நடத்தப்பட்டதுடன், சிறிய குளங்களின் கீழ் றுழசடன ஏளைழை அமைப்பினால் விவசாய நிலங்கள் பண்படுத்தப்பட்டன.

### 2.4.1.2 மொறகஹகந்த – களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம்

- குருவெல கிராமத்தின் அடிப்படைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதுடன், கரதமுல்ல, ராவணகம, குருவெல மற்றும் கல்கொடவெல கிராமங்களில் குடியேறுபவர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- முன்னுரிமையின் அடிப்படையில் தலாகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவர்களை மீளக் குடியேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்தக் குடும்பங்களை மீளக் குடியேற்றும் பொருட்டு தோரப்பிட்டிய கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டது. அதே வேளையில், தோரப்பிட்டிய கிராமத்திற்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டமொன்றும், தோரப்பிட்டிய கிராமத்தின் அடிப்படை திட்டமும் பூர்த்தி செய்யப்பட்டன.

- பொலிஸ் நிலைய கட்டடம் மற்றும் லக்கல நகரத்தின் பாரிய கூட்டுறவு கட்டடம் என்பவற்றுக்கான திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- குருவல கிராமத்திலும், தோரப்பிட்டிய கிராமத்திலும் அமைக்கப்படவுள்ள உப அஞ்சல் அலுவலகம், கிராமோதய வைத்திய நிலையம் மற்றும் சிறு அளவிலான கூட்டுறவு கட்டடம் என்பவற்றுக்கான கட்டட வரைப்படங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- களுகங்கை மீள் குடியேற்றப் பிரதேசத்திலிருந்து 2012 ஆம் வருடத்தின் போது பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அப்பிரதேசங்களில் சொத்துக்களை இழந்திருக்கும் குடும்பங்கள் தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கிய விதத்தில் அழிவுற்ற சொத்துக்கள் குறித்த தகவல்களை பெற்றுக் கொள்ள முடிந்தது.

- கவுடுல்ல இடது கரை மீள் குடியேற்ற பிரதேசத்தில் பண்டாரவெவ கிராமம் மற்றும் தஹம்வெவ கிராமம் என்பவற்றுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன் பிரகாரம், பிஸோபுர பிரதேசத்தின் அடிப்படை திட்டம் மற்றும் பண்டாரவெவ கிராமத்தின் அடிப்படை திட்டம் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பான மீள் குடியேற்றங்களை செயற்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.4.1.3 ஷடு“ வலயத்திற்கான அபிவிருத்தி திட்டம்

மகாவலி பெருந்திட்டத்தின் ஷடு“ வலயத்தைச் சேரந்த ஒரு பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட்டது. வடக்கின் வசந்தம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் 10000 குடும்பங்களை டு வலயத்தில் மீளக் குடியேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தொகுதி அபிவிருத்தி அடிப்படையில் ஒரு அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு, அது இப்பொழுது அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

### 2.4.1.4 அல்லை கந்தளாய் அபிவிருத்தி திட்டம்

அல்லை கந்தளாய் கருத்திட்ட பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு சூரியபுர பிரதேசத்தின் அடிப்படை திட்டத்தை தயாரிப்பதற்கு அல்லை கந்தளாய் கருத்திட்ட பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

## 2.5 சுற்றாடல் மற்றும் வன வளப் பாதுகாப்பு பிரிவு

- ❖ நிறுவனத்தினால் (வன வளம் மற்றும் சுற்றாடல்) பணிப்பாளரிடம் பின்வரும் கருமங்களுக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது: முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளின் போதும் அது தொடர்பான சுற்றாடல் கொள்கையை தயாரிப்பதற்கென உதவுதல் மற்றும் அது தொடர்பான முகாமைத்துவ பாதுகாப்புத் திட்டங்களை தயாரித்தல்.

- ❖ அபிவிருத்தி கருத்திட்டங்களின் அனைத்து விதமான சுற்றாடல் தாக்கங்களையும் மதிப்பீடு செய்தல், அமுலாக்கலின் பின்னர் கண்காணிப்பை மேற்கொள்ளல் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு.

- ❖ சுற்றாடல் மற்றும் வன வளப் பாதுகாப்பு முகாமைத்துவ செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு, திட்டங்களின் தயாரிப்பு, தொடர் கண்காணிப்பு மற்றும் இதற்கு தேவையான வழிகாட்டுதல்களை தயாரித்தல்.

- ❖ சம்பந்தப்பட்ட துறைகளில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை அபிவிருத்தி செய்வதற்கென நடவடிக்கை எடுத்தல்.

- ❖ இலங்கை மகாவலி அதிகார சபை பிரதேசங்களில் காணப்படும் இயற்கை வளங்கள் தொடர்பான தரவுகளை சேகரித்தல் மற்றும் முகாமைத்துவம்.

**அட்டவணை 07 - இயற்கை வளங்களின் பாதுகாப்பு**

| செயற்பாடு | பௌதீக | | |
|---|---|---|---|
| | அலகு | இலக்கு | முன்னேற்றம் |
| உயிரியல்Æ இயந்திரவியல் மண் பாதுகாப்புÆ புல்Æகல் வரிசைகளை அமைத்தல் | மீற்றர் | 41000 | 39895 |
| மாதிரி பண்ணைகள், மாதிரி பண்ணைகளின் உற்பத்தி | கன்றுகளின் எண்ணிக்கை | 80000 | 87130 |
| காடு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கென மரக்கன்றுகளை இலவசமாக வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் | கன்றுகளின் எண்ணிக்கை | 40000 | 49803 |
| காடு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம், நீர்த்தேக்க கரையோரங்கள் மற்றும் பாதைகள் முதலியவற்றில் மரநடுகை | கன்றுகளின் எண்ணிக்கை | 31 | 40 |
| மேல் மகாவலி நீரேந்து பரப்பு பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் | நிகழ்ச்சித்திட்டம் | 01 | 01 |
| மகாவலி கங்கையின் நீரின் தரத்தை தொடர்ச்சியாக கண்காணித்தல் | நிகழ்ச்சித்திட்டம் | 01 | 01 |
| ஆற்றின் கீழ் பிரதேச செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நீர்த் தாவரங்களை முகாமைத்துவம் | நிகழ்ச்சித்திட்டம் | 01 | 0·92 |
| வீட்டுத் தோட்டங்களில் மாட்டுக் கொட்டில்களை அமைத்தல் | நிகழ்ச்சித்திட்டம் | 20 | 13 |
| வீட்டுத் தோட்டங்களில் கொம்போஸ்ட் உர அலகுகளை ஸ்தாபித்தல் | எண்ணிக்கை | 250 | 100 |
| பழங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கென கொள்வனவு | எண்ணிக்கை | 3500 | |
| சாகுபடி பயிர்கள் மற்றும் நீரியல் உற்பத்திகள் என்பவற்றை அதிகரித்தல் | | 600 | 300 |

### 2.5.1 சுற்றாடல் கற்கை பிரிவு

சுற்றாடல் கற்கை பிரிவு பாடசாலை மாணவர்கள், நிறுவன ஊழியர்கள், அரசியல் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் விவசாயிகள், வெளி ஊழியர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புக்களின் ஊழியர்கள் ஆகியோரை கருத்தில் கொண்டு தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

**அட்டவணை 08 – 2012 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

| செயற்பாடு | பௌதீக | | |
|---|---|---|---|
| | அலகு | இலக்கு | முன்னேற்றம் |
| ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டம் | 6 | 2 |
| பயனாளிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டம் | 36 | 33 |
| சுற்றாடல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டம் | 12 | 24 |
| உற்பத்தி அபிவிருத்தி | நிகழ்ச்சித்திட்டம் | 03 | 03 |
| வர்த்தக ரீதியிலான தோட்ட அபிவிருத்தி | நிகழ்ச்சித்திட்டம் | 01 | 0 .83 |

### 2.5.2 பூகோள ரீதியான தகவல் தொகுப்பு (புஜ�ளு) பிரிவு

- 2012 ஆம் வருடத்தின் போது பூகோள தகவல் தொகுப்பு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை பின்வரும் விதத்தில் சுருக்கிக் கூற முடியும்.

- 2012 ஆம் வருடத்தின் போது பூகோள தகவல் தொகுப்பு பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1.160 மில்லியனாகும். இவ்வாண்டில் இது தொடர்பாக செலவிடப்பட்ட தொகை ரூ. 0.052 மில்லியனாக இருந்து வந்தது.

**அட்டவணை 09 – 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றம்**

| செயற்பாடு | பௌதீக | | |
|---|---|---|---|
| | அலகு | இலக்கு | முன்னேற்றம் |
| செய்மதி புகைப்படங்களை பயன்படுத்தி கொத்மலை நீர்த்தேக்கம் தொடக்கம் ஹாரகம வரையிலுள்ள இயற்கை வளங்களின் தரவுகளை சேகரித்தல் | நிகழ்ச்சித்திட்டம் | 01 | 01 |
| மிகத் துல்லியமான செய்மதி புகைப்படங்களின் கொள்வனவு (குடா ஓய நீரேந்து பரப்பு பிரதேசங்களில் காணப்படும் வளங்களின் தரவுத் தளத்தை மேலும் விருத்தி செய்தல் | நிகழ்ச்சித்திட்டம் | 01 | 01 |
| இயற்கை வளங்களின் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கென (புஜ�ளு) தரவு தளமொன்றை உருவாக்குதல் மற்றும் மூங்கில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல் | நிகழ்ச்சித்திட்டம் | 01 | 01 |
| செய்மதி புகைப்படங்களின் கள துல்லியத் தன்மையை ஏற்படுத்துதல் மற்றும் பூகோள ரீதியில் துல்லியத் தன்மையை ஏற்படுத்துதல் மூலம் தரவுத் தளத்தை மேலும் விருத்தி செய்தல் | நிகழ்ச்சித்திட்டம் | 01 | 01 |

### 2.5.3 காணிப் பயன்பாடு மற்றும் திட்டமிடல் பிரிவு

காணிப் பயன்பாடு மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் நிலையான அடிப்படையில் காணி வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நில அளவைகளை மேற்கொள்ளல், காணி வளங்களை பரிசோதனை செய்தல், சுற்றாடல் முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் காணிப் பாவனை திட்டங்களை தயாரித்தல் போன்ற துறைகளில் இப்பிரிவு செயற்பட்டு வருகின்றது.

- 2012 ஆம் வருடத்தின் போது இந்த பிரிவிற்கென ரூ. 0.1 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டதுடன், செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 0.04 மில்லியனாகும்.
- 2012 ஆம் வருடத்தின் போது, காணிப் பயன்பாட்டு மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை பின்வருமாறு சுருக்கிக் கூற முடியும்:

**அட்டவணை 10 – 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முன்னேற்றம்**

| செயற்பாடு | பௌதீக | | |
|---|---|---|---|
| | அலகு | இலக்கு | முன்னேற்றம் |
| மகாவலி மேல் நீரேந்து பரப்பு பிரதேசங்களில் சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கென காணி பயன்பாட்டு திட்ட வரைபடங்களை தயாரித்தல் | வரைபடங்களின் எண்ணிக்கை | 1 | 1 |
| மிகத் துல்லியமான விதத்தில் செய்மதி புகைப்படங்களை பயன்படுத்துவதன் மூலம் வளங்கள் தொடர்பான படங்களை தயாரிக்கும் பணியை முன்னெடுத்துச் சொல்லல் | கருத்திட்டங்கள் | 1 | 02 |

### 2.5.4. நீரியல் பிரிவு

- சேற்றுப் படிவுகளை தொடர்ச்சியாக கண்காணித்து வரும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மேல் மகாவலி நீரேந்து பரப்பு பிரதேசங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. நில்லம்பேஓய - குருகெலே
2. உமா ஓய - வெளிமட
3. ஹுளுகங்கை - நாரம்பனாவ
4. மஹஓய - மஹஓய
5. பெலிஹுல்ஓய - கெலும்சூரியகம
6. அட்டபாகே - அட்டபாகே
7. அட்டபாக - நவதெபிட்ட

**அட்டவணை 11 – 2012 ஆம் வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சேற்றுப் படிவுகளை அகற்றும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விபரங்கள்**

| | உப நீரேந்து பரப்பு பிரதேசம் | பரப்பளவு (ஹெக்) | மழைவீழ்ச்சி | மழைவீழ்ச்சியின் நாளாந்த அளவீடு | துகள்களின் அளவீடு |
|---|---|---|---|---|---|
| 1 | உமா ஓய - வெளிமட | 9834.67 | 12 | 12 | 292 |
| 2 | நில்லம்பே ஓய - நில்லம்பே | 6128.95 | 12 | 12 | 324 |
| 3 | மஹஓய – மஹஓய | 10777.98 | 12 | 12 | 311 |
| 4 | அட்டபாகே – அட்டபாகே | 4352.55 | 12 | 12 | 347 |
| 5 | பெலிஹுல்ஓய – கெலெம்சூரியகம | 14467.09 | 12 | 12 | 313 |
| 6 | மகாவலி கங்கை – நவதெபிட்ட | | 12 | 12 | 486 |
| 7 | ஹுளுகங்கை – நாரம்பனாவ | 12264.03 | 12 | | 0 |
| 8 | சேரவெல்ல - 01 | 4.65 | 12 | | 0 |
| 9 | சேரவெல்ல - 02 | 55.00 | 12 | 12 | 340 |
| | மொத்தம்ட | | 108 | 84 | 2413 |

- இப்பிரிவுக்கென 2012 ஆம் ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட தொகை 1·78 மில்லியனாக இருந்து வந்ததுடன், மொத்தச் செலவு ரூ. 0·975 மில்லியனாக இருந்து வந்தது.

### 2.5.5 ஆற்றோரங்களில் மூங்கில் நடுகை கருத்திட்டம்

மேல் மகாவலி நீரேந்து பரப்பு பிரதேசங்களிலும், ஆற்றின் கீழ்ப் பகுதிகளிலும் கரையோர அரிப்பினை தடுக்கும் பொருட்டு ஆற்றோரங்களில் மூங்கில் செய்கையை மேற்கொள்ளும் நோக்கத்துடன் ஆற்றோர மூங்கில் செய்கை கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென கொத்மலை பிரதேசத்தில் மூங்கில் கன்றுகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, பிரதேச செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் ஆகியோரின் ஒருங்கிணைப்புடன் இக்கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இது தவிர, இக்கருத்திட்டத்தின் மூலம் பழ வகைகள் மற்றும் ஏனைய அலங்கார தாவரங்களின் உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மகாவலி பிரதேசங்களைச் சேர்ந்த இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறையினரின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 11 – ஆற்றோர மூங்கில் செய்கை கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

| கூறுÆ செயற்பாடு | நிலை | பிரச்சினை Æ விளக்கம் |
|---|---|---|
| இழைய கன்றுகளின் உற்பத்தி - மூங்கில் | இடம்பெற்று வருகின்றது | உற்பத்தி இலக்கு 350000 கன்றுகள் - 69460 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன |
| உற்பத்திக்குத் தேவையான கொள்வனவுகள் | இடம்பெற்று வருகின்றது | |
| நாற்று மேடைகளை பராமரித்தல் | இடம்பெற்று வருகின்றது | |
| கன்றுகளை நடுகை செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் | இடம்பெற்று வருகின்றது | இலக்கு 350,000 கன்றுகளாக இருந்து வந்த போதிலும், 227,753 கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ஆய்வு நடவடிக்கைகள் | இடம்பெற்று வருகின்றது | அந்தூரியம், அன்னாசி, வாழை என்பன தொடர்பான ஆய்வை மேற்கொள்ளல் |
| கன்றுகளின் விற்பனை | இடம்பெற்று வருகின்றது | ரூ. 362,765.00 வருமானத்தைப் பெற்றுக் கொள்ளல் |

**அட்டவணை 13 – ஆற்றோர மூங்கில் செய்கை கருத்திட்டம் - 2012 ஆம் வருடத்திற்கான செலவுகள்**

| வரிசை எண் | விவரம் | ஒதுக்கிய தொகை (ரூ.மில்) | ஒதுக்கீடு (ரூ. மில்) | செலவு (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| 1 | மூலதனச் செலவு | 15.00 | 7.50 | 8.38 |
| 2 | ஆற்றோர மூங்கில் செய்கை கருத்திட்டம் | 35 | 11.00 | 14.77 |
| 3 | விவசாய மேம்பாடு | 0.565 | | 0.215 |
| 4 | மொத்த மூலதனச் செலவு | 50.565 | 18.5 | 23.365 |
| 5 | மீள வரும் செலவு | 36.25 | 26.275 | 25.47 |

## 2.6 விசேட கருத்திட்டம்

### 2.6.1 மொரகஹகந்தÆ களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டம்

#### 2.6.1.1 மொரகஹகந்த கருத்திட்டம்



பெரும்போகத்தில் மட்டும் நீர்ப்பாசனம் வழங்கப்படும் சுமார் 82000 ஹெக்டயார் நிலப்பரப்பு பிரதேசத்திற்கென பிரதான நீர்த்தேக்கமொன்றை நிர்மாணித்தல், அப்பிரதேசத்தில் நிலவி வரும் வெள்ளப் பெருக்கு நிலைமையை கட்டுப்படுத்துதல் மற்றும் நீர் மின் உற்பத்தி என்பவற்றை நோக்கமாகக் கொண்டு 2007 ஆம் வருடத்தில் உள்நாட்டு நிதிகளை பயன்படுத்தி மொரகஹகந்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 521 மில்லியன் கன மீற்றர் கொள்திறனுடன் கூடிய நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், அந்த நீர்த்தேக்கதிற்கு மேல் பகுதியில் அமையவிருக்கும் 144 மில்லியன் கனமீற்றர் கொள்திறன் கொண்ட உத்தேச களுகங்கை நீர்த்தேக்கம் சுரங்கமொன்றின் மூலம் இதனுடன் இணைக்கப்படும் இக்கருத்திட்டம் தொடர்பாக ரூ. 64·358 மில்லியன் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் மூலம் களுகங்கை இடது கரை பிரதேசத்திலும் (1700 ஹெக்) மற்றும் கவுடுல்ல பிரிவிலும் (2000 ஹெக்) 1572 விவசாய குடும்பங்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இக்கருத்திட்டத்தின் அடிப்படை செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

- சமூக உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி
- திசை திருப்பும் வழிகள், பிரதான பாதைகள், வர்த்தக பாதைகள் மற்றும் சிறு கிராமங்களுக்கான பாதைகள் என்பவற்றை நிர்மாணித்தல்
- சிறு குளங்கள் மற்றும் கால்வாய்கள் போன்ற நீர்ப்பாசன உள்கட்டடமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
- காணிகளை கையகப்படுத்தல் மற்றும் மீள் குடியேற்றம்
- விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி
- சிறு தொழில் மற்றும் கடன் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்
- விவசாயிகள் அமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் ஆற்றல் அபிவிருத்தி
- அறிவூட்டல் மற்றும் பயிற்சி
- சுற்றாடல் மீதான மோசமான தாக்கங்களை குறைப்பதற்கான செயற்பாடுகள்

திட்டமிடப்பட்ட விதத்தில் இதுவரையில் பின்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன: திசை திருப்பல் வீதிகள், தொடர்பு வீதிகள், முதலாவது அணைக்கட்டு, நீர்ப்பாசன கட்டமைப்பின் 10 சிறு குளங்களின் நிர்மாணம், வெளிக்கள கால்வாய்களின் நிர்மாணம், கருத்திட்ட அலுவலகம், வேலைத்தலம் என்பவற்றின் நிர்மாணம், குடியிருப்புக்களின் நிர்மாணம், பொறியியலாளர் அலுவலகங்கள் நிர்மாணம், பிரிவு அலுவலகங்களின் நிர்மாணம், பிரதான ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட கட்டுமான வேலைகள், காணி கையகப்படுத்தல், ஆரம்ப கட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்காக காணிகளை பகிர்ந்தளித்தல், சுற்றாடல் மற்றும் இயற்கை பன்முகத்தன்மை பாதுகாப்பு நடவடிக்கைகள், அறிவூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.

மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் பிரதான அணைக்கட்டு மற்றும் இரண்டாவது அணைக்கட்டு என்பவற்றின் நிர்மாண வேலைகள் சைனா ஹைட்ரோ கம்பெனி என்ற சீனக் கம்பெனி மூலம் மேற்கொள்ளப்பட்டு

வருவதுடன், அதற்குத் தேவையான நிதிகளை சீன அபிவிருத்தி வங்கி கடன் அடிப்படையில் வழங்கி வருகின்றது. தற்போது இந்த நிர்மாண வேலைகளின் ஆரம்பப் பணிகள் தொடங்கியுள்ளன.

### 2.6.1.2 களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டம்

2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த கருத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு உதவி மூலம் களுகங்கை வலது கரை பிரதேசத்தில் 1900 ஹெக்டயார் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்து, நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் பிரதேசத்திலிருந்து இடம்பெயரும் 797 குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- சமூக உள்கட்டடமைப்பு வசதிகளின் அபிவிருத்தி
- திசை திருப்பும் பாதைகள், பிரதான பாதைகள், வர்த்தக பாதைகள் மற்றும் சிறு கிராம பாதைகள் என்பவற்றை நிர்மாணித்தல்
- சிறு குளங்கள் மற்றும் கால்வாய்கள் போன்ற நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல்
- காணிகளை கையகப்படுத்தல் மற்றும் மீள் குடியேற்றம்
- சுற்றாடல் மீதான மோசமான தாக்கங்களை குறைத்தல்

களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் பிரதான அணைக்கட்டு நிர்மாண வேலைகளுக்கென குவைட் அபிவிருத்தி நிதியம் (முரறயவை னுநஎநடழிஅநவெ குரனெ), சவூதி அபிவிருத்தி நிதியம் (ளுயரனை னுநஎநடழிஅநவெ குரனெ) மற்றும் ஒபெக் அபிவிருத்தி நிதியம் (ழீநுஊ னுநஎநடழிஅநவெ குரனெ) என்பவற்றின் மூலம் நிதியளிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான கட்டுமானங்களுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதுடன், கட்டுமான ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதற்கென சர்வதேச ரீதியிலான விலை கோரலை மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. நிதி வழங்குனர்களின் உடன்பாட்டை பெற்றுக் கொண்ட பின்னர் இந்தக் கருத்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

### 2.6.1.3 ஆற்றின் கீழ் பிரதேச அபிவிருத்தி திட்டம்

ந்தக் கருத்திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காக களு கங்கை கருத்திட்டத்தின் கீழ் 3600 ஹெக்டயார் நிலப்பரப்பும், கவுடுல்ல இடது கரை புதிய அபிவிருத்தி பிரதேசத்தில் 2000 ஹெக்டயார் நிலப்பரப்பும் உள்நாட்டு நிதிகளை பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், காணி கையகப்படுத்தல், நீர்ப்பாசன மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல் என்பன தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





**அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் மொறகஹகந்த கருத்திட்டம்**

**அட்டவணை 14 – மொறகஹகந்த அபிவிருத்தி கருத்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக ரீதியான முன்னேற்றம்**

| | செயற்பாடு | நிதியொதுக்கு (ரூ.மில்) | செலவு (ரூ.மில்) | முன்னேற்றம் ூ |
|---|---|---|---|---|
| 01 | நில அளவை வேலைகள் | 1.50 | 0.05 | 5ூ |
| 02 | கட்டடங்களின் நிர்மாணம் | 82.50 | 41.98 | 70ூ |
| 03 | வீதிகள் நிர்மாணம் | 161.00 | 158.92 | 95ூ |
| 04 | நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி | 70.00 | 38.53 | 50ூ |
| 05 | பிரதான அணைக்கட்டின் ஆய்வு வேலைகள், நிர்மாணம், கொள்திறன் அபிவிருத்தி நிர்மாணம் | 12243.94 | 11554.80 | 94ூ |
| 06 | அணைக்கட்டு இல. 02 நிர்மாணம் | 0.50 | 0.00 | 65ூ |
| 07 | காணி கையகப்படுத்தல், மீள்குடியேற்றம் | 31.80 | 23.88 | 60ூ |
| 08 | சுற்றாடல் இசைவை பெற்றுக் கொள்ளல், சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல் | 40.12 | 27.78 | 60ூ |
| 09 | அலுவலக மற்றும் வேலைத் தல உபகரண கொள்வனவு | 3.00 | 2.27 | 76ூ |
| 10 | நிர்வாகம், முகாமைத்துவம் மொத்தச் செலவு | 60.00 | 60.08 | - |
| | மொத்தம் - உள்நாட்டு நிதிகள் | 2312.36 | 2109.65 | |
| | - நேரடி வெளிநாட்டு நிதிகள் | 10382.00 | 9798.64 | |
| | **கூட்டு மொத்தம்** | **12694.36** | **11908.29** | |

**அட்டவணை 15 – களுகங்கை அபிவிருத்தி கருத்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக ரீதியான முன்னேற்றம்**

| | செயற்பாடு | நிதியொதுக்கு (ரூ.மில்) | செலவு (ரூ.மில்) | முன்னேற்றம் ூ |
|---|---|---|---|---|
| 01 | நில அளவை வேலைகள் | 4.00 | 4.73 | 100ூ |
| 02 | கட்டடங்களின் நிர்மாணம் | 93.50 | 80.39 | 50ூ |
| 03 | வீதிகள் நிர்மாணம் | 35.00 | 34.57 | |
| 04 | நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி | 255.00 | 281.08 | 100ூ |
| 05 | பிரதான அணைக்கட்டின் ஆய்வு வேலைகள், நிர்மாணம், கொள்திறன் அபிவிருத்தி நிர்மானம் | 112.00 | 118.70 | 65ூ |
| 06 | அணைக்கட்டு இல. 02 நிர்மாணம் | - | - | - |
| 07 | காணி கையகப்படுத்தல், மீள்குடியேற்றம் | 106.50 | 21.99 | 50ூ |
| 08 | சுற்றாடல் இசைவை பெற்றுக் கொள்ளல், சுற்றாடல் தாக்கங்களை குறைத்தல் | 49.26 | 35.82 | 65ூ |
| 09 | அலுவலக மற்றும் வேலைத் தல உபகரண கொள்வனவு | 5.00 | 2.47 | 49ூ |
| 10 | நிர்வாகம், முகாமைத்துவம் மொத்தச் செலவு | 60.26 | 62.56 | |
| | மொத்தம் - உள்நாட்டு நிதிகள் | 685.26 | 607.74 | |
| | - நேரடி வெளிநாட்டு நிதிகள் | - | - | |
| | வெளிநாட்டு உதவி ( மீளளிப்பு அடிப்படையில் ) | 28.00 | 27.62 | |
| | உள்நாட்டு நிதியுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு உதவி | 7.00 | 6.95 | |
| | **கூட்டு மொத்தம்** | **720.26** | **642.31** | |

## 2.6.2 அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம்

### 2.6.2.1 கருத்திட்டத்தின் நோக்கங்கள்

- பாரிய அளவிலான அணைக்கட்டுகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றிற்கென நீண்ட கால நிலைபேறான திட்டமொன்றை உருவாக்கிக் கொள்ளல்.

- இலங்கையின் நீர் ஆதாரங்கள் மற்றும் அவை தொடர்பான நீர் மின் உற்பத்தி உள்ளகட்டமைப்பு வசதிகள் என்பவற்றிற்கென நீண்ட கால நிலைபேறான திட்டங்களை உருவாக்கிக் கொள்ளல், முகாமைத்துவ மட்டத்தை உயர்த்துதல், பொதுமக்களை நீரினால் தூண்டப்படும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல், நீர் ஆதாரங்களின் தரத்தினை உயர்த்துதல்

இக்கருத்திட்டம் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற பணிகள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து வருவதுடன், அப்பணிகளுக்கு குறைநிரப்பு செய்யக் கூடியதாகவும் இருந்து வரும். பொதுமக்களை இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதும் அதன் நோக்கமாவும் உள்ளது.

### 2.6.2.2 கருத்திட்டத்தின் பிரதான கூறுகள்

I. அணைக்கட்டு பாதுகாப்பு நிலைமையை விருத்தி செய்தல் மற்றும் இயக்குதல் செயல் திறனை விருத்தி செய்து கொள்ளல்.

II. தற்போதைய நீர் தகவல் தொகுப்பின் தரத்தினை விருத்தி செய்து கொள்வதும், நவீனமயமாக்குவதும்.

III. அபிவிருத்தியடைந்து வரும் தேசிய நீர் நுகர்வு திட்டத்தை இற்றைப்படுத்துதல், மகாவலி நீராதாரங்களை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடல், முந்தெனி ஆறு பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட்டமிடலுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.





### 2.6.2.3 கருத்திட்டத்தை செயற்படுத்தி வரும் நிறுவனங்கள் மற்றும் கால அட்டவணை

இலங்கை மகாவலி அதிகார சபை, நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வளங்கள் சபை என்பவற்றின் பிரதிநிதித்துவ அலுவலகங்களின் மூலம் இக்கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. அடிப்படை கருத்திட்ட அபிலாஷ‘களின் மூலம் இனங்காணப்பட்டிருக்கும் பணிகளை நிறைவேற்றி வைப்பதற்கான திகதியாக ஜுன் 30, 2013 திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், பின்னர் கருத்திட்டத்தை பூர்த்தி செய்யும் திகதி ஜுன் 30, 2015 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

#### 2.6.2.4 கருத்திட்டத்தின் நிதி நடவடிக்கைகள்

எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய செலவுகளாக ரூ. 8187 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதுடன், செலவு அமெரிக்க டொலர் மில்லியன் 75.8 ஆக இருந்து வருகின்றது. அதில் 70.23 மில்லியன் அமெரிக்க டொலர் ( ரூ. 7585’64 மில்லியன்) மில்லியன் தொகையை சர்வதேச அபிவிருத்தி கழகம் - உலக வங்கி (ஐனுயு -றுடீ) மூலம் வழங்கப்படுகின்றது. மிகுதித் தொகையை இலங்கை அரசாங்கம் பங்களிப்புச் செய்கின்றது.

கருத்திட்ட நடவடிக்கைகள் நீர்ப்பாசன அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்படுவதுடன், நீர் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் அமுல் செய்தல் என்பவற்றை அமுலாக்கல் முகவர அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ பிரிவு என்பன கூட்டாக மேற்கொண்டு வருகின்றன.

2012 ஆம் ஆண்டளவில் கருத்திட்டம் அதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 8187 மில்லியன் தொகையில் ரூ. 4073 மில்லியன் தொகையை செலவு செய்திருந்தது. இதில் 49.6 மூ நிதிசார் முன்னேற்றமும், 53மூ பௌதீக முன்னேற்றமும் ஏற்பட்டிருந்தது.

கருத்திட்டத்தின் மூன்று பிரதான கூறுகளின் அமுலாக்கல் முன்னேற்றம் பல்வேறு கட்டங்களில் இருந்து வருவதுடன், தற்பொழுது அதன் முன்னேற்ற நிலை கீழே எடுத்துக் காட்டப்படுகின்றது.

#### 2.6.2.5 அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் புனருதாரண செயற்பாடுகள்

இதன் கீழ் அதிக ஆபத்துக்களை கொண்டிருக்கும் 32 அணைக்கட்டுக்களை புனருத்தாரணம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அமுலாக்கல் உதவி ஆலோசகர்கள் (ஐளுஊ-1) மூலம் 32 அணைக்கட்டுக்கள் தொடர்பாக விரிவான எண்ணக் கரு ரீதியான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், கேள்விப் பத்திர ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 28 பொதிகளின் (ீயஉமயபநள) கீழ் 29 அணைக்கட்டுக்கள் தொடர்பான ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரையில் 3 அணைக்கட்டுக்கள் முழுமையாக புனருத்தாரணம் செய்யப்பட்டிருப்பதுடன் மிகுதி 26 அணைக்கட்டுக்கள் தொடர்பான முழுமையான புனருத்தாரண செயற்பாடுகளுக்கென 25 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பாக கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ள விதத்தில் பல்வேறு மட்டங்களில் பௌதீக ரீதியான முன்னேற்றம் இடம்பெற்றுள்ளது.

அதே போல இலங்கை மகாவலி அதிகார சபையினால் முகாமைத்துவம் செய்யப்படும் 11 நீர்த்தேக்கங்கள் தொடர்பாடல் செய்யப்பட்டு வருகின்றன. எட்டப்பட்ட முன்னேற்றம் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 16 – அணைக்கட்டு நிர்மாண வேலைகளின் இடம்பெற்ற முன்னேற்றம் - 2012**

| வரிசை எண் | அணைக்கட்டு | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | தம்புலு ஓய | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 02 | கண்டலம | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 03 | தெதுரு ஓய, கண்டலம | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 88மூ |
| 04 | போவதென்ன | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 81மூ |
| 05 | சந்திரிக்கா வெவ | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 89மூ |
| 06 | கலாவெவ | 60மூ | 56மூ |
| 07 | மாதுரு ஓய | 65மூ | 49மூ |
| 08 | ரன்தம்பே | 35மூ | 37மூ |
| 09 | ரந்தெனிகல | 50மூ | 41மூ |
| 10 | பொல்கொல்ல | 40மூ | 50மூ |
| 11 | கொத்மலை | 35மூ | 45மூ |

இது தவிர, அணைக்கட்டு பாதுகாப்பு வசதி மற்றும் உபகரணத் தொகுதிகள் என்பன வழங்கப்பட்டிருப்பதுடன் அனைத்து நீர்த்தேக்கங்களுக்கும் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் அவற்றின் கீழ் பிரதேசங்களுக்குப் பொறுப்பான பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோருக்கு முக்கியமான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.6.2.6 நீரியல் நிலைமைகள் மற்றும் காலநிலை நிலைமைகள் என்பவற்றின் முகாமைத்துவம்

இதன் கீழ் நாடெங்கிலும் நீரியல் மற்றும் காலநிலை தொடர்பான தரவுகளை சேகரிக்கும் 122 நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மகாவலி பிரதேசங்களில் அத்தகைய 19 நிலையங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன. இந்த தகவல்களை பகுப்பாய்வு செய்து, முன்னுணர்ந்து கூறுவதற்கென இலங்கை மகாவலி அதிகார சபையின் நீர் முகாமைத்துவ செயலகத்தை மீளமைப்பு செய்து, அதனை ஒரு நீர் பகுப்பாய்வு நிலையமாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.6.2.7 அணைக்கட்டு பாதுகாப்பு வசதிகளை வழங்குதல்

கருத்திட்டங்களின் நோக்கங்களுக்கு அமைவாக அணைக்கட்டுக்களின் பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு, அமுலாக்கல் மற்றும் பராமரிப்பு என்பவற்றுக்கென முழுமையாக புனருத்தாரணம் செய்யப்பட வேண்டிய அத்தியாவசியமான அடிப்படை பாதுகாப்பு வசதிகளை வழங்குவதற்கென 32 பாரிய அணைக்கட்டுகளை உள்ளடக்கிய விதத்தில் 80 அணைக்கட்டுகளுக்கென உபகரணங்கள், இயந்திரங்கள், கருவிகள், வாகனங்கள் என்பன பகிர்ந்தளிக்கப்பட்டன. (புனருத்தாரணத்திற்கென தெரிவு செய்யப்பட்டிருக்கும் 32 அணைக்கட்டுக்கள் தவிர) 48 அணைக்கட்டுக்கள் தொடர்பாக அணைக்கட்டு முகாமையாளர்களுக்கு அத்தியாவசியமான அவசர புனருத்தாரண வேலைகள் மற்றும் அது தொடர்பான கட்டமைப்புகளுக்கான வீதிகளுக்கு வெளிச்சமூட்டல் வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளை வழங்குதல் என்பவற்றிற்கென உதவி வழங்கப்பட்டது. இதன் கீழ் 40 அணைக்கட்டுகளுக்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டன.

### 2.6.2.8 தேசிய நீர் வளங்கள் பாவனை திட்டத்தை தயாரித்தல்

இதன் கீழ் தேசிய நீர் வளங்கள் பாவனை தொடர்பான திட்டமொன்றும், முந்தெனியாறு பள்ளத்தாக்கு நீர் பாவனை திட்டமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போதைய நீர் வளங்களின் இயல்பு (அளவு மற்றும் தளம்) நீருக்கான மற்றும் கேள்வி என்பவற்றை கருத்தில் கொண்டு, 1968 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மகாவலி பெருந் திட்டத்தை மீளாய்வு செய்து, இன்றைய காலகட்டத்திற்கு பொருத்தமான விதத்தில் மீண்டும் தயாரிப்பது இக்கருத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் மிக முக்கியமான ஒரு பணியாக இருந்து வருகின்றது. அதன் பிரகாரம், இத்திட்டத்தின் வேலைகள் முடிவடைந்திருப்பதுடன், நீர் உபயோக தரப்பினர் மற்றும் இது தொடர்பாக அக்கறை காட்டுவோர்கள் ஆகியோருக்கு மத்தியில் இது தொடர்பான கலந்துரையாடலொன்றை மேற்கொண்டு, இறுதித் திட்டம் முடிவாக்கப்படவுள்ளது.

### 2.6.2.9 பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி

இந்த கருத்திட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு (குறிப்பாக பொறியியலாளர்களின்) திறன் அபிவிருத்திக்கென வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி செயலமர்வுகள் பல நடத்தப்பட்டன. அவற்றின் மூலம் அணைக்கட்டு கண்காணிப்பு, அணைக்கட்டு பாதுகாப்பு, அணைக்கட்டுகளின் நிர்மாணம், திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பாக அவர்கள் அறிவைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

### 2.6.3 மகாவலி ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

மகாவலி ஷடீ“ வலயத்தில் 8 பிரிவுகளில் அமைந்திருக்கும் நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் வீதி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை புனரமைத்தல், நிறுவன அபிவிருத்தி, விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி சுற்றாடல் தொகுதிகளின் பாதுகாப்பு என்பவற்றை நோக்கமாகக் கொண்டு மகாவலி ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டத்தின் மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றி வைக்கும் விதத்ததில் 2012 வருடத்தின் போது கீழே குறிப்பிடப்படும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன:

- ❖ கால்வாய்கள் மற்றும் வீதி கட்டமைப்பு என்பவற்றை புனரமைத்தல்
- ❖ நீர் திட்டமிடல் கட்டமைப்புக்களை புனரமைத்து மேம்படுத்துதல்
- ❖ விவசாய மற்றும் கால்நடை வளங்களின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள்
- ❖ நிறுவன அபிவிருத்தி செயற்பாடுகள்
- ❖ வன வள மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகள்
- ❖ நிர்வாக செயற்பாடுகள்
- ❖ பல்வேறு செயற்பாடுகள்

**அட்டவணை 17 – கருத்திட்டத்தின் மூலம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள்**

| உப நீர்ப்பாசன வலயம் | பிரிவு | கால்வாய் கி.மி | வெளிக்கள கால்வாய் கி.மி. | குளத்தின் அளவு கி.மி. | பாதைகள் கி.மி. |
|---|---|---|---|---|---|
| 5 | தம்வின்ன | 49.9 | 117.7 | 04 | 20.7 |
| 5 | விஜயபுர | 50.1 | 126.5 | - | 18.5 |
| 1 | திம்புலாகல | 74.5 | 168.9 | 08 | 44.6 |
| 1 | அல்லேவெவ | 64.3 | 141.8 | 11 | 30.4 |
| 2 | செவனபிட்டிய | 49.3 | 171.7 | 10 | 37.8 |
| 2 | சேனாபுர | 58.0 | 118.4 | 05 | 28.7 |
| 3 | சிங்கபுர | 52.6 | 107.2 | 08 | 39.3 |
| 4 | எஸலபுர | 60.0 | 186.7 | 08 | 35.5 |
| 4 | சபுமல்புர | - | - | - | - |
| | மொத்தம் | 459.3 | 1138.9 | 54 | 255.5 |

## 2.6.4 ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

### 2.6.4.1 கருத்திட்டத்தின் அமைவிடம்

ஊவா மாகாணம் ரிலிமாலியத்த பிரதேச செயலகப் பிரிவு

### 2.6.4.2 கருத்திட்டத்தின் நோக்கங்கள்

சமூக பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நிலையான வருமான மார்க்கங்களை இனங்காணுதல் என்பவற்றுக்கூடாக கிராமிய பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

### 2.6.4.3 கருத்திட்டத்தின் கூறுகள்

- நீர்ப்பாசன வலையமைப்பு மற்றும் விவசாய உள்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை மேம்படுத்துதல்
- நீர்ப்பாசன நீரை வழங்குதல்
- சமூக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
- சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களின் அபிவிருத்தி
- சுற்றாடல் பாதுகாப்பு

### 2.6.4.4 கருத்திட்டத்தின் செயற்பாடுகள்

- நீர்ப்பாசன நீரின் திறனை உயர்த்துதல்
- 1200 ஹெக்டயார் நிலப்பரப்பில் வர்த்தக பயிர்களின் சாகுப்படி
- 100 விவசாய கிணறுகளை அமைத்தல்
- சுகாதார மற்றும் பொதுச் சுகாதார வசதிகளை விருத்தி செய்தல்
- 1000 குடும்பங்களுக்கு கால்நடை வளர்ப்பு மூலம் வருமானமீட்டும் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல்
- விவசாய பாதை வலையமைப்பை 70 கி.மீ. வரையில் விரிவாக்குதல்
- கருத்திட்ட பிரதேசத்தின் விவசாய உற்பத்தியை 50மூ ஆல் அதிகரித்தல்
- வருமானமீட்டும் குடித்தொகையில் பெண்களின் பங்களிப்பை 60மூ ஆக அதிகரித்தல்
- விவசாய உற்பத்தி மற்றும் அது தொடர்பான கைத்தொழில்கள் என்பவற்றில் இளைஞர் யுவதிகளை அதிகளவில் ஈடுபடுத்துதல்

| | | |
|---|---|---|
| கருத்திட்டத்தின் மூலம் பயனடைபவர்களின் எண்ணிக்கை | - | 14”782 குடும்பங்கள் |
| கருத்திட்டத்தின் காலம் | - | 5 வருடங்கள் (2012 – 2016) |
| மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு | - | ரூ. 1,100 மில்லியன் |

**அட்டவணை 18 – வருடாந்த முன்னேற்றம் - 2012**

| வரிசை எண் | செயற்பாடு | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | **தொழில்நுட்ப சேவைகள்** | | |
| | • கட்டடங்களின் நிர்மாணம் (அலுவலகங்கள், உத்தியோபூர்வ வாசஸ்தலங்கள்) | 02 | - |
| | • பாடசாலை கட்டடங்களின் நிர்மாணம் | 05 | - |
| | • பல்நோக்கு கட்டடங்கள் | 01 | - |
| | • இயந்திரங்களின் கொள்வனவு | 03 | 02 |
| | • வீதி புனரமைப்பு | கி.மி. 19.6 | |
| | • வீதிகளை அமைத்தல் | கி.மி. 01 | |
| | • நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்பாடுகள் | 06 | |
| | • குடிநீர் கிணறுகளை அமைத்தல் | 05 | |
| | • குளங்களை புனரமைத்தல் | 01 | |
| 02 | **மனித வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்தி** | | |
| | • சுமக நிகழ்ச்சித்திட்டம் | 20 | 03 |
| | • பொதுச் சுகாதார கழிப்பறைகளை அமைத்தல் | 1050 | 837 |
| | • சிறு குழுக்களை அறிமுகம் செய்து வைத்தல், வலுவூட்டல் | 105 | 200 |
| | • விவசாயம் சம்பந்தப்பட்ட உற்பத்திகள் குறித்த பயற்சி வழங்குதல் | 120 | 180 |
| | • சுய தொழில் பயிற்சி திட்டங்களை ஒருங்கிணைத்தல் | 200 | |
| | • சமூக அணிதிரட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 1000 | 600 |
| | • தொழில் பயிற்சி | 50 | |
| 03 | **வணிக அபிவிருத்தி** | | |
| | மரமுந்திரிகை உற்பத்திக்கென,<br>இயந்திரங்களை கொள்வனவு செய்தல்<br>கட்டடங்களை அமைத்தல்<br>பயிற்சி நடவடிக்கைகள் | <br>01<br>01<br>04 | |
| 04 | **விவசாய அபிவிருத்தி** | | |
| | • விவசாய கிணறுகளை அமைத்தல் | 23 | 03 |
| | • மாதிரி பப்பாசி செய்கை | 2000 | |
| | • மாதிரி மரக்கறி செய்கை | 100 | |
| | • மரவள்ளி சாகுபடிக்கென 50மூ பங்களிப்பை வழங்குதல் | விவசாயிகள் 500 | |
| | • சிறிய நீர்ப்பாசன மாதிரிகள் | 05 | |
| | • பயிற்சி மற்றும் அறிவூட்டல் | விவசாயிகள் | |

| | | | |
|---|---|---|---|
| | | 500 | |
| | • வீட்டு நாற்று மேடைகளுக்கு கூடுகளை அமைத்தல் (நேவ ர்ழரளந) | 500 | |
| **05** | **கால்நடை வளங்களின் அபிவிருத்தி** | | |
| | • கறவை மாடுகளின் கொள்வனவுக்கென – விவசாயிகள்<br>பண்ணைகளுக்கென – விவசாயிகள் | 75<br>10 | |
| | • மாட்டு கொட்டில்களை அமைத்தல் ரிதிமாலியத்த பண்ணை விவசாயிகளுக்கென | 01<br>75 | |
| | • கோழிக் குஞ்சுகள் உற்பத்தி | 10000 | 1000 |
| | • கோழிக் கூடுகளை அமைத்தல் | 100 | |
| | • அலங்கார மீன் வளர்ப்புக்கான தடாகங்களை அமைத்தல் (50மூ விவசாயிகள் பங்களிப்பு) | 40 | |
| | • நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை விடுவித்தல் | 50000 | 12000 |

## 2.6.5 வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

### 2.6.5.1 கருத்திட்டத்தின் எண்ணக் கரு மற்றும் நோக்கங்கள்

கடந்த காலப் பிரிவின் போது மகாவலி ஷடு“ வலயத்தில் வசித்து வந்த குடியேற்றவாசிகளில் பெரும்பாலானவர்களை, அவர்களுடைய வீடு வாசல்கள் மற்றும் வயல் நிலங்கள் என்பவற்றை கைவிட்டு விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கும், விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இயலச் செய்யும் விதத்தில் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கென இப்பிரதேசத்தை புனரமைப்புச் செய்தல், உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பிரதேசத்தை விட்டுச் சென்ற குடும்பங்களை மீண்டும் குடியமர்த்துதல் போன்ற தேசிய ரீதியிலான தேவைகளை கருத்தில் கொண்டு வெலிஓயா ஒருங்கிணைந்த கருத்திட்டம் திட்டமிடப்பட்டது.

அதன் பிரகாரம், 03 வருட கருத்திட்ட காலப் பிரிவிற்குள் மகாவலி ஷடு“ வலயத்தில் 6788 குடும்பங்களை மீளக் குடியேற்றுதல் மற்றும் நீர்ப்பாசன காணிகளை வழங்குதல் (ஒரு குடும்பத்திற்கு 2.5 ஏக்கர் வீதம் - வீட்டுத் தோட்டத்திற்கென 0.5 ஏக்கர் நீர்ப்பாசன காணி 1 ஏக்கர் நீர்ப்பாசனம் அல்லாத காணி 1 ஏக்கர்) இதில் உள்ளடக்கப்படும். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்பவற்றின் மூலம் இப்பிரதேசத்தில் நிலையான அபிவிருத்தியை உறுதிப்படுத்திக் கொள்வதும், அதற்கூடாக குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேலும் முன்னேற்றுவதும் இதன் அடிப்படை நோக்கங்களாகவுள்ளன.

### 2.5.6.2. அமைவிடம்

அநுராதபுரம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய விதத்தில் இக்கருத்திட்டம் அமைந்துள்ளது.

**அட்டவணை 19 – கருத்திட்ட செயற்பாடுகள்**

| செயற்பாடுகள் | பெறுமதி ரூ. மில். |
|---|---|
| நில அளவை செயற்பாடுகள் | 19.8 |
5. வÆப மகாவலி பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பெனி
   **(ஆயாயறநடை நுபெiநெநசiபெ ளநசஎஉைநள (ீஎவ) டுவன)**

## அட்டவணை 52 – 2012 ஆம் வருடத்தின் போது கம்பெனிகளின் செயற்பாடுகள்

| வரிசை எண் | கம்பெனி | வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்Æநிலை |
|---|---|---|
| 01 | வÆப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி | ❖ பிரதேசத்தைச சேர்ந்த விவசாயிகளிடமிருந்து பாலை சேகரித்தல் மற்றும் சேவைகளை வழங்குதல்<br>❖ பாலுடன் இணைந்த உற்பத்தி நடவடிக்கைகள்<br>❖ வீட்டுக் கோழி வளர்ப்பு கருத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகளை வழங்குதல்<br>❖ விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு கறவை மாடுகளை வழங்குதல்<br>❖ உயர் தரம் வாய்ந்த பொய்லர் கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் |
| | | |
| 02 | வÆப மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பெனி | ❖ திறைசேரி உண்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 9.5 மில்லியன் முதலீட்டிலிருந்தும், திகனவில் அமைந்திருக்கும் டொலமைட் கருத்திட்டத்திலிருந்தும் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.<br>திறைசேரி உண்டியல்களிலிருந்து 740இ314<br>டொலமைட் கருத்திட்டத்திலிருந்து 1இ062இ590<br>❖ முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சுமார் 8.6 மில்லியன் பெறுமதியான கடன் தொகைகளை அறவிட்டுக் கொள்ள முடியாத நிலையில் கம்பெனி செயல் முடக்க நிலையை அடைந்துள்ளது.<br>❖ பொதுத்துறை தொழில் முயற்சிகள் தொடர்பான பாரளுமன்ற தெரிவுக் குழுவின் (ஊழூரு) பரிந்துரையின் பிரகாரம், நட்டத்தில் இயங்கும் இக்கம்பெனியை கலைத்து, மூடி விடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| 03 | வÆப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி | ❖ பின்வரும் சாத்தியப்பாட்டு ஆய்வுகளிலிருந்தும், ஒப்பந்த வேலைகளிலிருந்தும் 2012 ஆம் வருடத்தின் போது செயற்பாட்டு வருமானம் ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது.<br>**சாத்தியப்பாட்டு ஆய்வுகள்**<br>வட மத்திய பாரிய கால்வாய் ரூ. 21 மில்.<br>உமா ஓயா ரூ. 4.9 மில்.<br>**ஒப்பந்த வேலைகள்**<br>நிராவிய ரூ. 19 மில். |

| | | |
|---|---|---|
| | | மடாட்டுகம ரூ. 7.8 மில்<br>சூரியவெவ ரூ. 10 மில். |
| 04 | வÆப இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி | ❖ 2012 ஆம் வருடத்தின் போது பின்வரும் செயற்பாடுகளிலிருந்து செயற்பாட்டு ஆதாயம் ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது:<br><br>தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மதிப்பீட்டாய்வு ரூ. 2 மில்<br><br>தென்னிலங்கை அதி வேக நெடுஞ்சாலை கருத்திட்டத்திலிருந்து ரூ. 1.7 மில்.<br><br>இலங்கை மின்சார சபை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து ரூ. 0.3 மில். |
| 05 | வÆப மகாவலி பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பெனி | |

## அட்டவணை 53 – மகாவலி அதிகார சபையுடன் இணைக்கப்பட்டுள்ள கம்பெனிகள்

| இல. | கம்பனியின் பெயர் | ஆரம்பிக்கப்பட்ட வருடம் | பதிவு | பங்குதாரர்கள் | பங்குகள் | தலைவர் | பணிப்பாளர் சபை | தலைமை அலுவலக முகவரி | 2012 இல் கம்பெனியின் நிலை | 2012 இல் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளனவா | 2012 இல் தேறிய இலாபம் Æ நட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | வÆப வென்ச்சர் கெப்பிடல் (தனியார்) கம்பெனி | 1997-03-17 | 2007 ஆம் ஆண்டின் இல 07 கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ீஏ9854 | திரு.மு.ர்.ளு குணதிலக திரு. லலித் கொடமுன்ன திரு. போல் லெஸ்லி கென்டிஸ் | 01<br>01<br>01 | இல்லை | செயற்பாட்டு முகாமையாளர் திரு. எம். வீரசேன திரு. ரத்னசிரி வேரகல | இல. 96, மகாவலி நிலைய கட்டடம், ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 | செயற்பட வில்லை மூடுவதற்கு உத்தேசிக் கப்பட்டுள் ளது. | 2012 - 2013 தொடர்பாக கணக்காய்வு நகல் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | (67.194.99) |
| 02 | வÆப மகாவலி கால்நடை வளங்கள், விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி | 1999-06-14 | 2007 ஆம் ஆண்டின் இல 07 கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. பழைய பதிவு ீ(ஏளு)23849 | மகாவலி அதிகார சபை | இன்னும் வெளியிடப் படவில்லை | இல்லை | திரு. ஆ.னு' பியதிலக திரு. எட்வட் டி மெல் திரு. நிமல் மஹவத்த திரு. ஒஸ்மன் டி சில்வா | இல. 260Æ20, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 | செயற்பட்டு வருகின்றது | இல்லை | (2''468''780'42) இந்த நட்டத்தில் தற்பொழுது கம்பெனியிடம் இல்லாத சொத்துக்களின் தேய்வும் அடங்குகின்றது |
| 03 | வÆப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் | 1998-06-18 | 2007 ஆம் ஆண்டின் இல 07 கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ீஏ23849 | மகாவலி அதிகார சபை திஸ்ஸ சேனாரத்ன | 6384<br>01 | திரு. ஹர்' சமரவீர | திரு. எலகந்த திரு. காமினி விஜயநாயக்க | இல. 11 ஜாவத்தை வீதி, கொழும்பு 05 | செயற்பட்டு வருகின்றது | கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது | (332''990) |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04 | இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி | 1999-07-30 | 2007 ஆம் ஆண்டின் இல 07 கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ீஏ4398 | மகாவலி அதிகார சபை திரு. ர்.ஆ. மந்திரிதிலக னு.சு.வணிகரத்ன | 1500<br>01 | திரு. மு.று.ேனு. கருணாரத்ன | திரு. யு.ஆ.மு.டீ.அத்தநாயக்க திரு. டீ.று.ஆ.று.செனவிரத்ன | அணைக்கட்டு பிரதேசம் பொல்கொல்ல | செயற்பட்டு வருகின்றது | கண்காய்வு செய்யப்பட்டுள்ளது | (444"164) |
| 05 | மகாவலி பொறியியல் சேவைகள் கம்பெனி | 1999-08-14 | 1982 இன் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் | மகாவலி அதிகார சபை மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் கம்பெனி | 01<br>01 | இல்லை | திரு. ந்'ாந்த பியசேன திரு. ே.ஆ. அபேரத்ன | இல. 100 கல்தேமுல்ல வீதி, ரத்மலானை | கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2013 வரையில் கண்காய்வு செய்யப்பட்டுள்ளது | (59"408) |

# பாகம் II

## வருடாந்த கணக்குகள்

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1. அறிக்கையிடும் கட்டமைப்பு

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அதன் கருமங்கள் உருவாக்கப்பட்டன. இலங்கை மகாவலி அதிகார சபையின் கருமங்கள் அச்சட்டத்தின் 12 ஆவது பிரிவில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதுடன், மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அமுல் செய்யும் பொறுப்பு அதன் மூலம் அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மகாவலி சட்டத்தின் பிரகாரம், குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் அல்லது ஒரு விசேட பிரதேசம் தொடர்பாக அதிகார சபையின் கருமங்கள் பின்வரும் விதத்தில் அமைதல் வேண்டும்:

(அ) நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் மற்றும் மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் என்பவற்றக்கான இயந்திர உபகரணங்களை ஸ்தாபித்தல் மற்றும் அதனை மேற்கொள்ளல் என்பவற்றையும் உள்ளடக்கிய மகாவலி கங்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் அமுல் செய்தல்É எவ்வாறிருப்பினும், மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் சம்பந்தப்பட்ட கருமத்தை, வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கென அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் வேறு ஏதேனும் ஓர் அதிகார சபையின் மூலம் செய்ய முடியும்.

(ஆ) குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் முழுமையான, ஒருங்கிணைந்த அபிவிருத்தியில் மேற்கொள்ளல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்கவைத்துக் கொள்ளல்.

(இ) குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்திற்குள் விவசாய உற்பத்தித் திறன் மற்றும் வேலை வாய்ப்புக்களை ஆற்றல் என்பவற்றை உச்ச மட்டத்தில் பராமரித்து வருதல், பொருளாதார, விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்க வைத்துக் கொள்ளல்.

(ஈ) ஏதேனும் ஒரு விசேட பிரதேசத்திற்குள் பௌதீக சுற்றாடலை பாதுகாத்தல் மற்றும் அதனை பராமரித்து வருதல்.

(உ) ஏதேனும் ஒரு விசேட பிரதேசத்திற்குள் சமூகத்தின் பொது நலன் மற்றும் கலாசார முன்னேற்றம் என்பவற்றை விருத்தி செய்தல் மற்றும் அப்பிரதேசத்தை நிர்வகித்தல்.

(ஊ) உள் மற்றும் தனியார் மூலதனத்தை குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியில் பயன்படுத்துவதனை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.ஷ

(எ) மகாவலி கங்கை அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுவதிலும், அதனை அமுல் செய்வதிலும் குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதிலும் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்;ராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் அல்லது அரசு சார் வேறு எவரேனும் நபர்கள் ஆகிய தரப்பினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல், அதனை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்.

இலங்கை மகாவலி அதிகார சபை அதன் கீழ் நிர்வகிக்கப்படும் ஐந்து கம்பெனிகளையும், ஒரு இணைக் கம்பெனியையும் கொண்டுள்ளது. அவை வÆப மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பெனி, வÆப இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி, வÆப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி, வÆப மகாவலி பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பெனி, வÆப மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) கம்பெனி மற்றும் வÆப மகாவலி கால்நடை வளங்கள் தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி என்பனவாகும்.

அனைத்து கம்பெனிகளும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் சட்டப்பூர்வமாக அமைக்கப்பட்டிருப்பதுடன், அவை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

**மகாவலி கம்பெனிகளின் முதன்மையான செயற்பாடுகள்**

**அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் கம்பெனிகள்**

அ. வÆப மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பெனி

i. மகாவலி தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.

ii. கம்பெனிக்கு நிதிகளை ஈட்டிக்கொள்ளக் கூடிய வர்த்தக தொழில் முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு உதவுதல்.

ஆ. வÆப இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி

i. இயற்கை வளங்கள் முகாமைத்துவ பிரிவின் கீழ் கட்டுமான திட்டங்கள், பொருட்கள் தொடர்பான மதிப்பீட்டாய்வுகள், நிலப் பயன்பாட்டு வரைபடங்கள், நீரேந்துப் பரப்பு பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் வன வளம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் என்பன தொடர்பாக தொழில்சார் ஆலோசனைகள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்குதல்.

ii. தகவல்கள் மற்றும் தரவுகளை வழங்குதல், சாத்தியப்பாட்டு ஆய்வுகளை தயாரித்தல், சுற்றாடல் மீதான தாக்கங்களை மதிப்பீடு செய்யும் ஆய்வுகள் மற்றும் பூர்வாங்க சுற்றாடல் மதிப்பிட்டு அறிக்கைகள் என்பவற்றை தயாரித்தல்.

இ. வÆப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி

i. மகாவலி விவசாயிகளுக்கு உயர் தரம் வாய்ந்த விலங்குகளை வழங்குதல்.

ii. பால் மற்றும் இறைச்சி உற்பத்தி, சந்தைப்படுத்தல்.

ஈ. வÆப மகாவலி பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பெனி

i. மென் மற்றும் கனரக இயந்திர உபகரணங்கள் என்பவற்றுக்கு சேவைகளை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்.

ii. காணி அபிவிருத்தி ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளல் மற்றும் கனரக இயந்திர உபகரணங்களை வாடகைக்கு விடுதல்.

உ. வÆப மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) கம்பெனி

i. கட்டடங்கள், நீர்ப்பாசனம், காணி. நீர் வளங்கள், வீதிகள் போன்ற கட்டுமானச் சேவைத் துறைகள் தொடர்பாக ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

ii. கட்டடம், நீர்ப்பாசனம், காணி, நீர் வழங்கள் மற்றும் வீதி நிர்மாணம் என்பவற்றில் ஒப்பந்த வேலைகளை ஏற்றுக் கொள்ளல்.

**இணைந்த கம்பெனி**

வÆப மகாவலி கால்நடை வளங்கள் தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி

i. கோழி இறைச்சி (புரொய்லர்) உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

ii. மகாவலி விவசாயிகளுடன் அவர்கள் உற்பத்தி செய்யும் புரொய்லா் கோழி இறைச்சியை கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்.

## 2. கணக்கீட்டு அடிப்படை

2.1 **இணங்கியொழுகும் கூற்று :** நிதி நிலைமை குறித்த கூற்று, செயற்பாட்டு கூற்று, தேறிய சொத்துக்கள் மற்றும் உரித்துக்களில் ஏற்பட்ட மாற்றம் குறித்த கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்று மற்றும் கூற்றக்கள் தொடா்பான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக் கூற்றுக்களில் அடக்குகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளா் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் இலங்கை கணக்கீட்டுத் தர நியமங்களின் பிரகாரம் இந்த கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கணக்குக் கூற்றுக்கள் முன்னைய நிதியாண்டில் பின்பற்றப்பட்ட தர நியமங்களை பின்பற்றுகின்றன.

### 2.2 கணக்கீட்டு அடிப்படை

சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடா்பான வெளிப்படுத்துகைகள் தவிர, இந் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.3 செயற்படுத்தப்படும் மற்றும் சமர்ப்பிக்கப்படும் நாணய வகை

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படும் அனைத்து நிதித் தகவல்களும், மிகக் கிட்டிய ஆயிரம் ரூபா அளவில் காட்டப்பட்டுள்ளன.

### 2.4 மதிப்பீடுகள் மற்றும் முடிவுகளை பயன்படுத்துதல்

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது கணக்கீட்டுக் கொள்கைகள், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் என்பவற்றின் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதிளின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் சிறு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பவற்றை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. வரலாற்று ரீதியான அனுபவங்கள் மற்றும் தற்போதைய நிலவரங்கள் என்பவற்றின் பிரகாரம், நியாயமானவை என நம்பக் கூடிய எதிர்பார்ப்புக்களையும் உள்ளடக்கும் விதத்தில் முடிவுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலைமை இவ்வாறு இருப்பதனால் உண்மையான அனுபவங்கள் மற்றும் பெறுபேறுகள் அத்தகைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட முடியும்.

இந்த மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் தொடா்ச்சியான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக இருந்தால், அத்திருத்தங்கள் குறிப்பிட்ட காலப் பிரிவுக்கு உரியதாக இருந்து வரும் சந்தா்ப்பத்தில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.5 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

ஏனைய நிதிச் சொத்துக்கள், அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் மற்றும் மொறகஹகந்த கருத்திட்டம் என்பன சம்பந்தப்பட்ட மாற்றங்கள் தவிர,

கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த நிதியாண்டில் பயன்படுத்தப்பட்ட அதே கொள்கைகளாக இருந்து வருகின்றன.

## 3. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்தக் கணக்கீட்டு கூற்றுக்கள் செல்லுப்படியாகும் ஒட்டுமொத்த காலப் பிரிவின் போது, கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 3.1 ஒருங்கிணைக்கும் அடிப்படை

அறிக்கையிடப்பட்ட பெறுபேறுகள் மற்றும் சமமான முறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபை மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் கம்பெனிகள் என்பவற்றின் நிதிக் கூற்றுக்களின் மீள் கணிப்பீடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியான முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இதன் மூலம் தெளிவாகும் விடயம் இலங்கை மகாவலி அதிகார சபையை ஒரு தனி பொருளாதார கட்டமைப்பாக, இந்த ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் எடுத்துக் காட்டப்படும் நிதிசார் தகவல்கள் பிரதிபலிக்கின்றன என்பதாகும்.

3.1.2 அ. கம்பெனிகளின் நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வு பணிகள் இன்னமும் இடம்பெற்று வரும் காரணத்தினாலும்,

ஆ. கம்பெனிகளின் கணக்காண்டுகள் அதிகார சபையின் கணக்காண்டுகளிலும் பார்க்க வேறுபடுவதன் காரணமாகவும்,

ஒருங்கிணைப்பு செயற்பாடுகளின் போது வரைவு நிதிக் கூற்றுக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### 3.2 சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்

3.2.1 2009.01.01 க்கு பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் கொள்வனவு விலை அல்லது நிர்மாணச் செலவு மற்றும் அச்சொத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் செயற்பாடு தொடர்பாக செயற்படும் நிலைக்கு எடுத்து வருவதற்கு நேரடியாக இடம்பெற்ற செலவு போன்ற விடயங்களை உள்ளடக்கி "சொத்துக்களின் செலவு" என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அல்லது நிர்மாணிக்கப்பட்டிருந்த சொத்துக்கள் மீள் கணிப்பீடு செய்யப்பட்டு, 2009.01.01 திகதியன்று செல்லுபடியாகும் விதத்தில் கணக்கேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.2.2 முழு உரித்து காணிகள் தவிர, ஏனைய அனைத்துச் சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாக கொள்விலையின் அடிப்படையில் அல்லது மீள் கணிப்பீட்டின் அடிப்படையில் எளிய நேர்கோட்டு முறையில் பெறுமதி, தேய்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அச்சொத்தின் கொள்விலை அதன் ஆயுள் காலத்தின் பிரகாரம், பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுகின்றது. சொத்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதம் தொடக்கம் பெறுமதித் தேய்வு கணக்கிடப்படுவதுடன், கீழ்க் காணும் பெறுமதித் தேய்வு விகிதங்களின் பிரகாரம் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோட்டார் வாகனம் தொடர்பாக பெறுமானத் தேய்வு விகிதங்களை பயன்படுத்துவதற்கு முன்னர் 10மூ கழிவு மதிப்புக்கு இடமளிக்கப்படுகின்றது.

| | | வருடாந்தம் | |
|---|---|---|---|
| 1. | கட்டடங்கள் | - அலுவலக<br>- ஏனையவை | 2½மூ<br>5மூ |
| 2. | மோட்டார் வாகனங்கள் | | 20மூ |
| 3 | உபகரணம் | அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரி பண்டங்கள் | 15மூ |
| 4 | இயந்திர உபகரணங்கள் | - மின்சார ஜெனரேட்டர்கள் | 15மூ |
| 5 | இயந்திர உபகரணங்கள் | - கட்டுமானம் | 15மூ |
| 6 | இயந்திர உபகரணங்கள் | - பொது | 15மூ |
| 7 | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | - | 10மூ |
| 8 | கணினிகள் மற்றும் துணை உறுப்புக்கள் | - | 20மூ |
| 9 | அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் கருத்திட்டத்தின் அனைத்துச் சொத்துக்களும | - | 20மூ |

### 3.3 முதலீடுகள்

#### 3.3.1 இணைந்த கம்பெனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள்

இணைந்த கம்பெனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு கொள்விலையில் கணக்கிடப்பட்டு, ஐந்தொகையில் ஒரு நீண்ட கால முதலீட்டின் கீழ் புறம்பாக காட்டப்பட்டுள்ளது. இந்த முதலீடு கம்பெனியின் நிதி மற்றும் செயற்பாட்டு கொள்கை முடிவுகளின் மீது அதிகார சபைக்கு குறிப்பிடத்தக்க அளவிலான எத்தகைய செல்வாக்கையும் செலுத்த திருப்பதனால் அதனை தனியொரு அலகு என்ற முறையில் கணக்கீட்டுக்கு பயன்படுத்துவது பொருத்தமற்றதாகும்.

#### 3.3.2 ஏனைய முதலீடுகள்

ஏனைய முதலீடுகள் நீண்ட கால முதலீடுகளாக கருதப்பட்டு, கொள்விலையில் கணக்கிடப்பட்டு ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன.

### 3.4 ஏனைய நிதிசார் சொத்துக்கள்

ஏனைய நிதிசார் சொத்துக்கள் கொள்விலையில் கணக்கிடப்பட்டு, ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன.

### 3.5 பொருள் கையிருப்பு அறிக்கைகள்

பொருள் கையிருப்புக்கள் குறைந்த கொள்விலை மற்றும் பெற்றுக் கொள்ளக் கூடிய தேறிய பெறுமதி என்பவற்றில் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அடிக்கடி வழங்கப்படாத, குறைபாடுகளுடன் கூடிய மற்றும் பழம் பாணியிலான பண்டங்கள் தொடர்பாக தேவையான இடங்களில் ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.6 வியாபார மற்றும் கிடைக்க வேண்டிய ஏனைய ஆதாயங்கள்

வியாபார மற்றும் கிடைக்க வேண்டிய ஏனைய ஆதாயங்கள், ஐயக் கடன்கள் மற்றும் வாராக் கடன்கள் என்பவற்றின் ஒதுக்குகளை மேற்கொண்ட பின்னர் பெற்றுக் கொள்ளக் கூடிய அனுமானிக்கக் கூடிய பெறுமதியின் அடிப்படையிலேயே காட்டப்பட்டுள்ளன.

### 3.7 காசு மற்றும் காசுக்கு இணையானவை

காசு மற்றும் காசுக்கு இணையானவை, காசு நிலுவைகள் மற்றும் கேள்வியின் போது செலுத்தப்பட வேண்டிய வங்கி அதிகப் பற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் காட்டப்பட்டிருப்பதுடன், நிதிப் பாய்ச்சலை குறிப்பிடும் பொருட்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் நிதி முகாமைத்துவமும் ஒரு நிதிக் கூறாக காட்டப்பட்டுள்ளது.

### 3.8 வெளிநாட்டு உதவி

2010 டிசம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு வெளிநாட்டு உதவி வழங்கிய நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட திரண்ட கொடுப்பனவுகள் வெளிநாட்டு உதவியாக காட்டப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதியன்று நிலவி வந்த அந்நியச் செலாவணி விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவின் மதிப்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

### 3.9 பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்குகள்

ஐந்தொகையில் நடப்புச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்கள், கேள்வியின் போது செலுத்த வேண்டிய கடப்பாடுகள் மற்றும் ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தி தீர்க்க வேண்டியவையாகும். நடப்பல்லாத பொறுப்புக்கள் என்பதன் மூலம் காட்டப்பட்டிருக்கும் அனைத்தும், ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடம் முடிந்த பின்னர் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடுகள் ஆகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் அறிந்திருந்த அனைத்து பொறுப்புக்களும் கணக்கில் பதிவு செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 3.10 ஓய்வூதிய அனுகூலத் திட்டம்

அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வுப் பனிக்கொடையை வழங்குவதற்கான ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பனிக்கொடையை பெற்றுக் கொள்வதற்கு தகைமையை பெற்றுக் கொள்ளும் அரை மாதச் சம்பளம், முதல் பணியாண்டு தொடக்கம் ஒவ்வொரு வருட இறுதியிலும் கணக்கிடப்பட்டு, இந்த ஒதுக்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.11 வருமானக் கூற்று

3.11.1 திறைசேரியிலிருந்த கிடைக்கும் நிதியளிப்புக்கள், இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும் காணிகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் குத்தகைத் தொகைகள், உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள், முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் வட்டி என்பன இலங்கை மகாவலி அதிகார சபையின் வருவாயில் அடங்குகின்றன.

3.11.2 இலங்கை மகாவலி அதிகர சபைக்கு பொருளாதார பயன்கள் கிட்டும் அதிக வாய்ப்புக்களின் பிரகாரமும், நம்பகத் தன்மையுடன் கூடிய விதத்தில் அதனை அளவிடக் கூடிய ஆற்றலின் அடிப்படையிலும் வருவாய் கணக்கிடப்பட்டுள்ளது. குத்தகை

வருமானங்கள் ஏனைய வாடகைகள், அரசுக்கு சேர வேண்டிய கட்டணங்கள் மற்றும் வட்டி வருமானம் என்பன திரண்டு வரும் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

3.11.3 காணி குத்தகை வருமானமாக இவ்வருடத்தின் போது ரூ. 389.375 மில்லியன் கணக்குகளில் காட்டப்பட்டிருப்பதுடன், அதில் முன்னைய வருடங்கள் தொடர்பாக கணக்குகளில் சேர்க்கப்படாத நிலுவை குத்தகை வருமானத் தொகைகளும் அடங்குகின்றன.

## 3.12 செலவு

நிறுவனத்தின் நாளாந்தச் செலவுகள், சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை செயல்திறனுடன் பராமரித்து வருவதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகளையும் உள்ளடக்கிய விதத்தில் கவனத்தில் எடுக்கப்பட்டு, வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும் வருடத்தின் இலாபம் Æ நட்டம் கணக்கிடப்பட்டுள்ளது. வாராக் கடன்கள் மற்றும் ஐயக் கடன்கள், அறிந்திருக்கும் அனைத்துப் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள் என்பவற்றின் பெறுமானத் தேய்வு ஆகியவற்றுக்கென ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3.13 ஐந்தொகையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

ஐந்தொகையின் பின்னர் இடம்பெற்ற அனைத்து பௌதீக செயற்பாடுகளும் அவசியமான விதத்தில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

## 3.14 அவசர கால நிலைமைகள்

இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள் தொடர்பாக 2011.12.31 திகதியன்று நிலவி வரும் அவசர நிலை பொறுப்புத் தொகை ரூ. 144.23 மில்லியனாக இருந்து வந்தது.

**இலங்கை மகாவலி அதிகார சபை,**
**இல. 500, டீ. பி. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10**

**31.12.2012 இல் உள்ளவாறு ஒருங்கிணைந்த நிதி நிலைமை தொடர்பான அறிக்கை**

| | | குழுமம் | | அதிகார சபை | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. ஷ000 | ரூ. ஷ000 | ரூ. ஷ000 | ரூ. ஷ000 |
| | குறிப்பு | 2012 | 2011 | 2012 | 2011 |
| **<u>சொத்துக்கள்</u>** | | | | | |
| **<u>நடப்பல்லாத சொத்துக்கள்</u>** | | | | | |
| சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள் | | 3,732,900 | 4,011,792 | 3,638,945 | 3,916,040 |
| முதலீடுகள் | | 137,590 | 135,392 | 69,879 | 71,879 |
| இடம்பெற்று வரும் வேலைகள் | | 12,821 | | 12,821 | 12,821 |
| நடப்பல்லாத சொத்துக்களின் மொத்தம் | | 3,883,311 | 4,147,184 | 3,721,645 | 4,000,740 |
| | | | | | |
| **<u>நடப்புச் சொத்துக்கள்</u>** | | | | | |
| களஞ்சிய கையிருப்புக்கள் | | 161,801 | 157,725 | 151,211 | 132,913 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய தொகைகள் | | 893,430 | 684,392 | 1,278,726 | 1,032,354 |
| முற்கொடுப்பனவுகள் | | 1,548 | 19,470 | | 3,492 |
| வங்கி உத்தரவாதம் | | 2,210 | 2,160 | | |
| காசு மற்றும் காசுக்கு இணையானவை | | 121,802 | 143,521 | 98,549 | 142,139 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 1,180,791 | 1,007,268 | 1,528,486 | 1,310,898 |
| மொத்தச் சொத்துக்களின் தொகை | | 5,064,102 | 5,154,452 | 5,250,131 | 5,311,638 |
| **<u>பொறுப்புக்கள்</u>** | | | | | |
| **<u>நடப்பு பொறுப்புக்கள்</u>** | | | | | |
| கடனீந்டவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை | | 472,849 | 364,983 | 422,836 | 288,827 |
| திரண்ட செலவுகள் | | 61,525 | 47,494 | 45,717 | 31,468 |
| நடப்புச் சொத்துக்களின் மொத்தம் | | 534,374 | 412,477 | 468,553 | 320,295 |
| **<u>நடப்பல்லாத சொத்துக்கள்</u>** | | | | | |
| பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கு | | 1,077,205 | 1,022,674 | 1,075,013 | 1,021,217 |
| குத்தகை | | 9,269 | | | |
| வர வேண்டிய வரி | | 612 | 612 | | |
| நடப்பல்லாத பொறுப்புக்களின் மொத்தம் | | 1,087,086 | 1,023,286 | 1,075,013 | 1,021,217 |
| தேறிய சொத்துக்களின் மொத்தம் | | 3,442,642 | 3,718,689 | 3,706,565 | 3,970,126 |
| **<u>தேறிய சொத்துக்கள் Æஉரித்துக்கள்</u>** | | | | | |
| திரண்ட நிதியம் | | 22,870,420 | 23,009,463 | 22,851,058 | 22,989,946 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கு: முÆகொ வருமான செலவுக் கணக்கு நிலுவை | | (22,542,434) | (22,405,480) | (22,188,394) | (22,063,797) |
| வருமான ஒதுக்கு – கம்பெனிகள் | | 53,560 | 53,560 | | |
| மீள் கணிப்பீடு செய்யப்பட்டவை | | 3,061,097 | 3,061,146 | 3,043,901 | 3,043,978 |
| **தேறிய சொத்துக்கள்Æஉரித்துக்களின் மொத்தம்** | | **3,442,642** | **3,718,689** | **3,706,565** | **3,970,127** |

**இந்திராணி ராமநாயக்க**
பணிப்பாளர் நிதி
இலங்கை மகாவலி அதிகார சபை

**காமினி ராஜகருணா**
பணிப்பாளர் நாயகம்
இலங்கை மகாவலி அதிகார சபை

**31.12.2012 இல் முடிவடைந்த வருடத்தின் நிதிச் செயற்பாடு தொடர்பான அறிக்கை**

| அதிகார சபை | | | | குழுமம் | அதிகார சபை |
|---|---|---|---|---|---|
| ரூ. ஷ000 | ரூ. ஷ000 | | | ரூ. ஷ000 | ரூ. ஷ000 |
| 2011 | 2012 | | பட்டியல் | 2011 | 2012 |
| | | **வருமானம்** | | | |
| 181,584 | 181,584 | வரிகள் | | 389,376 | 388,298 |
| 18,281 | 18,281 | கிடைக்க வேண்டிய தொகைகள் | | 73,105 | 72,270 |
| 10,862 | 10,862 | ஆலோசனை சேவைகள் | | | |
| | 53,184 | ஒப்பந்த சேவைகள் | | 13,669 | |
| 12,916 | 14,600 | பண்ணை உற்பத்தி விற்பனைகள் | | 10,241 | 7,740 |
| 19,160 | 19,160 | சுழல் வருமானம் | | 13,362 | 13,362 |
| | 4,797 | முதலீட்டு வருமானம் (ஆஊடீஇ சேஆளு ரு ஏநவெரசந ஊயிவையட) | | 1,144 | |
| 72,463 | 73,218 | ஏனைய வருமானம் | | 132,160 | 107,760 |
| **315,266** | **375,686** | **உருவாக்கப்பட்ட வருமானம்** | | **633,057** | **589,430** |
| | | | | | |
| 1,780,000 | 1,780,000 | திறைசேரி அளிப்புக்கள் - மீள வரும் | | 1,735,500 | 1,735,500 |
| 867,289 | 867,289 | - மூலதனம் | | 1,471,388 | 1,471,388 |
| **2,962,555** | **3,022,975** | | | **3,839,945** | **3,796,318** |
| | | **கழிக்க செலவுகள்** | | | |
| 1,700,401 | 1,709,360 | சம்பளங்கள்Æவேதனங்கள் | | 1,826,449 | 1,814,010 |
| 25,548 | 25,798 | பயணச் செலவுகள் மற்றும் கொடுப்பனவுகள் | | 25,456 | 25,240 |
| 69,800 | 72,346 | வழங்கல்கள்Æ போக்குவரத்து | | 89,784 | 86,739 |
| 22,116 | 22,255 | பராமரிப்பு செலவுகள் | | 26,101 | 25,822 |
| 64,322 | 67,127 | ஒப்பந்த சேவைகள் | | 77,798 | 77,244 |
| 2,313 | 2,313 | காப்புறுதி | | 1,190 | 1,103 |
| 36,217 | 83,316 | ஏனை செலவுகள் | | 29,965 | 27,901 |
| 383,746 | 389,530 | பெறுமானத் தேய்வு | | 400,383 | 395,222 |
| 14,898 | 14,898 | வாராக் கடன் தொடர்பான ஒதுக்கு | | 2,814 | 2,814 |
| 867,289 | 867,289 | புனரமைப்பு, நிர்மாணம், ஏனைய பராமரிப்புக்கள், சமூக அபிவிருத்தி மற்றும் குடியேற்ற சேவைகள் | | 1,471,388 | 1,471,388 |
| **3,186,650** | **3,254,232** | **மொத்த செயற்பாட்டு செலவுகள்** | | **3,951,330** | **3,927,483** |
| **(224,095)** | **(231,257)** | செயற்பாடுகள் மூலம் கிடைத்த மிகைÆ(குறை) | | **(111,384)** | **(131,165)** |
| 7,595 | 7,595 | கூட்டு: சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபம்Æ (நட்டம்) | | 6,568 | 6,568 |
| | | கழிக்க: வரிகள் | | | |
| **(216,500)** | **(223,662)** | வரியின் பின்னர் மிகைÆ(குறை) | | **(104,816)** | **(124,597)** |
| (21,847,297) | (22,213,956) | 01.01.20012 இல் முÆகொ. நிலுவை | | (22,437,618) | (22,063,797) |
| **(22,063,797)** | **(22,437,618)** | முÆகொ. தேறிய நிறைÆகுறை | | **(22,542,434)** | **(22,188,394)** |

**இலங்கை மகாவலி அதிகார சபை,**
**இல. 500, டீ. பி. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10**

**31.12.2012 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | குழுமம் | அதிகார சபை |
|---|---|---|
| | 2012 | 2012 |
| | ரூ. ஷ000 | ரூ. ஷ000 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த பணப் பாய்ச்சல் (கடந்த வருடம் தொடர்பான சீராக்கங்களுடன்) | (143,521) | (131,165) |
| **காசு சாராத கொடுக்கல் வாங்கல்கள்** | | |
| பெறுமானத் தேய்வு | 400,384 | 395,222 |
| பனிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கு | 51,099 | 50,808 |
| தவணை தப்பிய தொகைகளுக்கென ஒதுக்கு | 2,814 | 2,814 |
| திரண்ட செலவு அதிகரிப்பு Æ ஒதுக்கு செயற்பாடுகள் | 14,031 | 14,249 |
| செலுத்த வேண்டிய தொகைகளில் அதிகரிப்பு Æ குறைவு | 120,567 | 134,008 |
| கையிருப்பில் அதிகரிப்பு Æ குறைவு | (6,890) | (18,298) |
| கிடைக்க வேண்டிய ஏனைய தொகைகளில் அதிகரிப்பு | (191,166) | (242,880) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல் | **247,318** | **204,758** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்** | | |
| சொத்து, இயந்திர உபகரணங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அசைவுகள் | (121,491) | (117,952) |
| சொத்துக்களை விற்பன்ன செய்ததன் மூலம் | 6,568 | 6,568 |
| முதலீடுகள் மற்றும் இடம்பெற்று வரும் வேலைகளில் அதிகரிப்பு | (15,019) | 2,000 |
| மூலதன இயல்பைச் சேர்ந்த பராமரிப்புச் செலவுகள் | (1,471,388) | (1,471,388) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்** | **(1,601,330)** | **(1,580,772)** |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்** | | |
| மூலதனம் | 1,332,296 | 1,332,424 |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசப் பாய்ச்சல் | **1,332,296** | **1,332,424** |
| காசு மற்றும் காசுக்கு இணையானவற்றில் தேறிய அதிகரிப்புÆ குறைவு | **(21,717)** | **(43,590)** |
| 01.01.2012 இல் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் நிலுவை | 143,521 | 142,139 |
| 31.12.2012 இல் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் நிலுவை | **121,802** | **98,549** |

**<u>கடந்த வருடம் தொடர்பாக ஒப்பிட்டு ரீதியான தகவல்களை மீளக் கணித்தல்</u>**

**நிதி நிலைமைகள் தொடர்பான தகவல்கள்ரூ.** **ஷ000**

| விவரம் | சொத்து இயந்திர உபகரணங்கள் | ஏனைய நிதிச் சொத்துக்கள் | இடம்பெற்று வரும் வேலைகள் | களஞ்சிய கையிருப்பு | வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவை | காசு மற்றும் காசுக்கு இணையானவை | கடனீந்தோருக்கு செலுத்த வேண்டியது | திரண்ட செலவு | திரண்ட நிதியம் | மூÆகோ வருமான செலவு கணக்கு நிலுவை | மீள் கணிப்பு ஒதுக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **01-01-2011 இல் நிலுவை** | 5,142,567 | 60,968,207 | 4,289,344 | 154,229 | 1,798,652 | 142,295 | 365,605 | 52,350 | 90,053,704 | (22,022,705) | 3,113,316 |
| சீராக்கங்கள் | | | | | | | | | | | |
| 1.அமைச்சு கருத்திட்டங்கள் தொடர்பாக சொத்துக்கள் செவுகள் | | | | | | | | | | | |
| அணைக்கட்டு பாதுகாப்பு., நீர்.வ முகாமைத்துவம் கருத்திட்டம் | (623,252) | (1,341,506) | | | (554,667) | | (27,774) | | (2,491,651) | | |
| மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டம் | (603,275) | | (4,289,344) | (21,316) | (211,631) | (156) | (49,004) | (20,882) | (4,945,406) | | (69,338) |
| 2. செலவு வகைப்படுத்தலில் ஏற்பட்ட தவறுகள் (ஏனைய நிதிச் சொத்துக்கள் | | (59,626,701) | | | | | | | | | |
| 3. 2011 ஆம் வருடம் வரையில் மூலதன இயல்பிலான பராமரிப்புச் செலவுகள் | | | | | | | | | (59,626,701) | | |
| 4. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கு | | | | | | | | (41,092) | | | |
| | **3,916,040** | **0** | **0** | **132,913** | **1,032,354** | **142,139** | **288,827** | **31,468** | **22,989,946** | **(22,063,797)** | **3,043,978** |
| | | | | | | | | | | | |

**இலங்கை மகாவலி அதிகார சபை,**
**இல. 500, டீ. பி. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10**

**பங்குடமையில் மாற்றம் தொடர்பான கூற்று**

| | | குழுமம் | | ரூ. ஷ000 |
|---|---|---|---|---|
| | **திரண்ட நிதியம்** | **ஒதுக்குகள்** | **பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்** | **மொத்தம்** |
| 01.01.2011 இல் நிலுவை | 20,358,803 | 3,116,032 | (22,287,186) | 1,187,649 |
| வருடத்தின் போது | 2,650,660 | (1,326) | (150,432) | 2,498,902 |
| **31.12.2011 இல் நிலுவை** | **23,009,463** | **3,114,706** | **(22,437,618)** | **3,686,551** |
| 01.01.2012 இல் நிலுவை | 23,009,463 | 3,114,706 | (22,437,618) | 3,686,551 |
| வருடத்தின் போது | (139,043) | (49) | (104,816) | (243,908) |
| 31.12.2012 இல் நிலுவை | **22,870,420** | **3,114,657** | **(22,542,434)** | **3,442,643** |
| | | | | |
| **பங்குடமையில் மாற்றங்கள் தொடர்பான கூற்று** | | **அதிகார சபை** | | **ரூ. ஷ000** |
| | **திரண்ட நிதியம்** | **ஒதுக்குகள்** | **பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்** | **மொத்தம்** |
| 01.01.2011 இல் நிலுவை | 19,477,445 | 3,248,508 | (21,847,297) | 878,656 |
| வருடத்தின் போது | 3,512,501 | (204,530) | (216,500) | 3,091,471 |
| 31.12.2011 இல் நிலுவை | **22,989,946** | **3,043,978** | **(22,063,797)** | **3,970,127** |
| 01.01.2012 இல் நிலுவை | 22,989,946 | 3,043,978 | (22,063,797) | 3,970,127 |
| வருடத்தின் போது | (138,887) | (77) | (124,597) | (263,561) |
| 31.12.2012 இல் நிலுவை | **22,851,059** | **3,043,901** | **(22,188,394)** | **3,706,566** |

# பாகம் III

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. LP/C/MASL/FA/2012/55 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 09 September 2014

10 SEP 2014

277

The Director General

Mahaweli Authority of Sri Lanka

**Report of the Auditor General on the Financial Statements of the Mahaweli Authority of Sri Lanka and its subsidiary companies for the year ended 31 December 2012 in terms of Section 14(2) (c) of the Finance Act. No. 38 of 1971**

---

Reference to my report even number dated 10 June 2014 on the above subject.

02. The Tamil version of the above mentioned report is sent herewith.

H.A.S.Samaraweera
Auditor General

Copies to: 1. Secretary - Ministry of Irrigation and Water Resources Management
2. Secretary - Ministry of Finance and Planning

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
My No. எல்பீ/சீ/எம்ஏஎஸ்எல்/எப்ஏ/2012/55

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date 2014 யூன் 10

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகாரசபை

**இலங்கை மகாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை மகாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்றுக்கள், உரிமையாண்மை மாற்றக் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2014 மே 26 ஆந் திகதி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில்

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය
தொலைபேசி
Telephone. 2887028 /034

ෆැක්ස් අංකය
பக்ஸ் இல
Fax No. 2887223

ඉලෙක්ට්‍රොනික් තැපැල්
ஈ மெயில்
E-mail. oaggov@sltnet.lk

கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை மகாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் - அதிகாரசபை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை மகாவலி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்

**கணக்குகளை ஒருங்கிணைத்தல்**

அதிகாரசபையினதும் அதன் 05 துணைக் கம்பனிகளினதும் கணக்குகள் ஒருங்கிணைக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் பிரதான 03 செயற்திட்டங்கள் அதிகாரசபையின் ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டில் நேரடியாக அமைச்சின் கீழ் செயற்பட்டிருந்த இரண்டு செயற்திட்டங்கள் அதிகாரசபையின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

(ஆ) துணைக் கம்பனிகளின் நிதியாண்டு ஏப்ரல் 01 முதல் மார்ச் 31 வரையாக காணப்பட்டதனால், 04 துணைக்கம்பனிகளின் 03 மாதங்களிற்கான கணக்குகள் மாத்திரம் கணக்காய்வு செய்யப்பட்டவையாக காணப்பட்டதுடன், எஞ்சிய 09 மாதங்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டவை அல்ல. ஒரு துணைக் கம்பனியின் கணக்குகள் 2007 முதல் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

**நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறைவடைதல்**

2011 ஆம் ஆண்டு வரை நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் ஏனைய நிதிச் சொத்தாக காட்டப்பட்டிருந்த உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாண மற்றும் மேம்படுத்தல் செலவினம், வீதிகளை செப்பனிடல், சமூக அபிவிருத்தி, விவசாய மற்றும் நீர்ப்பாசன வசதிகளை பராமரிப்பதற்கான செலவினங்களை மூலதன பராமரிப்புச் செலவினமாக இனங்காணப்பட்டு வருடாந்த நிதிச் செயலாற்றல் கூற்றின் ஊடாக பதிவழுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, 2012 ஆம் ஆண்டில் ரூபா 1.471 மில்லியன் பதிவழிக்கப்பட்டிருந்தது. அத்துடன், ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்றில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்கொண்டுவரப்பட்டிருந்த ஏனைய நிதிச் சொத்துக்கள் ரூபா 59.63 பில்லியன் திரட்டிய நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்றின் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 95 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. கணக்கீட்டுக் கொள்கையினை மாற்றுவதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கான அங்கீகாரத்தைப்

பெற்றுக்கொள்வதற்கு தொடர்புடைய பதிவேடுகள் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய பணிப்பாளர் நாயகத்தின் பதிலின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 893.4 மில்லியனாக இருந்ததுடன் அதில் கிடைக்க வேண்டிய குத்தகை வருமானம் ரூபா 478.7 மில்லியனாகும். அது பெறவேண்டிய வருமானத்தில் 53.5 சதவீதமாக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறவேண்டிய வருமானத்தில் 87 சதவீதம் அல்லது ரூபா 370 மில்லியன் கிடைக்க வேண்டிய குத்தகை வருமானம் என காணிகள் பிரிவின் அறிக்கைகளிலிருந்து வெளிப்பட்டது. அந்த குத்தகை வருமானத்தில் ரூபா 170 மில்லியன் தொகை அல்லது 45 சதவீதம் “எச்” வலயத்திலிருந்தும் 21 சதவீதம் “சீ” வலயத்திலிருந்தும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் கம்பனிக்கு நிராவிய மற்றும் கலங்குட்டிய பண்ணைகளின் உபயோகத்திற்காக அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த காணிக்காக வருடத்திற்குக் கிடைக்க வேண்டிய குத்தகை வாடகையினை கணிப்பிட்டு மீளாய்வாண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டு முதல் குறித்த குத்தகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய பணிப்பாளர் நாயகத்தின் பதில் கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 368,481,000 ஆகக் காணப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் அத் தொகை ரூபா 478,727,000 ஆக காணப்பட்டமையால் பெறவேண்டிய நிலுவை கணக்குகளின் பெறுமதி ரூபா 110,246,000 அல்லது 29 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஈ) காணிகள் பிரிவின் அறிக்கையின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சட்டரீதியற்ற விதத்தில் அனுமதியின்றி கைப்பற்றப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை 7,333 ஆக காணப்பட்டதுடன் இவற்றை சட்டரீதியாக மாற்றுவதில் காணப்பட்ட தாமதம் காரணமாக குத்தகை வாடகையினை பெற்றுக்கொள்ளக் கூடிய காணிகளிலிருந்தான குத்தகை வருமானம் அதிகாரசபைக்கு இழப்பாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) கணக்குகளின் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளிற்கான நிகழத்தக்க பொறுப்புக்கள் ரூபா 144.23 மில்லியனாகும்.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிச் செயலாற்றல் கூற்றின் படி 07 பிராந்திய செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகங்களிலிருந்து ஆண்டிற்காக பெறவேண்டிய குத்தகை வருமானம் ரூபா 357.9 மில்லியனாக காணப்பட்ட போதிலும், காணிகள் பிரிவின் அறிக்கையின் படி அந்த வருமானம் ரூபா 105.7 மில்லியனாக காணப்பட்டமையால் வருடாந்த வருமானத்தில் ரூபா 252.2 மில்லியன் தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.

### 2.2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுப் பரிசோதனைகளின் படி அதிகாரசபையின் இரண்டு பிராந்திய அலுவலகங்களினால் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் வாகனங்களிற்கு எரிபொருள் வழங்கியமைக்காகவும் உணவு பானங்கள் செலவினமாகவும் மீளாய்வாண்டில் ரூபா 879,844 செலவிடப்பட்டிருந்ததுடன் அத்தொகையினை அமைச்சிடமிருந்து மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்காக சான்றின்மை

ரூபா 370 மில்லியன் தொகையான பெறவேண்டிய குத்தகை வருமானம் தொடர்பான விபரமான அறிக்கைகள், காலப்பகுப்பாய்வு போன்றன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) மற்றும் (ஈ) | (i) குறித்தநோக்க உப கட்டுநிதியாக ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்பட முடியுமான உச்ச தொகை ரூபா 20,000 ஆன போதிலும், அதற்கு முரணாக ரம்புகன்ஓய செயற்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டில் ரூபா 196,000 வரை எல்லையினை மீறி முற்பணத் தொகைகள் வழங்கப்பட்ட 68 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br>நிறுவனச் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் |

தொடர்ச்சியாகவும் மேற்கொள்வதற்கு இந்த எல்லை தடையாக இருப்பதனால் இவ்வாறு எல்லையினை மீறி முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியிருப்பதாக 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தினால் பணிப்பாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

(ii) தெரிவுப் பரிசோதனைகளின் படி ரம்பகென்ஓய வலயத்திலும் மகாவலி பாதுகாப்புப் பிரிவின் அலுவலகங்களிலும் பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த முறையே 08 மற்றும் 100 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) குறித்த நோக்க உப கட்டுநிதிகள் கருமமம் நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 08 மாதங்கள் வரை முற்பணங்கள் தீர்க்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 03. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் செயற்பாட்டு விளைவுகள் அரசாங்கத்தின் பங்களிப்பினை கணக்கிலெடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 3,318,273,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,878,546,000 ஆக இருந்தது. ரூபா 3,206,888,000 தொகையான அரசாங்க பங்களிப்பைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 111,384,000 வரை குறைவடைந்திருந்ததுடன் ரூபா 2,647,289,000 தொகையான முன்னைய ஆண்டிற்கான அரசாங்கத்தின் பங்களிப்பைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் அந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 231,257,000 வரை குறைவடைந்திருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 119,873,000 தொகையான முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு கீழே தரப்படுகின்றது.

i. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறை ரூபா 119.8 மில்லியனால் அல்லது 48 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

ii. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் வழங்கல் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் 19 சதவீதத்தால் அல்லது ரூபா 17.4 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய செலவுகள் 64 சதவீதத்தால் அல்லது ரூபா 53.3 மில்லியனால் குறைவடைந்திருந்தது. மகாவலி மதியுரைச்சேவைகள் பணியகத்தின் ஏனைய நிர்வாகச் செலவுகள் குறைவடைந்தமையே ஏனைய செலவுகள் குறைவடைவதற்கு காரணமாகும்.

iii. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அதிகாரசபை மற்றும் அதன் துணைக்க கமபனிகளின் வருமானம் ரூபா 257.3 மில்லியனால் அல்லது 68 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் இறை (Royalty) வருமானம் ரூபா 54.8 மில்லியனால் அல்லது 299 சதவீதத்தாலும் குத்தகை வருமானம் ரூபா 207.7 மில்லியனால் அல்லது 114 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தமை அதற்கான காரணமாக இருந்தது.

iv. நிதிச் செயலாற்றல் கூற்றிலுள்ள முன்று ஆண்டுகளிற்கான தொகைகள் ஒப்பிடப்பட்டு கணிப்பிடப்பட்ட விகிதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| | % | % | % |
| மொத்த வருமானத்திற்கு அரசாங்க மானியம் | 73 | 86 | 86 |
| மொத்தச் செலவில் ஆளணி வேதனாதிச் செலவு | 73 | 52 | 56 |
| மொத்த செயற்பாட்டு வருமானத்தில் குத்தகை வாடகை வருமானம் | 61 | 74 | 83 |
| மொத்த வருமானத்திற்கு மொத்தச் செலவு | 103 | 105 | 119 |

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 4.1.1 கம்பனிகளை கலைத்தல்

05 துணைக் கம்பனிகளில் வரையறுக்கப்பட்ட வென்சர் கெபிரல் கம்பனி மற்றும் மகாவலி பொறியியல் சேவைகள் கம்பனி ஆகிய 02 கம்பனிகளை கலைப்பதற்காக பணிப்பாளர் சபை விஞ்ஞாபனம் 2010 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் கலந்துரையாடப்பட்ட பின்னர் தீர்மானம் எடுப்பதற்காக அது பிற்போடப்பட்டது.

மேற்படி பெயர் கொண்ட இரண்டு கம்பனிகளையும் வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக (தனியார்) கம்பனியையும் கலைப்பதற்காக 2013 நவம்பர் 23 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாகத்தினால் 2013 திசெம்பர் 04 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 4.1.2 ஒட்டுமொத்த காணி அபிவிருத்தி

மகாவலி பிரதான திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 14 வலயங்களுக்கான மொத்த காணியின் அளவு 420,170 ஹெக்டேயர்களாக இருந்தது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணியின் அளவு 102,528 ஹெக்டேயர்களாக இருந்ததுடன் மொறகஹகந்த செயற்திட்டத்தின் கீழ் தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்ற காணிகளின் அளவு 81,422 ஹெக்டேயர்களாகும். அதன் படி 236,220 ஹெக்டேயர் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக இன்னும் உறுதியான அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்று 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

மகாவலி பிரதான திட்டம் நடப்புத் தேவைகள், இயற்கை வளங்களின் தன்மை மற்றும் பயன்பாட்டினைக் கருத்திற்கொண்டு குளக் கட்டுக்கள் பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டமிடல் செயற்திட்டத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகவும், நிண்ட கால யுத்த சூழ்நிலையால் கைவிடப்பட்டிருந்த மாதுருஓய தெற்குக் கரையோர மற்றும் மணலாறு அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் 2013 திசெம்பர் 04 ஆந் திகதி பணிப்பாளர் நாயகம் வழங்கிய பதிலளிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 4.1.3 பண்ணைகள் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

கூட்டிணைந்த திட்டத்தின் படி 08 வலயங்களிலுள்ள 204.8 ஹெக்டேயர் மொத்த நிலப் பரப்பில் 16 பண்ணைகள் அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்பட்டன. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் நிதிக்கூற்றுக்களின் படி பண்ணைகளின் உற்பத்திகளிலிருந்து கிடைத்திருந்த வருமானம் ரூபா 10,241,000 ஆக காணப்பட்டதுடன், 2011 ஆம் ஆண்டின் வருமானம் ரூபா 14,600,000 ஆக காணப்பட்டமையால் ரூபா 4,359,000 வருமானக் குறைவு அவதானிக்கப்பட்டது. பண்ணை நிர்வாக மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பேணுகை திருப்தியற்ற நிலையில் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

### 4.1.4 கன்றுகளை பகிர்ந்தளிப்பதற்காக 105,000 விதைத் தேங்காய்களைக் கொள்வனவு செய்தல்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத விசேட நிகழ்ச்சித்திட்டத்திற்காக எல் வலயத்திலுள்ள புதிய குடியிருப்பாளர்களிற்கும்

வர்த்தகர்களிற்கும் தென்னங் கன்றுகளை வழங்குவதற்காக ரூபா 1,750,000 செலவிடப்பட்டு 2012 யூலை மாதத்தில் பெருந்தோட்டக் கம்பனியொன்றிடமிருந்து 50,000 விதைத் தேங்காய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அத்துடன் ரம்பகென்ஓய செயற்திட்டத்தின் மூலம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் தோட்டங்களிலிருந்தும் தனியார் துறையிடமிருந்தும் ரூபா 1,600,000 செலவிடப்பட்டு விதைத் தேங்காய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 50 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலம் விளைச்சலைப் பெற்றுத்தரும் தென்னை மரங்களுக்கான விதைகளைத் தெரிவு செய்கையில் தரம் தொடர்பில் நிபுணத்துவ நிறுவனமான தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு அபிவிருத்திச் சபை போன்ற நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்ப உதிவிகள் பெறப்பட வேண்டிய போதிலும், பொறுப்புடைய உத்தியோகத்தர்களால் அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்காமையால் இச் செலவினம் பொருளாதார ரீதியில் உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 4.1.5 கால்நடை வளர்ப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) எல் வலயம்

2011 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2012 ஆம் ஆண்டின் முந்திய சில மாதங்களிலும் விவசாயிகளிற்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 13,685,340 பெறுமதியான 200 ஆடுகள், 200 பசுக்கள் மற்றும் 20 காளை மாடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பில் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் பகிரங்க விலைகள் கோரப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) ரிதீமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம்

2011 செப்தெம்பர் 11 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி சாத்தயவள ஆய்வின் பின்னர் இச் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்கப்பட்டதாக கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய தயாரிக்கப்பட்ட சாத்தயவள ஆய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இச்செயற்திட்டத்தின் 2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கால்நடை வளர்ப்பின் கீழ் திட்டமிடப்பட்ட ரூபா 6,950,000 கிரயம் கொண்ட 07 செயற்பாடுகள் ஆண்டின் போது நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

விவசாயிகளுக்கு பசுக்களை வழங்குவதற்காக அமுல்படுத்தப்பட்டிருந்த பசுக்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான இலக்கு 75 பசுக்களை வழங்குவதாக இருந்த போதிலும், 45 பசுக்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தமையால் ஆண்டின் முன்னேற்றம் 60 சதவீதம் மாத்திரமேயாகும். அந்த பசுக்களைக் கொள்வனவு செய்கையில் கால்நடைகளின் தரங்கள் தொடர்பில் பிரமாணங்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்வதற்காக கமத்தொழில் உத்தியோகத்தர் ஒருவரின் உதவி பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.1.6 பயிற்சி நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான பிரதான பயிற்சி நிலையத்தினால் வலயத்தினுள் வாழ்கின்ற குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அவசியமான சுயதொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், "எச்" வலயத்தின் தெல்ஹிரியாவ மற்றும் "சீ" வலயத்திலுள்ள கிராந்துருகோட்டை போன்ற பயிற்சி நிலையங்களினால் காலத்திற்கேற்ற பயிற்சிப் பாடநெறிகள் ஒழுங்குசெய்யப்பட்டு நடத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

"எல்" வலயத்திற்குரிய பயிற்சி நிலையத்தின் பயிற்சி நடவடிக்கைகளிற்காக ஏறத்தாழ 10 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டில் எவ்வித பயற்சி நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த நிலையங்களிற்குரிய கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பன குறைப் பயன்பாட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

சூரியவெவ பயிற்சி நிலையத்தில் மாத்திரம் ஜூகீ மெசின் பயிற்சி, மணப்பெண் அலங்கரித்தல் மற்றும் கணனிப் பயிற்சி பாடநெறிகள் நடாத்தி வரப்படுவதுடன், அதன் ஒரு பகுதி இளைஞர் படையணி பயிற்சி நடவடிக்கைகளிற்காக தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகத்தினால் 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரம்பகென்ஓய வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தின் தாபன அபிவிருத்தி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளிற்காக ரூபா 3,250,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அலுவலகத்தினால் பயிற்சி நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மீளக் குடியமர்த்தலில் தாமதம் காரணமாக விவசாயிகள் சங்கங்களை தாபிக்க முடியாமையால் இவ் ஏற்பாட்டை பயன்படுத்த முடியாது போனதாக பணிப்பாளர் நாயகத்தினால் 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 4.1.7 சுற்றுலா விடுதிகளின் கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் கீழ் 17 சுற்றுலா விடுதிகள் காணப்பட்டதுடன், நுவரெலியா சுற்றுலா விடுதி 2011 யூன் முதல் திருத்த நடவடிக்கைகளிற்காக மூடிவிடப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இதன் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2012 இன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் படி சுற்றுலா விடுதிகளிலிருந்து கிடைத்திருந்த மொத்த வருமானம் ரூபா 2,792,000 ஆகும். சுற்றுலா விடுதிகளின் பராமரித்தல் மற்றும் கட்டுப்பாடு தொடர்பில் மீளாய்வாண்டில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**4.1.8 காணிகள் பிரிவின் செயலாற்றல்**

2009 முதல் 2012 வரை காணிகள் பிரிவின் செயலாற்றலை பரிசோதனை செய்ததில் 26 செயற்பாடுகளிற்காக இலக்கிடப்பட்ட 199,628 கருமங்கள் முழுவதும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், மேலும் 11 செயற்பாடுகளிற்காக கருமங்களின் செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யதார்த்தமற்ற முறையில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தமையும் செயலாற்றல்களை அடைய முடியாமைக்கு குறித்த பிரிவுகளின் வினைத்திறனின்மை காரணமாகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) காணிகள் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளிற்காக 1,506 காணித் துண்டுகளை பகிர்ந்தளிப்பதற்கு “எச்” வலயத்தின் வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தினால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 03 காணித்துண்டுகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. நில அளவையாளர் திணைக்களத்திடமிருந்து நில அளவைப் படங்களைப் பெற்றுக்கொள்வதிலும் மதிப்பீட்டாளர் திணைக்களத்திடமிருந்து அறிக்கைகளைப் பெறுவதிலும் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக மேற்குறித்த நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டதாக பணிப்பாளர் நாயகத்தினால் 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்காக 2,984 பல்வேறு உத்தரவுப் பத்திரங்களையும் 399 நீண்டகால குத்தகைகளையும் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 1,172 உத்தரவுப் பத்திரங்களும் 06 குத்தகைகளும் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) i. 2012 ஆம் ஆண்டில் மகாவலி விற்பனை நிலையத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உற்பத்திகளின் மொத்தப் பெறுமதி ரூபா 1,671,419 ஆக காணப்பட்டதுடன், அதில் 40 சதவீதம் அல்லது ரூபா 674,031 பெறுமதியானவை மகாவலி உற்பத்திகளாக இருக்கவில்லை. அதன்படி, மகாவலி உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக விற்பனை நிலையம் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், விற்பனை நிலையம் தாபிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

ii. வாரத்திற்கு இருமுறை மாத்திரம் புதிய பழங்கள் மற்றும் மரக்கறிகளை பெற்றுக்கொள்வதற்காக முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படுதல்

வேண்டுமென பணிப்பாளர் (விவசாயப் பயிர்கள் மற்றும் செயற்திட்டங்கள்) அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. விற்பனை நிலையத்தின் நிதிக் கட்டுப்பாடு அடங்கலாக அனைத்து நடவடிக்கைகளும் "காசாளராக" சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) விக்டோரியா அணைக்கட்டினை பராமரித்தல் கையேட்டின் 4.2.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருக்க வேண்டிய கொங்ரீட் தட்டுக்கள் பொருத்தப்பட்டுள்ள அணைக்கட்டுக் கதவுகளின் கேபிள்களின் நிலைமையினை பரிசோதிக்கும் நடவடிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்நடவடிக்கையை அணைக்கட்டு பாதுகாப்புச் செயற்திட்டத்தின் கீழ் விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக 2013 திசெம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை மின்சார சபையின் மொத்த நீர்மின் உற்பத்தியில் ஏறத்தாழ 50 சதவீதம் மகாவலி நீர்த்தேக்கங்களை சூழ நிர்மாணிக்கப்பட்டுள்ள நீர்மின் உற்பத்தி நிலையங்களால் உற்பத்தி செய்யப்படுவதுடன் பொல்கொல்ல, விக்டோரியா மற்றும் கொத்மலை போன்ற நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்களின் மீதுள்ள மின்சார விளக்குகளிற்கு மாத்திரம் 2012 ஆம் ஆண்டில் அதிகாரசபையால் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த மின்சாரக் கட்டணம் ரூபா 4,576,989 என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், விக்டோரியா அணைக்கட்டினை நிர்மாணித்த சந்தர்ப்பத்தில் அதன் ஆரம்ப மதிப்பீடுகளில் அணைக்கட்டின் மின்சாரத் தேவைக்காக சிறிய மின் உற்பத்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்கான உபகரணங்களையும் ஆரம்ப நிர்மாணக் கம்பனி வழங்கியிருந்தது. இருப்பினும் பின்னர் அந்த நிர்மாணம் கைவிடப்பட்டிருந்ததுடன், அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாது பாதுகாப்பின்றி பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்தது. நீர்தேக்கங்களை பராமரிப்பதற்கும் மின்சார சபை பயன்படுத்தும் நீரிற்காகவும் கட்டணம் செலுத்தப்படாமையால் இப் பிரதான அணைக்கட்டுக்களின் மின்சாரத் தேவையினை இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபை கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

(ஈ) நீர்த்தேக்க பாதுகாப்புப் பிரதேசத்தினுள் அத்துமீறிக் குடியேறல்

பொல்கொல்ல, கொத்மலை, போவதென்ன, மாபாகட, மாதுருஓய மற்றும் விக்டோரியா நீர்த்தேக்கங்களைச் சூழவுள்ள பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தினுள் அனுமதியின்றிய 655 குடியிருப்பாளர்கள் உள்ளமை வெளிப்பட்டிருந்ததுடன், இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் மீண்டும் மீண்டும்

குடியேறும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் வருகையை தடுப்பதற்கும் அதிகாரசபை தவறியிருந்தது.

பணிப்பாளர் நாயகத்தின் பதிலின் படி இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்காக பாராளுமன்ற ஆலோசனைச் சபையின் துணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் தீர்மானத்தின் படி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) எல் வலயத்தினுள் குளாய்க் கிணறுகளை நிர்மாணித்தல்

ஆண்டின் போது 10 குளாய்க் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு குளாய்க் கிணறேனும் புதிதாக நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் 06 குளாய்க் கிணறுகளை புனரமைப்பதற்காக நீர் வழங்கல் சபைக்கு ரூபா 1,048,992 தொகை 2012 பெப்ரவரி மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 வரை இதில் 04 குளாய்க் கிணறுகள் மாத்திரம் புனரமைக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய கிணறுகளை புனரமைத்தல் கைவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக நீர்வழங்கல் சபைக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 318,864 தொகையினை மீள அறவிட்டுக் கொள்வதற்கோ அல்லது அந்த நடவடிக்கைகளை செய்துகொள்வதற்கோ அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

2012 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் மூலதனச் செலவின மதிப்பீடு ரூபா 2,050 மில்லியனாக காணப்பட்டதுடன், கணக்குகளின் படி செலவினம் ரூபா 1,486 ஆகும். ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 564 மில்லியன் அல்லது 27.51 சதவீதமாக காணப்பட்டதுடன் பின்வரும் செயற்திட்ட நடவடிக்கைகள் பொதுவாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை இதற்குக் காரணமாக இருந்தது.

| செலவு அலகு | மொத்த செயற்திட்டக் கிரயம் | 2012 ஆம் ஆண்டிற்காக | | | | | செயலாற்றல் குறைவடைவதற்குக் காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டுத் தொகை | கிடைத்த தொகை | செலவிடப்பட்ட தொகை | மதிப்பீட்டுத் தொகையின் படி ஏற்பாட்டின் சேமிப்பு | சேமிப்பு சதவீதமாக | |
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | | |
| i. ரிதீமாலியத்த செயற்திட்டம் | - | 100 | 15 | 45.7 | 54.3 | 54.3 | பதவியணி வெற்றிடம் மற்றும் சீரற்ற காலநிலை |
| ii. ரம்பகன்ஓய செயற்திட்டம் | 1086 | 100 | - | 29 | 71 | 71 | ரம்பகென்ஓய நீர்தேக்கத்தின் நிர்மாணத்தை பூரணப்படுத்துவதில் தாமதம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| iii. கிவுல்ஓய செயற்திட்டம் - எல் வலயம்20 | - | 100 | - | 3.33 | 96.7 | 96.7 | சுற்றாடல் ஆய்வொன்றை மேற்கொள்வதில் தாமதம் |
| iv. மகாவலி வலயச் செலவினம் | - | 846 | 670 | 674 | 172 | 20 | கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் |
| v. தலைமை அலுவலகம் | - | 292 | 130 | 118 | 174 | 59 | கட்டுநிதி கிடைப்பதில் தாமதம் |
| vi. விவசாய உற்பத்தித்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | - | 121 | 61 | 107 | 14 | 11 | சீரற்ற காலநிலை |
| vii. கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | - | 132 | 1 | 15 | 17 | 53 | தரமான பசுக்களை பெற்றுக்கொள்வதில் தாமதம் |

ரிதீமாலியத்த, ரம்பகன்ஓய மற்றும் கிவுல்ஓய செயற்திட்டங்களிற்காக ஆண்டின் போது திரட்டிய நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகை ரூபா 300 மில்லியனாக காணப்பட்ட போதிலும், அச் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த தொகை ரூபா 15 மில்லியனாக மாத்திரமாக காணப்பட்டமையால் ரூபா 63.03 மில்லியன் செலவினம் அதிகாரசபையின் நடவடிக்கைகளிற்காக கிடைத்திருந்த தொகையிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

எல் வலயத்தின் இருப்புப் புத்தகத்தின் படி 04 வருடங்களிற்கும் மேற்பட்ட காலமாக அசைவுறாதிருந்த இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,263,396 ஆக காணப்பட்டதுடன், இது இருப்பிற்காக தேவையற்ற நிதி பயன்படுத்தல் என்பது அவதானிக்கப்பட்டது.

## 4.5 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

ஒப்பந்த நிர்வாகம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களிடையே உரிய திகதிகளில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்காமையால் இரத்துச் செய்யப்பட்டிருந்த ஒப்பந்தங்கள், இடைநடுவில் ஒப்பந்தங்களை கைவிட்டுச் சென்றிருந்த ஒப்பந்தக் காரரர்கள் மற்றும் ஒப்பந்தங்களின் கீழ் வேலைகளைத் தொடங்காதிருந்த 05 ஒப்பந்தக்காரர்களின் பெயர்களை ஏய்ப்புச்செய்தோர் பட்டியலில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வேலைகள் ஆரம்பிக்கப்படாத ஒப்பந்தக்காரர்களின் கேள்விப் பிணைப்ப பணத்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், இரண்டு சந்தர்ப்பங்களில் வேலைகள் ஆரம்பிக்கப்படாத ஒப்பந்தக்காரர்களின் கேள்விப் பிணைப்பணங்களை சுவீகரிப்பதற்கு அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

(இ) ஒப்பந்தக்காரர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சிட்டைகளைப் பரிசோதித்து தலைமை அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கையில் தேவையற்ற தாமதங்கள் செய்யப்பட்டிருந்த 06 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

## 4.6 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) "எச்" வலயத்தின் வதிவிட வணிக முகாமையாளரால் 2010 மே மாதம் முதல் 2011 திசெம்பர் வரை அவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு மேலதிகமாக இன்னொரு வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வாகனம் 2010 மே மாதம் முதல் 2011 திசெம்பர் வரை அலுவலக வளவிற்கு வருகை தராதிருந்தமை பாதுகாப்புப் பிரிவினால் பேணப்பட்டிருந்த நுழைவுப் பதிவேட்டின் படி அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், வதிவிட வணிக முகாமையாளரால் அந்த சகல பயணங்களிற்காகவும் அவரது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த வாகனத்தின் சாரதி வாகனத்தின் நாளாந்த ஓட்ட நடவடிக்கைகள் தம்புத்தேகமவிலிருந்து ஆரம்பிக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்த போதிலும், 2010 பெப்ரவரி முதல் 2011 திசெம்பர் வரை அவர் எந்தவொரு நாளிலும் தம்புத்தேகம அலுவலகத்தின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேட்டில் கையொப்பமிட்டிருக்கவில்லை.

இந்த வாகனத்தை அலுவலகத்தில் பயன்படுத்தாத காலத்தினுள் திருத்தல் மற்றும் 04 டயர்களை இடுவதற்காக ரூபா 201,385 செலவினம் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான ஆரம்ப விசாரணையொன்று தொடங்கப்பட்டுள்ளதாக பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 செப்தெம்பர் 16 ஆந் திகதி முதல் "எச்" வலயத்தின் வதிவிட வணிக அலுவலகத்திற்கு மேலுமொரு வதிவிட வணிக முகாமையாள் நீதிமன்றக் கட்டளையின் படி இணைப்புச் செய்யப்பட்டிருந்தார். இந்த இரண்டு உத்தியோகத்தர்களினாலும் அங்கீகாரமின்றி 2011 ஆம் ஆண்டில் வாகனங்களிற்காக ரூபா 682,298 தொகைக்கு மேலதிக எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

4.7 **ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதிகாரசபைக்குச் சொந்தமான 06 வாகனங்கள் முன்னைய விவசாய அபிவிருத்தி அமைச்சினாலும் இன்னும் 16 வாகனங்கள் நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினாலும் இன்னும் 06 வாகனங்கள் ஏனைய அரசாங்க தரப்பினர்களினாலும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

05. **கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாட்சியும்**

5.1 **கூட்டிணைந்த திட்டம்**

2012 ஆம் ஆண்டில் 2012 முதல் 2016 வரையான 05 ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மஹிந்த சிந்தனை பத்து ஆண்டுத் திட்டத்தின் பிரகாரம் நீர்ப்பாசனப் பிரிவினால் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள் தொடர்பாக கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான உபாய வழிகளை இனங்கண்டு அவற்றினை அமுல்ப்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 **செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்தந்த கருமங்களிற்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

5.3 **உள்ளகக் கணக்காய்வு**

2010 நவம்பர் 30 ஆந் திகதியிலிருந்து பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2013 நவம்பர் 15 ஆந் திகதி வரை அப்பதவிக்கு தகைமை பெற்ற ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.4 **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.1 ஆம் பிரிவின் படி ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டினுள் 03 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

5.5 **கொள்வனவுத் திட்டம்**

2012 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது போதியளவில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டுக் கட்டுப்பாடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாக ஈடுபடுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதாவது ஆண்டின் இறுதியின் போது இடம்பெற்ற செலவுகளை கவனத்தில் கொண்டு அதற்கிணங்க மொத்தச் செலவு மாற்றமடையாத வகையில் பாதீடு திருத்தப்பட்டு அப்பாதீட்டிற்காக மீண்டும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் பணிப்பாளரது நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காணிகளை குத்தகைக்கு வழங்குதல்

(ஆ) கட்டிடங்களின் பயன்பாடு

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்

  i. விவசாய நிகழ்ச்சித்திட்டம்

  ii பசுமாட்டு நிகழ்ச்சித்திட்டம்

  iii. நன்னீர் மீன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) பயிற்சி நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்

(ஊ) பண்ணை நிர்வாகம்

(எ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஏ) குத்தகை சேகரிப்பு

(ஐ) வாகன ஒதுக்கீடும் கட்டுப்பாடும்

(ஒ) விவசாய குழுக்களுடன் உடன்படிக்கையின் மூலம் வேலையாட்களைப் பெற்றுக்கொள்ளல்

(ஓ) முற்பணங்களை வழங்குதல்

(ஔ) செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# பாகம் IV

# பணிப்பாளர் நாயகத்தின் குறிப்புக்கள

**இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் அதன் மூலம் நிர்வகிக்கப்படும் கம்பெனிகள் என்பவற்றின் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் குறித்த 1971 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தின் 14 (2) "ஊ" பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளரின் அறிக்கைக்கு விளக்கமளித்தல்**

**2. நிதிக் கூற்றுக்கள்:-**

**2.2 நிதிக் கூற்று தொடர்பாக கருத்து தெரிவித்தல்**

2.2.1 **ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் -**

(அ) இந்த விடயத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் மற்றும் மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டம் மகாவலி என்பன அதிகார சபையின் செலவுத் தலைப்பு மற்றும் நிர்வாகத்திலிருந்து அகற்றப்பட்டு, அமைச்சின் செலவுத் தலைப்பு மற்றும் நிர்வாகம் என்பவற்றுக்குள் எடுத்து வரப்பட்டமையினால் அதிகார சபையின் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டது.

(ஆ) வÆப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி தவிரÉ ஏனைய கம்பெனிகளின் 2013 மார்ச 31 வரையிலான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் இப்பொழுது கணக்காய்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள் :-**

பணிப்பாளர் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது ( பின்னிணைப்பு 01)

**2.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் :-**

(அ) ஏற்றுக் கொள்கிறேன். நிலுவை வருமானத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கென அனைத்து வலயங்களிலும் நிலுவைத் தொகை ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. நிலுவை வரித் தொகைகளை 36 மாதங்களுக்குள் செலுத்தித் தீர்ப்பதற்கென ஒரு பாகம் பட்டியலிடப்பட்டிருப்பதுடன், இன்னொரு பாகம் தொடர்பாக உரித்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்கென சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்துள்ளது.

(ஆ) வினா சம்பந்தப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்கிறேன். இக்கம்பெனி ஆரம்ப கட்டத்தில் மகாவலி கம்பெனியொன்றாக செயற்பட்டு வந்தமையினால் வரி அறவிடப்படவில்லை. இப்பொழுது இக்கம்பெனி, அமைச்சின் மீளமைப்பு செயற்பாட்டின் கீழ் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் எடுத்து வரப்பட்டிருப்பதனால், எதிர்காலத்தில் வரித்தொகைகளை கணக்கிட்டு, உரிய விதத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) இந்நிலைமையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஒரு கடினமான ஒரு செயலாகும். வருடாந்தம் காணிகளிலிருந்து அறவிடப்படும் வரித் தொகைகள் திருத்தப்படுவதும், சட்ட விரோதமான ஆக்கிரமிப்புக்களை முறைப்படுத்துவதில் புதிய மதிப்பீட்டு அடிப்படையில் வரி அறவிடப்படுவதும், 05 ஆண்டுக்கொரு முறை மதிப்பீட்டு வரி அதிகரிக்கப்படுவதும் புதிய வரிகள் வழங்கப்படுவதன் அடிப்படையில் ஒவ்வொரு

வருடத்தின் போதும் அறவிடப்பட வேண்டிய வரி இலக்கு உயர்ந்து செல்வது காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்படுகின்றது.

(ஈ) இந்த சட்ட விரோதமான ஆக்கிரமிப்புக்கள் அனைத்தையும் முறைப்படுத்தியிருந்த போதிலும், இந்தக் காணிகள் அனைத்திலிருந்தும் வரி அறவிட முடியாது. அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் முறைப்படுத்தக் கூடிய காணிகளிலிருந்து மட்டுமே வரியை அறவிட்டுக் கொள்ள முடியும். எவ்வாறிருப்பினும், இந்த சட்ட விரோதமான ஆக்கிரமிப்புக்கள் பெரும்பாலானவை காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் முறைப்படுத்தக் கூடிய பிரதேசங்களில் அமைந்திருப்பதுடன், சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் பெரும்பாலானவர்கள் குறைந்த வருமானப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்து வருவதனால் வரி அறவிட முடியாதுள்ளது.

(உ) அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள் தொடர்பான பொறுப்புக்கள் ரூ. 144 மில்லியன் ஆகும். இலங்கை மகாவலி அதிகார சபையில் பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் மற்றும் ஓய்வு பெற்றிருக்கும் ஊழியர்கள் நட்ட ஈடு கோரியும், பல்வேறு தரப்பினர் சொத்துக்கள் தொடர்பாக வழக்குகளை தாக்கல் செய்திருப்பதனாலும் அந்த வழக்குகளின் பெறுமதிக்கு இணையான பிணைத் தொகையை வைப்புச் செய்ய வேண்டியிருக்கின்றது. இத்தகைய பொறுப்புக்கள் அதிகரித்துள்ளன. இது வெளித் தரப்பினரின் செயற்பாடுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் ஒரு விடயமாக இருந்து வருவதனால் இதனை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகச் சிரமமானதாகும்

## 2.2.4 <u>இணக்கப்படுத்தப்படாத கணக்குகள் :-</u>

**வரி வருமானம்**

வலய அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வரும் வரி ஆவணங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட நிலுவை வருமானத்தை மீண்டும் பரீட்சித்து, சரியான வரி அளவுகளை உரிய விதத்தில் இனங்கண்டு திருத்தப்பட்ட கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் வரி வருமானங்கள் சரியானது என தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த வருடங்கள் தொடர்பாக கணக்கில் சேர்க்கப்பட்டிராத நிலுவை வரி வருமானம் மற்றும் 05 வருடத்திற்கு ஒரு முறை வரி புதிதாக மதிப்பீடு செய்யப்படுதல் என்பவற்றின் காரணமாக நிலுவை வரி வருமானத்தில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு இங்கு வருடம் தொடர்பான வருமானமாக கருதி கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

## 2.2.5 <u>ஒழுங்கீனமான கொடுக்கல் வாங்கல்கள்</u>

இலங்கை மகாவலி அதிகார சபை சம்பந்தப்பட்ட கௌரவ அமைச்சர் அவர்களின் வெளிக்கள கடமைகளுக்கென வருகை தரும் சந்தர்ப்பங்களில் அந்த வாகனங்களுக்குத் தேவையான மேலதிக எரிபொருளை வழங்குவதற்கென இந்தச் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் செலவை ஈடு செய்யும்படி அமைச்சரின் செயலாளரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2.2.6 <u>கணக்காய்வுக்கு சான்றுகள் கிடைக்காமை</u>

கிடைக்க வேண்டிய வரி வருமானம் தொடர்பாக விரிவான ஓர் அறிக்கை மற்றும் காலப் பிரிவு தொடர்பான ஒரு பகுப்பாய்வு என்பன தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அவை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். விபரமான விளக்க அறிக்கைகள் வலய அலுவலகங்களில் (காணி வரி பட்டியல்கள்) வைக்கப்பட்டுள்ளன.

2.3 **சட்டத்திட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை**

அ) ைஇ ைைஇ ைைை ஏற்றுக் கொள்கின்றேன்.

இந்நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டிருப்பதுடன், இனி வரும் வருடங்களில் அதன் பிரகாரம் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 03. நிதி மீளாய்வு

3.1 அறிக்கையிடப்பட்டிருக்கும் பிரகாரம் ஒருங்கிணைந்த நிதிப் பெறுபேறுகள் ஒரு வளர்ச்சியை காட்டுகின்றன.

3.2 **விளக்கமான நிதிசார் மீளாய்வு**

i. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது பற்றாக்குறை குறைவடைந்துள்ளது.

ii. இலங்கை மகாவலி அதிகார சபையில் இருக்கும் வாகன ஒதுக்கில் 50மூ க்கு மேற்பட்ட வாகனங்கள் 20 வருடத்திற்கு மேற்பட்ட வாகனங்களாக இருந்து வருகின்றன. எனவே, அவற்றின் பழுதுபார்ப்பு வேலைகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுவதனால் வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரித்துள்ளன. அதே போல எரிபொருள் விலையேற்றம் காரணமாக, மேலதிக எரிபொருள் செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ைைஇ ை ஏற்றுக் கொள்கின்றேன்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு :-

**4.1** செயலாற்றுகை

### 4.1.1 கம்பெனிகளை கலைத்தல்

ஏற்றுக் கொள்கின்றேன்.

### 4.1.2 ஒட்டுமொத்த காணி அபிவிருத்தி

மகாவலி திட்டம் தற்கால சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் காலநிலை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதுடன், சமகாலத் தேவைகள் மற்றும் இயற்கை வளங்களின் இயல்பு மற்றும் பாவனை என்பவற்றை கவனத்தில் எடுத்து அதனை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணி அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கீழ் இடம்பெற்று வருகின்றது. எவ்வாறிருப்பினும், நீண்ட காலமாக இடம்பெற்று வந்த போர் சூழலில் கைவிடப்பட்டிருந்த மாதுருஓயா வலது கரை மற்றும் வெலிஓயா அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் அபிவிருத்தி செய்யப்படக் கூடிய நிலப் பிரதேசங்கள் தொடர்பான திட்டம் திருத்தத்தின் பின்னர் முடிவு செய்யப்படும்.

### 4.1.3 பண்ணை நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

அ) 2012 ஆம் வருட தொடக்கத்திலிருந்து வருடத்தின் நடுப் பகுதி வரையில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமை மற்றும் வருடத்தின் இறுதிக் காலாண்டின் போது இடம்பெற்ற மிதமிஞ்சிய அளவிலான மழைவீழ்ச்சியுடன் கூடிய காலநிலை என்பன பண்ணை வருமானங்களின் வீழ்ச்சிக்கு வழிகோலியிருந்தன. அதே போல வருடாந்த சாகுபடி பயிர்களின் நீர் ஆயுள் காலம் முடிவடைந்து புதிய பயிர்களை பயிரிட்டு வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு நீண்ட காலம் எடுப்பதும் வருமானம் குறைவடைவதற்கு ஒரு காரணமாக இருந்துள்ளது. அதே போல முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் இல. 30 சுற்றறிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஒப்புதலை பெற்றிராமை காரணமாக பண்ணை முகாமையாளர்கள் இல்லாதிருந்தமையும், பண்ணைகளை சிறந்த முகாமைத்துவத்துடன் நடத்திச் செல்ல முடியாதிருந்தமையும் வருமானம் குறைவடைவதற்கு காரணமாக இருந்துள்ளன. எவ்வாறிருப்பினும், ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஒப்புதலை பெற்று, ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்திருப்பதனால் பண்ணை நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### 4.1.4 விநியோகிப்பதற்கென 105,000 தெங்கு விதைகளை கொள்வனவு செய்தமை

தென் மாகாணத்தில் தீவிரமாக பரவி வரும் தெங்குப் பயிர் நோய் நிலைமையின் கீழ் பாரிய அளவில் தெங்கு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கான ஒரு நிவர்த்தி நடவடிக்கையாக அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் புதிதாக தெங்குச் செய்கை செயற்படுத்தப்பட்டது. அதன் கீழ் ரம்பக்கன்ஓய கருத்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் 50,000 தென்னங்கன்றுகளையும், புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய விதத்தில் ஷடு“ வலயத்தில் 55,000 தென்னங்கன்றுகளையும் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தக் கொள்வனவுகள் பிரதேச கொள்வனவு கமிட்டி மற்றும் திணைக்கள கொள்வனவு செயற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், நிபுணத்துவ அறிவைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் கூட ஷடு“ வலயத்தின் தொழில்நுட்ப கமிட்டியில் விவசாய பட்டதாரியொருவர் வலயத்தின் விவசாய உத்தியோகத்தராக இருந்து வருவதனாலும், ரம்பக்கன்ஓய வலயத்தின் தொழில்நுட்ப கமிட்டியின் உறுப்பினராக விவசாய பட்டதாரியொருவர் பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளராக இருந்து வருவதனாலும் அவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். அதே போல தெங்கு விதை தொடர்பாக தெங்கு விதைகளுக்கென வழங்குவதில் நிபுணத்து அறிவைக் கொண்டிருக்கும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் குருநாகல் பெருந்தோட்ட கம்பெனி என்பவற்றிலிருந்து 100,000 தேங்காய்கள் பெறப்பட்டுள்ளன. அதே போல தேங்காயின் பெரிய அளவு மட்டும் ஒரு தரநியமமாக இருந்து வருகின்றது எனக் கருத முடியாது. வேறு விடயங்களும் அதனுடன் சம்பந்தப்பட்டுள்ளன. மேலும், இந்த தெங்கு விதைகளில் 90மூ க்கு மேற்பட்டவை வளரக் கூடிய ஆற்றலை கொண்டிருந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், அரசாங்கத்திற்கு ஒரு நட்டம் ஏற்படவில்லை என்பதனையும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

### 4.1.5 கால்நடை வளர்ப்பு

(அ) ஷடு“ வலயம்

வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் விலங்குகளின் எண்ணிக்கை மற்றும் விலை அளவுகள் சரியானவையாகும். கொள்வனவு வழிகாட்டுதல்கள் தொகுதியின் 3.2 பிரிவின் பிரகாரம் பகிரங்கமாக விலைப் புள்ளிகள் கோரப்படாவிட்டாலும் இக்கொள்வனவுகள் தொடர்பாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திடமிருந்தும், மகாவலி விலங்குப் பண்ணைகள் மற்றும் தேசிய கால்நடை அபிவிருத்த சபையிடமிருந்தும் விலைப் புள்ளிகள் கோரப்பட்டிருந்தன.

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையிடமிருந்து மட்டும் விலங்குகளை பரீட்சிப்பதற்கு அழைப்புக் கிடைத்தது. அதன் பிரகாரம் அந்த விலங்குகள் பரீட்சிக்கப்பட்ட போதிலும், பொருத்தமான நிலையிலான மாடுகள் அதிக எண்ணிக்கையில் இல்லாதிருந்தமையால் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டது.

(ஆ) ரிதிமாலியத்த அபிவிருத்தி கருத்திட்டம்

இது தொடர்பாக சாத்தியப்பாட்டு ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். எவ்வாறிருப்பினும், பிரதேச செயலாளர் அலுவலக ஒருங்கிணைப்பு கமிட்டியின் பரிந்துரையின் பேரில் இனங்காணப்பட்ட ஒரு சில விசேடமான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் பொருட்டு இத்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதுடன், அதற்கென தேசிய கொள்வனவு திணைக்களத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், வருடாந்தம் வரவு செலவு ஒதுக்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. கேள்வியில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்குகள் சரியானவையாகும்.

கறவை மாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 75 கறவை மாடுகளை வழங்குவது இலக்காக இருந்து வந்த போதிலும் வருட இறுதியில் 45 கறவை மாடுகள் வழங்கப்பட்டிருந்தன. அது 60மூ ஆகும். விலங்குகளை வழங்குவதிலுள்ள சிரமங்கள் காரணமாக இலக்கினை 100மூ நிவேற்றிக் கொள்ள முடியாதிருந்தது.

### 4.1.6 பயிற்சி நடவடிக்கைகள்

(அ) மகாவலி திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் குடியேற்றவாசிகளின் பிள்ளைகள் மற்றும் குடியேற்றவாசிகளுக்கு தொழில் பயிற்சியை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் இந்நிலையம் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் தற்பொழுது அரசு மற்றும் அரச சாராத நிறுவனங்களினால் நடத்தப்பட்டு வரும் பயிற்சி நிலையங்கள் பெரும் எண்ணிக்கையில் பரவி இருப்பதனால் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது சிரமமாக இருந்து வருகின்றது. 2014 ஆம் வருடத்தின் போது இந்த பயிற்சி நிலையத்தை புனரமைப்பு செய்து, ஊழியர்களின் பயிற்சிக்கு அதிக முன்னுரிமையை வழங்கி, குடியேற்றவாசிகளின் பயிற்சி நடவடிக்கைகளை முடியுமான வரையில் விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஷடு“ வலயத்தில் போதிய வசதிகளுடன் கூடிய கூட்டங்களை நடத்துவதற்கான மண்டபம் ஒன்று இல்லாதிருப்பதனால் பயிற்சி நடவடிக்கைகளை போலவே பலவேறு கூட்டங்களை நடத்துவதற்காகவும் இந்த நிலையம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) ரம்பக்கன் ஓய வதிவிட கருத்திட்ட முகாமையாளர் அலவலகத்தின் நிறுவன அபிவிருத்தி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 3,250,000 தொகையை, மீள் குடியேற்றம் தாமதமடைந்ததன் காரணமாக விவசாயிகள் அமைப்புக்களை உருவாக்க முடியாதிருந்தமையினால் பயன்படுத்திக் கொள்ள முடியாது போய்விட்டது.

### 4.1.7 விடுமுறை இல்லங்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு

ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால், ஏற்கனவே உடவளவே, ஷர்“ வலயம், ஷடீ“ஜ வலயம், ஷஊ“ வலயம், பொல்கொல்ல, திகன மற்றும் பூவெலிகட ஆகிய 09 விடுமுறை இல்லங்கள் முழுமையாக நவீனமயமாக்கப்பட்டு, உபயோகத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தின் போது ருஹுாுணுகெத, தெகிஅத்தகண்டிய மற்றும் கலாவெவ விடுமுறை இல்லங்கள் நவீனமயமாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.1.8 காணிப் பிரிவின் செயலாற்றுகை

காணிப் பிரிவின் செயலாற்றுகை தொடர்பான இலக்குகள் யதார்த்த ரீதியற்ற முறையில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். 2012 ஆம் வருடத்தின் போது காணிப் பிரிவின் மூலம் விசேடமான பல பணிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதுடன், அவை காணிப் பிரிவின் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதனையும் குறிப்பிடுகிறேன்.

(அ) 2012 ஆம் வருடத்திற்கான இலக்குகளை தயாரிக்கும் பொழுது ஒரு சில குறைபாடுகள் இருந்த போதிலும், 2013Æ2014 இலக்குகளை யதார்த்த ரீதியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த நீண்ட கால குத்தகை தொடர்பான வீதி வரைபடங்கள் நில அளவை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதனால் ஷர்“ வலயம் தொடர்பான இந்த நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிட முடியாது போய்விட்டது. அதே போல மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக் கொள்வதிலும் ஒரு தாமதம் ஏற்பட்டது. 2014 வருடத்தில் இந்த வீதி வரைபடங்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பவற்றை பெற்றுக் கொள்வது தொடர்பான இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

(இ) குறிப்பிட்ட வருடாந்த அனுமதிப் பத்திரங்களை அடுத்த ஆண்டுக்கு உள்ளடக்கிக் கொள்வதற்கென கட்டணத் தொகைகள் செலுத்தப்படாமை, இக் காணிகள் முறையற்ற விதத்தில் பராதீனப்பட்டமை என்பன காரணமாக இந்த இலக்கை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

## 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) ஐை ைைஇ ைைை எதிர்ப்பார்க்கபட்ட விதத்தில் விற்பனை நிலையத்தை நடத்துவது கடினமாக இருந்து வந்தமையினால் இப்பொழுது இந்த விற்பனை நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) விக்டோரியா அணைக்கட்டின் பராமரிப்பு தொடர்பாக கைநூலில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இதற்கென கூடிய செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன், இதனை செயற்படுத்தாதிருத்தல் மூலம் பாரிய ஒரு இழப்பு ஏற்படப் போவதில்லை என ஆலோசகர்கள் தெரிவித்துள்ளார்கள். எவ்வாறிருப்பினும், அணைக்கட்டு பாதுகாப்பு கருத்திட்டத்தின் கீழ் ஒரு விசேட கருத்திட்டமாக இந்த அணைக்கட்டை புனரமைப்பதற்கும், நவீனமயமாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) இலங்கையின் மின்சார சபையின் மூலம் ரந்தெனிகல மற்றும் ரன்டம்பே அணைக்கட்டுகளுக்கான நீர் மின்சார வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மின் உற்பத்தி நிலையம் அணைக்கட்டுக்குள்ளே அமைக்கப்பட்டிருப்பதுடன், அணைக்கட்டுக்கு வழங்கப்படும் மின்சாரத்தை துண்டிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. ஏனைய அணைக்கட்டுகளிலிருந்து மின் உற்பத்தி நிலையத்திற்கு சுமார் 01 கி.மீ. க்கு மேற்பட்ட தூரம் இருந்து வருவதுடன், அந்த மின் இணைப்புக்களை மகாவலி அதிகார சபை காசு கொடுத்து பெற்றுக் கொள்ள வேண்டி நேரிடுகின்றது. எவ்வாறிருப்பினும், அணைக்கட்டை பராமரிப்பதற்கு தேவையான மின்சாரத்தை இலவசமாக பெற்றுக் கொள்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், நிர்மாண கம்பெனி சிறு அளவிலான நீர் மின்சார உற்பத்தி நிலையத்துக்கு தேவையான ஒழுங்குகளை அணைக்கட்டில் அமைத்திருந்த போதிலும், அதற்கென செலவாகும் பாரிய செலவை கருத்தில் கொண்டு அத்தகைய ஒரு கட்டுமானம் நிர்மாணிக்கப்படவில்லை.

(ஈ) **நீர்த்தேக்கத்தின் ஒதுக்குக் காணிகளில் சட்ட விரோதமான ஆக்கிரமிப்புக்கள்**

ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் சட்ட விரோதமாக குடியேறியிருப்பவர்களை அகற்றுவதற்கென பாராளுமன்றத்தின் ஆலோசனை கமிட்டியின் ஒரு உப கமிட்டி நியமனம் செய்யப்பட்டிருப்பதுடன், அதன் முடிவின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். அதனுடன் இணைந்த விதத்தில் அனைத்து மகாவலி நீர்த்தேக்கங்களினதும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் சமூக, பொருளாதார மதிப்பீட்டாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், இதுவரையில் விக்டோரியா, ரன்டம்பே, போவதென்ன மற்றும் பள்ளத்தாக்குகளுக்கிடையிலான கால்வாய் ஆகிய இடங்களில் இந்த மதிப்பீட்டாய்வு செயற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த அறிக்கை மற்றும் முன்னர் குறிப்பிடப்பட்ட கமிட்டியின் பரிந்துரைகள் என்பவற்றின் அடிப்படையில் சட்ட விரோதமான ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதற்கு திட்டமிடப்படும்.

(உ) **டு வலயத்தில் குழாய் கிணறுகளை அமைத்தல்**

டு வலயத்திற்குள் 06 குழாய் கிணறுகளை புனரமைப்பதற்கென நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூ. 1,048,992 தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் 4 குழாய் கிணறுகள் மட்டுமே புனரமைப்புச் செய்யப்பட்டிருப்பதுடன், மிகுதித் தொகை ரூ. 318,864 ஆகும். இத்தொகையை திருப்பிச் செலுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதுடன், எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் 10 குழாய் கிணறுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகையிலிருந்து இந்தத் தொகையை ஈடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.3 நிதிகளின் குறைந்த அளவிலான பயன்பாடு

ஏற்றுக் கொள்கின்றேன். இந்நிலைமை தோன்றுவதற்கு முக்கிய காரணம் திறைசேரியிலிருந்து கிடைக்கும் முற்பணத்தை விடுவிப்பதற்கு தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருவதாகும். 2012 ஆம் வருடத்தின் முடிவு அளவில் செலுத்தப்பட வேண்டிய கட்டணத் தொகைகளின் பெறுமதி சுமார் ரூ. 200 மில்லியன் அளவில் இருந்து வந்தது, இதன் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகள் மதிப்பின் அடிப்படையில் பார்க்கும் பொழுது குறிப்பிடத்தக்க அளவிலான ஒரு குறைந்த மட்ட பயன்பாடு இருந்து வரவில்லை என்பதனை இங்கு குறிப்பிடுகின்றேன்.

### 4.4 பொருளாதார சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஏற்றுக் கொள்கின்றேன். இந்த கையிருப்புத் தொகைகளை விற்றுத் தீர்ப்பதற்கென ஏற்கனவே கேள்விப் பத்திர செயன்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

### 4.5 ஒப்பந்த நிர்வாகத்தில் காணப்படும் குறைபாடுகள்

(அ) வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைபாடுகளை ஏற்றுக் கொள்கின்றேன். ஒப்பந்ததாரர்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கென திறைசேரியிடம் தேவையான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகளை தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் செயற்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) ஏற்றுக் கொள்கின்றேன். மிக அரிதாக இடம்பெறும் இத்தகைய குறைபாடுகளை முழுமையாக தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) ஏற்றுக் கொள்கின்றேன். இந்த வலயத்தில் மட்டும் ஏற்பட்ட இந்தக் குறைபாட்டை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.6 **வாகனங்களின் பாவனை**

(அ) "ர்" வலயத்தைச் சேர்ந்த வதிவிட கருத்திட்ட முகாமையாளர் ஒரே தடவையில் இரு வாகனங்களை பயன்படுத்தியமை தொடர்பாக ஒரு பூர்வாங்க விசாரணை இடம்பெற்று வருவதுடன், அதன் மூலம் கிடைக்கும் பரிந்துரைகளின் பிரகாரம் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) "ர்" வலயத்துக்கு ஒரு வதிவிட கருத்திட்ட முகாமையாளர் இருக்கும் பொழுதே மற்றுமொரு கருத்திட்ட முகாமையாளரை இணைக்க வேண்டிய நிலை ஒரு நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் ஏற்பட்டது. புதிய வதிவிட கருத்திட்ட முகாமையாளரிடம் முறைப்படி கடமைகளை ஒப்படைக்கும் வரையில் ஏற்கனவே பணியில் அமர்ந்திருந்த வதிவிட கருத்திட்ட முகாமையாளரின் சேவையையும் பெற்றுக் கொள்ள நேரிட்டது. அதன் பிரகாரம், வலயத்தின் அத்தியாவசிய கடமைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

4.7 **ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார சபையின் வளங்கள்**

ஏற்றுக் கொள்கின்றேன். இந்த வாகனங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கென விவசாய அமைச்சுடன் பல தடவைகள் கடிதப் போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஒரு சில கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டுள்ளன. நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கும் வாகனங்களையும் திரும்பத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இது தொடர்பாக இது வரையில் திருப்திகரமான எதிர்வினையை காட்டவில்லை.

5. **கணக்கீட்டு கருமங்கள் மற்றும் நல்லாட்சி**

5.1 **தொகுதித் திட்டம்**

தொகுதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பான உபாய ரீதியான திட்டத்தை தயாரிப்பதற்கென அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

5.2 **செயல் திட்டம்**

2014 ஆம் வருடம் தொடர்பான செயல் திட்டத்தில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

5.3 **உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்திற்குள்ளே தகுதி வாய்ந்த அதிகாரிகள் இல்லை. கணக்காளர் சேவையின் தரம் 1 அதிகாரியொருவரை விடுவிக்குமாறு திறைசேரியிடம் கேட்டுக் கொண்டிருந்த போதிலும், இதுவரையில் அத்தகைய அதிகாரி ஒருவர் விடுவிக்கப்படவில்லை.

5.4 **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டிக் கூட்டங்களை உரிய விதத்தில் நடத்தும் விடயத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### 5.5 கொள்வனவு திட்டம்

கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது நடைமுறையில் சிரமமானதாக இருந்து வந்த போதிலும், முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதனை அமுல் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடு**

வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருமங்களை உள் மற்றும் வெளி அழுத்தங்கள் காரணமாக அதே விதத்தில் அமுல் செய்ய முடியாத சந்தர்ப்பங்கள் இருந்து வருவதுடன், கூடிய முன்னுரிமையுடன் செய்ய வேண்டிய கருமங்கள் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படாதிருந்த போதிலும், அவற்றை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எவ்வாறிருப்பினும், முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருமங்களை அதே விதத்தில் நிறைவேற்றி வைப்பதற்கென மாதாந்த மீளாய்வு கூட்டத்தின் போது அதிகாரிகளுக்கு அறிவுறுதத்ல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 6. தொகுதிகள் மற்றும் கட்டுப்பாடு

இனங்காணப்பட்டிருக்கும் தொகுதி மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு உத்திகள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதுடன், நிலவி வரும் பலவீனங்களை தவிர்த்துச் செயற்படுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தி வருகின்றது. அதற்கூடாக காணிகளை குத்தகைக்கு விடுதல், கட்டடங்களின் பாவனை, செயல்திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல், கட்டுமானம் மற்றும் ஒப்பந்த வேலைகளின் நிர்வாகம், பயிற்சி நிலையத்தை பயன்படுத்துதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல், பண்ணை நிர்வாகம், களஞ்சியசாலை நிர்வாகம், வரி சேகரிப்பு, வாகனங்களின் உபயோகம், முற்பணங்களை வழங்குதல் மற்றும் நிவர்த்தி செய்தல், கருத்திட்டங்களை அமுல் செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு பிரிவினால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு பொருத்தமான திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.



காமினி ராஜகருணா
பணிப்பாளர் நாயகம்,
**இலங்கை மகாவலி அதிகார சபை**

பிரதி: - செயலாளர்,
நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு – தகவலுக்கென

# பாகம் V

# இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒட்டுமொத்த செயலாற்றுகை

# இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒட்டுமொத்த செயலாற்றுகை

மகாவலி அபிவிருத்தி பெருந்திட்டத்தை அமுல் செய்வதற்கென 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபை உருவாக்கப்பட்டது. மகாவலி பெருந் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு, எஞ்சியிருக்கும் உத்தேச அபிவிருத்தி கருத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து வைத்தல், அபிவிருத்தி பிரதேசங்களின் விவசாய உற்பத்தி திறனை உயர்த்துல், குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்தி மற்றும் புதிய வருமான மார்க்கங்களை உருவாக்கிக் கொடுத்தலுக்கூடாக கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவது என்பன அதன் தற்போதைய பணிகளாக இருந்து வருகின்றன. அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் சுமார் 100,000 ஹெக்டயார் அளவிலான காணிகள் தொடர்பாக நிர்ப்பாசன நீரின் முகாமைத்துவம் அதன் முதன்மையான பொறுப்பாக இருந்த வருகின்றது.

மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய அபிவிருத்தி திட்டத்தின் (2006 – 2016) கீழ் எதிர்பார்க்கப்படும் நீர்ப்பாசன, விவசாய மற்றும் கிராம அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதில் மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அதி விசேடமான ஒரு பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

சுமார் மூன்று தசாப்த காலம் நிலவி வந்த பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக அபிவிருத்தி செயற்பாடுகள் முடங்கி கிடந்த வடக்கு கிழக்கு பிரதேசங்களை அபிவிருத்தி செய்து விவசாய, பொருளாதார மறுமலர்ச்சியொன்றை ஏற்படுத்தும் பொருட்டு இலங்கை மகாவலி அதிகார சபை ஏற்கனவே முன்னுரிமை வழங்கியுள்ளது. இதன் கீழ் மாதுரு ஓய வலது கரை – டீ வலய அபிவிருத்தி, அல்லை கந்தளாய் அபிவிருத்தி, வெலிஓயா ஷடு“ வலய அபிவிருத்தி, வட பிரதேசத்திற்கு நீர்ப்பாசன நீரை எடுத்துச் செல்வதற்கென திட்டமிடப்பட்டிருக்கும் வட மத்திய மாகாண கால்வாய் அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்களில் சாத்தியப்பாட்டு ஆய்வுகள் மற்றும் நிர்மாண வேலைகள் என்பன இடம்பெற்று வருகின்றன. மேலும், இலங்கையில் உணவு உற்பத்தி பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், கிராமிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கென நிலையான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பன இக்கருத்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் ஆகும்.

2012 டிசம்பர் மாதத்தில் இறுதி அளவில் மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடு ரூ. 106.18 பில்லியனாகும். அதே போல இந்த முதலீடுகள் காரணமாக விவசாய உற்பத்தி, கால்நடை வளர்ப்பு மற்றும் பெருந்தோட்ட உற்பத்தி செயற்பாடுகள் என்பவற்றுக்கூடாக 2012 ஆம் ஆண்டளவில் கிடைத்த ஒட்டுமொத்த பயன்களின் மதிப்பு சுமார் ரூ. 694.68 பில்லியனாகும்.

இலங்கை மகாவலி அதிகார சபை நாட்டின் விவசாய உற்பத்தி தொடர்பாக ஒரு பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. அது தேசிய நெல் உற்பத்திக்கு 21மு பங்களிப்பையும், சோயா உற்பத்திக்கு 100மு பங்களிப்பையும், மிளகாய் உற்பத்திக்கு 11மு பங்களிப்பையும் வழங்குகின்றது. அது தவிர, மேலதிக பயிர்களின் உற்பத்திக்கு அது ஒரு சிறப்பான பங்களிப்பினை நல்கி வருகின்றது.

2011Æ2012 பெரும்போகத்தின் போது, மகாவலி பிரதேசங்களில் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு 92,572 ஹெக்டயார் ஆகும். பெரும்போகத்தின் மொத்த நெல் உற்பத்தி 515,246 மெ.தொன்களாக இருந்து வந்தது. ஒரு ஹெக்டயாரிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் கூடிய அறுவடையான 6.65 மெ.தொன் அறுவடை மகாவலி அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் ஷபு“ வலயத்திலேயே பெறப்பட்டது. 2012 ஆம் வருடத்தில் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் என்பவற்றின் போது வருடாந்த நெல் உற்பத்தி 827,558 மெ.தொன்களாக இருந்து வந்தது. 2012 இல் ஏனைய உப உணவுப் பயிர்களின் உற்பத்தி 308,438

மெ.தொன்களாகும். 2012 டிசம்பர் மாதம் வரையில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வது தொடர்பாக நன்னீர் மீன் உற்பத்தி 8,861 மெ.தொன்னும், 4.2 மில்லியன் முட்டைகளும், 19.9 மில்லியன் லீற்றர் பாலும் மகாவலி வலயங்களில் உற்பத்தி செய்யப்பட்டன.

மகாவலி மின் உற்பத்தி நிலையங்கள் 671 மெகாவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறனை கொண்டுள்ளன. அவற்றின் மூலம் தேசிய நீர் மின் உற்பத்திக்கு 50மூ பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

## 1.0 2012 ஆம் வருடத்தின் போது அபிவிருத்தி செயற்பாடுகள்

### 1.1 ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம்

2012 ஆம் வருடத்தின் போது மகாவலி அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பாக முதலீடு செய்யப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 2,050 மில்லியனாகும்.

2012 டிசம்பர் முடிவின் போது நிதிசார் முன்னேற்றம் வருமாறு:

| கருத்திட்டத்தின் வகை | வரவு செலவுத் திட்ட ஒதுக்கு | திறைசேரியினால் வழங்கப்பட்ட தொகை (2012 டிசம்பர் மாதம் முடிவு வரையில்) | செலவு (2012 டிசம்பர் மாதம் முடிவு வரையில்) |
|---|---|---|---|
| புதிய கருத்திட்டங்கள் | 190 | 78.50 | 77.92 |
| மகாவலி கருத்திட்டங்கள் | 568 | 487.00 | 493.77 |
| நிர்வாகம் மற்றும் பராமரிப்பு | 1இ292 | 863.15 | 914.48 |
| **மொத்தம்** | **2இ050** | **1இ428.65** | **1இ486.17** |

## 1.2 வெளிநாட்டு உதவியுடன் கூடிய கருத்திட்டங்கள்

### 1.2.1 மொறகஹகந்த – களுகங்கை கருத்திட்டம்

மகாவலி பெருந்திட்டத்தின் மிகப் பெரிய அபிவிருத்தி கருத்திட்டமொன்றான மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் உலர் வலயத்திற்கு தேவையான நீர்ப்பாசன நீரை பெற்றுக் கொடுப்பதாகும். 20 மெ.வாற் திறன் கொண்ட நீர் மின் உற்பத்தி நிலையமொன்று உருவாக்கப்படுவதுடன், அநுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை மற்றும் திகோணமலை மாவட்டங்களின் குடி நீர் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கான நீர் என்பவற்றை வழங்குவதற்கென 521 கனமீற்றர் கொள்திறனைக் கொண்ட மொறகஹகந்த நீர்த்தேக்கமும், 144 கனமீற்றர் கொள்திறனைக் கொண்ட களு கங்கை நீர்த்தேக்கமும் இக்கருத்திட்டத்தின் பிரதான கூறுகளாகும். இவற்றின் மூலம் நீர் பற்றாக்குறை நிலவி வரும் சுமார் 81,500 ஹெக்டயார் பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன நீர் வழங்கப்படவுள்ளது. இதற்கென மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் அடிப்படைச் செலவு 557 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூ. 64,358 மில்லியன்) ஆகும். இந்த கருத்திட்டம் 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2012 டிசம்பர் முடிவின் போது இதற்கென செலவிடப்பட்ட தொகை ரூ. 17,200.59 மில்லியனாகும்.

2012 ஆம் வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 5,248 மில்லியனாக இருந்து வந்ததுடன், அதில் ரூ. 3,511.1 மில்லியன் களுகங்கை கருத்திட்டத்திற்கும், 1,736.9 மில்லியன் மொறகஹகந்த கருத்திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டிருந்தது. 2012 டிசம்பர் மாதத்தில் ஒதுக்குகள் திருத்தப்பட்ட பொழுது ரூ. 12,694.36 மில்லியன்

மொறகஹகந்த கருத்திட்டத்திற்கும், ரூ. 720.26 மில்லியன் களுகங்கை கருத்திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டன. 2012 டிசம்பர் மாதம் அளவில் முறையே ரூ. 11,908.28 மில்லியன் மொறகஹகந்த கருத்திட்டத்திற்கும், ரூ. 642.31 மில்லியன் களுகங்கை கருத்திட்டத்திற்கும் செலவிடப்பட்டிருந்தது. 2013 ஆம் வருடம் தொடர்பாக இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கென ரூ. 12,392 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

மொறகஹகந்த கருத்திட்டத்திற்கென 2011 ஆம் வருடத்தின் இறுதி வரையில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,280 மில்லியன் தேசிய நிதிகளிலிருந்து கிடைத்தது. வெளிநாட்டு நிதிகளை பெற்றுக் கொள்வதற்கென பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம், (ஊாைநௌந னுநஎநடழிஅநவெ டீயமெ) சீன அபிவிருத்தி வங்கியின் கீழ் மொறகஹகந்த நீர்த்தேக்கத்தை திட்டமிட்டு நிர்மாணிப்பதற்கென 2012 ஆம் வருடத்தின் போது ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.




*மொறகஹகந்த பூர்வாங்க கட்டுமான வேலைகளுக்கென மகாவலி அதிகார சபை மற்றும் சீனாவின் சினோ ஹைட்ரோ கோப்பரே'ன் கம்பெனி என்பவற்றிற்கிடையில் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.*

ரூ. 252.3 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் திட்டமிடல் மற்றும் கட்டுமான வேலைகள் சீனாவின் சினோ ஹைட்ரோ கோப்பரே'ன் கம்பெனியிடம் 2012 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 07 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டது.

களுகங்கை நீர்த்தேக்கத்தின் பூர்வாங்க வேலைகளுக்கென ஆலோசனை மற்றும் ஒப்பந்ததாரரை தெரிவு செய்வதற்கென கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு வருகின்றன.

மொறகஹகந்த கருத்திட்டத்தின் நில அளவை வேலைகள், கட்டடங்களின் நிர்மாணம், அணுகு பாதைகளின் நிர்மாணம், மீள குடியேற்றம் தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் என்பன இடம்பெற்று வருவதுடன், நீர்த்தேக்கங்களின் மூன்று அணைக்கட்டுகளில் ஒரு அணைக்கட்டின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

(அ) **நில அளவை வேலைகள்**

நீர்த்தேக்கத்தின் பூர்வாங்க நில அளவை வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

(ஆ) **அணுகு பாதைகளை அமைத்தல்**

கூம்பியன்கல கால்வாய் மொறகஹகந்த வீதியின் (கி.மீ.13.5) நிர்மாணம் 100மூ பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பாலங்கள் மற்றும் மதகுகள் என்பவற்றின் நிர்மாணித்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் 100மூ ஆகும்.

**(இ) கருத்திட்டத்தின் கட்டடங்கள்**

கருத்திட்டத்திற்கு தேவையான கட்டடங்கள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன. அவற்றுக்குத் தேவையான நீர் இணைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

கவுடுல்ல அலகு சேவை நிலையம் மற்றும் கருத்திட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலம் என்பவற்றின் நிர்மாண வேலைகள் 70ூ பூர்த்தியடைந்துள்ளன. மொறகஹகந்த, கண்டளம கருத்திட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் வெள்ளேவல நீர் விநியோகத் திட்டம், தோரப்பிட்டிய மற்றும் மொறகஹகந்த அலுவலகத்தின் நிர்மாண வேலைகள் என்பன இடம்பெற்று வருகின்றன. நகர மத்தியஸ்தானம் மற்றும் சேவை நிலையம் என்பவற்றின் நிர்மாண வேலைகளில் 65ூ முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

(ஈ) மீள் குடியேற்ற நடவடிக்கைகள்: மொறகஹகந்த களுகங்கை நிர்மாண வேலைகள் காரணமாக தமது சொத்துக்களை இழப்பவர்களை மீளக் குடியேற்றுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதுடன், அதன் பிரகாரம், உத்தேச மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் நிர்மாண காரணமாக 1581 குடும்பங்கள் மீள குடியேற்ற வேண்டியிருக்கின்றது. களு கங்கை நீர்த்தேக்கத்தின் நிர்மாணம் காரணமாக 797 குடும்பங்களை மீளக் குடியேற்றப்படவுள்ளன.

மொறகஹகந்த பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்படும் 1,270 குடும்பங்களை களுகங்கை இடது கரை பிரதேசத்திலும், மிகுதிப் பேர் கவுடுல்ல இடது கரை பிரதேசத்திலும் மீளக் குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உத்தேச களுகங்கை நீர்த்தேக்கத்தின் கீழ் வெளியேற்றப்படும் 797 குடும்பங்கள் களுகங்கை வலது கரை பிரதேசத்தில் மீளக் குடியேற்றப்படவுள்ளன.

மீளக் குடியேற்றுவதற்கு தேவையான குடியிருப்புக்களின் திட்டங்களை தயாரிக்கும் வேலை முடிவடைந்துள்ளது. அதன் பிரகாரம், வெள்ளேவலயில் 6 புதிய குடியேற்றங்கள் இனங்காணப்பட்டிருப்பதுடன், அவற்றுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான வீதிகள், கட்டடங்கள், நீர் விநியோகம், மின்சார விநியோகம் போன்ற செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணிகளை கையகப்படுத்துதல் மற்றும் நட்ட ஈடு வழங்குதல் செயற்பாடுகளில் 10ூ முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கவுடுல்ல பிரதேசத்தில் குடியிருப்பு திட்டமிடல் வேலை பூர்த்தியடைந்திருப்பதுடன், நிர்மாண வேலைகள் நீர்ப்பாசன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(உ) பிரதான அணைக்கட்டின் நிர்மாணம்**

பிரதான அணைக்கட்டு, மின்சார நிலையம் மற்றும் மிகுதி அணைக்கட்டுப் பகுதி என்பவற்றின் திட்டமிடல் மற்றும் நிர்மாணம் என்பவற்றுக்கான ஒப்பந்தம் சீன கம்பெனியான சைனோ ஹைட்டேரா கோப்பரே'ன் கம்பெனிக்கு 2012 ஜூன் மாதத்தில் வழங்கப்பட்டது. 2012 ஆகஸ்ட் மாதம் 14 ஆந் திகதி இது வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.





**மொறகஹகந்த பூர்வாங்க கட்டுமான வேலைகளுக்கான மண் வெட்டும் வேலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது**

**(ஊ) சுற்றடால் பாதுகாப்பு**

நீரேந்து பரப்புப் பிரதேசங்களில் சுற்றாடல் மற்றும் வன வளம் என்பவற்றை பாதுகாக்கும் செயற்பாடுகள், இயற்கை பன்முகத் தன்மை தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், ஆற்றின் இரு கரைகளையும் பாதுகாத்தல் ஆகிய செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

**களுகங்கை கருத்திட்டம்**

களுகங்கை கருத்திட்டத்திற்கென மதிப்பிடப்பட்டிருக்கும் செலவு 283.97 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் 99 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு உதவியாக கிடைத்துள்ளது. அதன் பிரகாரம், ஒபெக் அமைப்பிடமிருந்து 17 மில்லியன் அமெரிக்க டொலர்களும், குவைட் நிதியத்திலிருந்து 37 மில்லியன் அமெரிக்க டொலர்களும், சவூதி நிதியத்திலிருந்து 46 மில்லியன் அமெரிக்க டொலர்களும் கிடைத்துள்ளன.

**(அ) நில அளவை வேலைகள்**

நில அளவை வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

**(ஆ) அணுகல் பாதைகளை அமைத்தல்**

அணுகல் பாதைகளை அமைக்கும் வேலையில் 80மூ முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**(இ) மீள் குடியமர்த்தும் செயற்பாடுகள்**

உத்தேச களுகங்கை நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக 797 குடும்பங்களை மீளக் குடியேற்ற வேண்டியிருப்பதுடன், அவர்களை களுகங்கை வலது கரை பிரதேசத்தில் குடியேற்றுவதற்கென திட்டமிடப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான குடியிருப்புக்களின் திட்டமிடும் வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளன. காணிகளை கையகப்படுத்தல் மற்றும் நட்ட ஈடுகளை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கென நிர்மாணிக்கப்பட உத்தேசித்திருக்கும் கிராம மையம் மற்றும் நகர மையம், பொதுக் கட்டடங்கள் என்பவற்றின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குடியேற்றவாசிகளுக்கான நீர்ப்பாசன வசதிகளின் கட்டுமான வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், சிறு அளவிலான 09 குளங்களின் நிர்மாண வேலைகள் 100மூ பூர்த்தியடைந்துள்ளன.

**(ஈ) பிரதான அணைக்கட்டின் நிர்மாணம்**

பிரதான அணைக்கட்டு மற்றும் உப அணைக்கட்டு ஆகிய இரு அணைக்கட்டுக்களினதும் நிர்மாணத்திற்கென ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. 2012 ஆம் வருடத்தின் முடிவில் ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்யப்படும் பணி பூர்த்தியடையவிருப்பதுடன், அதற்கென உதவி வழங்கும் குழுவினரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

**(உ) சுற்றாடல் பாதுகாப்பு**

உத்தேச களுகங்கை நீரேந்து பிரதேசத்தின் பாதுகாப்பு, சிறு குளங்களை நிர்மாணித்தல், நீரேந்து பரப்பு பிரதேசத்தில் குடியேற்றவாசிகளின் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்துதல், வன விலங்குகளின் பாதுகாப்பு, தொல் பொருள்களின் பாதுகாப்பு மற்றும் வன வள பாதுகாப்பு ஆகிய செயற்பாடுகள் சுற்றாடல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 1.2.2 அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம்

தேசிய நீர்ப்பாசன கட்டமைப்பின் நீண்ட கால நிலைபேறான அபிவிருத்தியை எடுத்து வருவதற்கூடாக செயல்திறன் மிக்க விதத்தில் இயக்குதல் மற்றும் நீர் வளங்களின் திட்டமிடலை மேம்படுத்துதல் என்பன இக்கருத்திட்டத்தின் நோக்கங்களாகவுள்ளன. ஒட்டுமொத்த கருத்திட்டத்திலும் 3 பிரிவுகளின் கீழ் இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கென நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன (அ) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் அதன் இயக்குதல் செயற்பாடுகளின் செயல்திறனை விருத்தி செய்தல்É (ஆ) தற்போதைய நீர் மற்றும் காலநிலை தகவல் தரவுத் தொகுப்பினை நவீனமயமாக்குதல் மற்றும் இற்றைப்படுத்துதல்É (இ) பல்துறைசார் நீர் வளங்கள் திட்டமிடலுக்கென தொழில்நுட்ப உதவியை வழங்குதல். தேசிய நீர் வளங்கள் பயன்பாட்டு திட்டமொன்றை தயாரித்தல், மகாவலி பெருந்திட்டத்தினை இற்றைப்படுத்துதல், முந்தெனியாறு பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தல் ஆகிய செயற்பாடுகள் பல்துறைசார் நீர் வளங்கள் திட்டமிடலின் கீழ் இடம்பெற்று வருகின்றன.

கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 8,187 மில்லியன் (75.8 மில்லியன் அமெரிக்க டொலர்) ஆகும். அதில் ரூ. 7,585.64 மில்லியன் (70.23 மில்லியன் அமெரிக்க டொலர்) உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிதியத்தின் மூலம் வழங்கப்படுவதுடன், மிகுதித் தொகையை இலங்கை அரசாங்கம் பங்களிப்புச் செய்கின்றது. கருத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இதுவரையில் ரூ. 4,075.42 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன், அது 49.6மூ முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. 2012 டிசம்பர் முடிவு அளவில் இடம்பெற்றிருக்கும் பௌதீக முன்னேற்றம் 53மூ ஆகும். கருத்திட்டத்தின் முன்னேற்றம் முக்கியமான 3 பிரிவுகளில் இடம்பெற்று வருகின்றது.

## 1. அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் இயக்குதல் என்பவற்றின் செயல்திறன்

| அணைக்கட்டு | பௌதீக முன்னேற்றம் மூ |
|---|---|
| பராக்கிரம சமுத்திரம் | 96 |
| கந்தளாய் | 77 |
| இங்கினிமிட்டிய | 92 |
| தம்போவ | 65 |
| உஸ்கலசியம்பலன்கமுவ | 70 |
| ரிதியகம | 65 |
| நாச்சடுவ | 55 |
| திஸாவெவ | 21 |
| மின்னேரிய | 54 |
| ஹுருலுவெவ | 50 |
| கிரித்தலே | 70 |
| நுவரவெவ | 27 |
| கவுடுல்ல | 72 |
| வெண்டராசன் | தற்பொழுது செயற்படுகின்றது |
| ராஜாங்கனய | தற்பொழுது செயற்படுகின்றது |
| தம்புலு ஓய | 100 |
| கண்டலம | 100 |
| போவதென்ன | 93 |
| சந்திரிக்காவெவ | 84 |
| தம்புலுஓயா மற்றும் கண்டலம (நுடநஉவசழ ஆநஉாயடைைஉயட றழசமள) | 90 |
| கலாவெவ | 45 |
| மாதுரு ஓயா | 26 |
| பொல்கொல்ல | 5 |
| ரன்தெனிகல | 10 |
| ரன்தம்பே | 5 |
| பொல்கொல்ல | 5 |
| கொத்மலை | 10 |
| நோட்டன் | 50 |
| லக்'பான | 50 |
| கெனியன் | 50 |
| கலட்டுவாவ | 100 |

கருத்திட்டத்தின் நிதியொதுக்கின் 75மூ இக்கூறுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 32 அணைக்கட்டுக்கள் தொடர்பாக எண்ணக்கருசார் திட்டங்களை தயாரித்தல், விரிவான திட்டங்களை தயாரித்தல், 32 அணைக்கட்டுக்கள் தொடர்பான விலைக் கூறுகளின் ஆவணங்களை பூர்த்தி செய்தல் மற்றும் 30 ஒப்பந்தங்களை 29 தொகுதிகளின் கீழ் வழங்குவதற்கென ஆலோசனை சேவைகளை வழங்குதல் ஆகிய பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இது வரையில் 03 அணைக்கட்டுகள் முழுமையாக புனரமைக்கப்பட்டிருப்பதுடன், மிகுதி 27 அணைக்கட்டுகளின் முதன்மையான புனரமைப்பு ஒப்பந்த வேலைகள் பல்வேறு மட்டங்களில் இருந்து வருகின்றன.



அணைக்கட்டுகளின் பராமரிப்பு மற்றும் இயக்குதல் என்பவற்றுக்கென அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்துவதற்கென இனங்காணப்பட்டிருக்கும் திருத்தல் வேலை தொடர்பாக 32 பாரிய அணைக்கட்டுகளை உள்ளடக்கிய விதத்தில் 80 அணைக்கட்டுகளுக்கென இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் வாகனங்கள் என்பன கருத்திட்டத்தின் கீழ் பாரிய அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 32 பாரிய அணைக்கட்டுகளை உள்ளடக்கிய விதத்தில் 42 அணைக்கட்டுகள் தொடர்பாக அணுகல் பாதைகள், மின்சார வசதிகள், பாதுகாப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய அவசர திருத்தல் வேலைகள் என்பன இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கருத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்டிருக்கும் அணைக்கட்டுகளின் நீண்ட கால நிலைபேறான செயற்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு இதுவரையில் 8 அணைக்கட்டுகள் தொடர்பாக நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. 25 அணைக்கட்டுகள் தொடர்பாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு கைநூல்கள் தயாரிக்கப்பட்டிருப்பதுடன், 24 அணைக்கட்டுகள் தொடர்பாக விரிவான ஆய்வு அறிக்கைகளின் தயாரிப்பு இடம்பெற்று வருகின்றது. ஐந்து அணைக்கட்டுகளுக்குத் தேவையான தரவு பகுப்பாய்வு, மதிப்பீடு என்பன கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர, தெரிவு செய்யப்பட்ட அணைக்கட்டுகள் தொடர்பாக கணினி அடிப்படையிலான பராமரிப்பு முகாமைத்துவ தொகுதியொன்றும் உருவாக்கப்பட்டு வருகின்றது.

புனரமைப்பு செய்வதற்கென இனங்காணப்பட்ட 32 அணைக்கட்டுகளில் மிகவும் மோசமான ஆபத்துக்களை எதிர்கொண்டிருக்கும் மற்றும் உணர்திறன் மிக்க 07 அணைக்கட்டுக்களை புனரமைப்பு செய்யும் காலப் பிரிவின் போது அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆற்றின் கீழ்ப் பிரதேசத்தில் வசித்து வரும் பிரஜைகளுக்கும், சொததுக்களுக்கும் நேரடியான தாக்கம் ஏற்படுகின்றது. ஆற்றின் கீழ்ப் பிரதேசத்தில் வசித்து வரும் சமூகத்தினருக்கு ஏற்படக் கூடிய

தாக்கத்தை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கென 2012 சிறுபோகத்தின் போது நிவாரண திட்டங்களின் மூலம் சமூகப் பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

மகாவலி அதிகார சபையின் கீழ் தம்புலு ஓய, கண்டலம, பிம்புரத்தாவ ஆகிய நீர்த்தேக்கங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் முடிவடைந்திருப்பதுடன், போவதென்ன நீர்த்தேக்கம் தொடர்பாக 93மூஇ கலாவெவ 45மூ, சந்திரிக்கா வெவ 84மூ , மாதுரு ஓயா 26மூ , பொல்கொல்ல 5மூ , ரந்தெனிகல 10மூ , ரன்தம்பே 5மூ மற்றும் கொத்மலை 10மூ என்ற வகையில் வேலைகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது.

## 2. நீரியல் காலநிலையியல் தகவல் தொகுப்பு

வாடகை அடிப்படையில் பொருட்களை வழங்குவதற்கான நியதிக் குறிப்புக்களை தயாரித்தல், ஒப்பந்த அதிகாரத்தை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப விலைக்கூறுகளை நிர்ணயிப்பது தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளல் என்பவற்றில் ஏற்பட்டிருக்கும் தாமதங்கள் காரணமாக கருத்திட்டம் தாமதமடைந்துள்ளது. இதற்கான காரணம் இந்த விடயத்தின் மிகவும் சிக்கலான இயல்பாகும். அமைச்சரவையின் மூலம் நியமனம் செய்யப்பட்ட மதிப்பீட்டு கமிட்டி மற்றும் கொள்வனவு கமிட்டி என்பன உருவாக்கப்பட்ட பின்னர் ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு இப்பொழுது நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. பயன்படுத்தக் கூடிய நீர் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளல், தற்போதைய உபயோகம், நீருக்கான எதிர்கால கேள்வி மற்றும் நிலையான முகாமைத்துவம் என்பவற்றுக்கென நாடெங்கிலும் 30 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கும் விதத்தில் 07 முன்னோடி பிரதேசங்களில் நிலத்தடி நீர் வலையமைப்பொன்றை உருவாக்கி, நிலத்தடி நீர் பாவனை அடிப்படையில் முகாமைத்துவம் மற்றும் தர நியமங்கள் தொடர்பான பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன.

### பல்துறைசார் நீர் முகாமைத்துவ திட்டமிடல்

முந்தெனி ஆறு மற்றும் தேசிய மட்டத்திலான மகாவலி வலயங்களுக்கான ஒருங்கிணைந்த மற்றும் விரிவான நீர்ப் பாவனை திட்டங்களை தயாரித்தல் இதன் முக்கிய நோக்கமாக இருந்து வருகின்றது. உபாய ரீதியான திட்டங்கள், அறிவு அடித்தளம், தரம், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசனை நடத்தல், சுற்றாடல் உத்திகள் மற்றும் மதிப்பீடுகள், திறன் அபிவிருத்தி என்பன பல்துறைசார் நீர் வளங்கள் திட்டமிடலில் முக்கிய கூறுகளாக இருந்து வருகின்றன. அறிவை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி செயன்முறையின் கீழ் வரைபடங்கள் மற்றும் பூகோள தரவுத் தொகுப்புக்கள் என்பவற்றின் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது வரையில் உபாய ரீதியான திட்டமிடல் சட்டகம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. முடிவெடுப்பதற்கு உதவும் கருவித் தொகுதியின் கீழ் எதிர்கால திட்ட பகுப்பாய்வின் 20மூ வேலை பூர்த்தியடைந்ததுடன், அதற்கான படிவங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

25 மாவட்டங்களில் பங்கீடுபாட்டாளர்கள் கலந்தாலோசனை பூர்த்தியடைந்துள்ளது. முந்தெனி ஆறு பள்ளத்தாக்கு தொடர்பாக ஒருங்கணைந்த மற்றும் விரிவான நீர் வளங்கள் திட்டம் மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட மகாவலி நீர் வளங்கள் அபிவிருத்தி திட்டம் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சுற்றாடல் மற்றும் சமூக மதிப்பீடு 96மூ பூர்த்தியடைந்துள்ளது.

## 1.3 மகாவலி கருத்திட்டம்

### 1.3.1 மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம்

நீர்ப்பாசன நீரை பாதுகாத்து, விவசாய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கூடாக மாதுரு ஓய இடது கரை பிரதேசத்தில் வாழந்து வரும் கிராமிய சமூகத்தினரின் பொருளதாரத்தை அபிவிருத்தி செய்வதனை இக்கருத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் நீர் முகாமைத்துவத்திற்கென மாதுரு ஓய இடது கரையில் 1981 – 1986 காலப் பிரிவின் போது நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன வலையமைப்பை புனரமைத்தல், கிராமிய சுய உதவி கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நீர் விநியோக சேவைகளை முறைப்படுத்தி மேம்படுத்துதல், விவசாய அபிவிருத்திக்கென விவசாயிகள் அமைப்புக்களுக்கு உதவுதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

நீர்ப்பாசன தொகுதிகளை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளின் கீழ் 52 கி.மீ. நீளமான கால்வாய், 65 கி.மீ. நீளமான கிளைக் கால்வாய்கள், 459 கி.மீ. நீளமான பகிர்வு கால்வாய்கள், 1,138 கி.மீ நீளமான வெளிக்கள கால்வாய்கள், 554 கி.மீ. நீளமான பரிமாற்ற கால்வாய்கள், 80 கி.மீ நீளமான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பாதைகள் மற்றும் சிறு குளங்கள் என்பவற்றின் புனருத்தாரண செயற்பாடுகள் இதில் அடங்குகின்றன. மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 2,800 மில்லியனாகும். கருத்திட்டத்தை 06 வருட காலப் பிரிவுக்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கருத்திட்டத்தின் இயல்பின் பிரகாரம் கருத்திட்டத்தின் காலத்தை மேலும் 02 வருடங்களுக்கு நீட்டிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டம் தொடர்பாக 2012 டிசம்பர் முடிவு வரையில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1,924 மில்லியன் ஆகும். 2012 ஆம் வருடத்திற்கென ரூ. 500 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், டிசம்பர் மாத முடிவு வரையில் அதில் ரூ. 450 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கருத்திட்டத்திற்கூடாக 65 கி.மீ. பிரதான கால்வாய்கள், 129 கீ.மீ. பகிர்வு கால்வாய்கள், 310 கி.மீ. வெளிக்கள கால்வாய்கள் என்பவற்றின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கென இக்கருத்திட்டம் 421 பசுக் கன்றுகளை வழங்கியிருப்பதுடன், 37 புல்வெளிகளை உருவாக்கியுள்ளது. மேலும், 619 மாட்டு கொட்டில்களை நிர்மாணிப்பதன் மூலம் மகாவலி விவசாயிகளுக்கு மேலதிக வருமான மார்க்கங்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் போது 48.9 கி.மீ. பகிர்வு கால்வாய்கள் மற்றும் 161.3 கி.மீ வெளிக்கள கால்வாய்கள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டு விருத்தி செய்யப்பட்டன.

### 1.3.2 ஆற்றோர மூங்கில் செய்கை கருத்திட்டம்

மகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கு பிரதேசங்களில் மண்ணரிப்பை தடுப்பதும், அதே போல குறை வருமானப் பிரிவினருக்கு மூங்கில் உற்பத்தி செயற்பாடுகளுக்கூடாக மேலதிக வருமான மார்க்கங்களை பெற்றுக் கொடுப்பதும் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். 2012 டிசம்பர் மாத முடிவு வரையில் இதற்கென செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 93.23 மில்லியன் ஆகும். 2012 ஆம் வருடத்தின் போது, இதற்கென 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அதில் டிசம்பர் மாத முடிவு வரையில் ரூ. 14.77 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இவ்வருடத்தின் போது 302,957 மூங்கில் கன்றுகள் பராமரிக்கப்பட்டு வந்ததுடன், 198,620 கன்றுகள் புதிதாக உற்பத்தி செய்யப்பட்டு 227,753 கன்றுகள் வழங்கப்பட்டன.

### 1.3.3 விசேட கறவை மாட்டு அபிவிருத்தி கருத்திட்டம் - மகாவலி ஷஊ“ வலயம்

2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டத்தின் மூலம் மகாவலி ஷஊ“ வலயத்தில் பால் உற்பத்தியை அதிகரித்தல், அதே போல மகாவலி பிரதேசத்தில் பால் உற்பத்தி செய்யும் 500 விவசாயிகளின் வருமான மட்டத்தை உயர்த்துதல் என்பன நோக்கங்களாக இருந்து வருகின்றன. இதற்கென மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 120 மில்லியனாகும். 2012 ஆம்

வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட திருத்தப்பட்ட நிதியொதுக்கு ரூ. 10 மில்லியன் ஆகும். டிசம்பர் மாத முடிவு வரையில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ, 74.28 மில்லியனாக இருந்து வந்தது.

இக்கருத்திட்டத்தின் கீழ் 2012 இன் போது விவசாயிகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 5 நடத்தப்பட்டன. 92 பசுக் கன்றுகள் விவசாய குடும்பங்களுக்கு மத்தியில் விநியோகப்பட்டதுடன், அவர்களுக்கு 96 மாட்டு கொட்டில்களை அமைப்பதற்கு உதவி வழங்கப்பட்டது. இக்கருத்திட்ட பிரதேசங்களில் வருடாந்தம் பால் உற்பத்தியை 17 மில்லியன் லீற்றர்களாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், சராசரி நாளாந்த பால் உற்பத்தி 5,471 லீற்றர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

### 1.4 நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் பராமரிப்பு மற்றும் நிர்வாகம்

இப்பிரிவின் கீழ் முக்கியமாக அபிவிருத்தி செய்யப்பட்ட 100,000 ஹெக்டயார் நீர்ப்பாசன நிலப்பரப்புகள் தொடர்பாக நீர் முகாமைத்துவத்தை மேற்கொள்ளல், 9,800 கி.மீ. நீர்ப்பாசன கட்டமைப்பு, பாரிய அளவிலான 08 நீர்த்தேக்கங்கள், சிறு அளவிலான 400 நீர்த்தேக்கங்களின் பராமரிப்பு, இயக்குதல் செயற்பாடுகளை மேற்கொள்ளல், 800 கி.மீ. வீதி தொகுதியை பராமரித்தல் மற்றும் புனரமைப்புச் செய்தல் ஆகியவை அடங்குகின்றன. இது தவிர, சுமார் 100,000 அளவிலான குடியேற்றவாசிகளுக்கென குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், 10 மகாவலி வலயங்கள் தொடர்பாக காணி நிர்வாகம், விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துதல் மற்றும் கால்நடை வளர்ப்பு செயற்பாடுகள், இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறையினருக்கான தொழில் பயிற்சி வழிகாட்டுதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென 2012 ஆம் வருடம் ஒதுக்கப்பட்ட திருத்தப்பட்ட தொகை ரூ. 1,292 மில்லியன் ஆகும். டிசம்பர் மாதம் வரையில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 914.479 மில்லியனாக இருந்து வந்தது. 2013 ஆம் வருடத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 1,120 மில்லயன் ஆகும்.

#### 1.4.1. மகாவலி வலயங்களின் முன்னேற்றம்

உடவளவே, ஹுருலுவெவ, விக்டோரியா, கொத்மலை, டீஇ ஊஇ னுஇ புஇ ர்இ டு மற்றும் ரம்பக்கன்ஓயா மகாவலி வலயங்களில் காணி நிர்வாகம் , விவசாய மற்றும் குடியேற்றத்தின் பின்னரான நடவடிக்கைகளுக்கென 2012 ஆம் வருடம் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,292 மில்லியன் ஆகும். மகாவலி பிரதேசங்களில் குடியேற்றப்பட்டிருக்கும் 168,151 குடும்பங்களுக்கென குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் புதிய காணிகளை பகிர்ந்தளித்தல், நீர்ப்பாசன வலயங்களை நிர்வகித்தல் என்பன மகாவலி அதிகார சபையின் தற்போதைய கருமங்களாக இருந்து வருகின்றன.

#### 1.4.1.1 நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் பராமரிப்பு

நீர்ப்பாசன கால்வாய் தொகுதிகளில் இருக்கும் சேற்றுப் படிவுகளை அகற்றுதல், உரிய விதத்திலான புனரமைப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றிற்கூடாக மகாவலி வலயங்களின் நீர் விநியோக ஏற்பாடுகளை செயல்திறன் மிக்க விதத்தில் மேற்கொள்வதற்கென 2012 ஆம் வருடத்தின் போது ரூ. 493 மில்லியன் ஒதுக்கப்பட்டது. டிசம்பர் மாத இறுதி வரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 547.67 மில்லியனாகும். நீர் பகிர்வு கால்வாய் தொகுதியின் பராமரிப்பு நடவடிக்கைகளை 799 விவசாயிகள் அமைப்புக்களிடம் ஒப்படைத்தமையினால் மகாவலி அதிகார சபைக்கூடாக மேற்கொள்ளப்படும் பராமரிப்புச் செலவுகளை குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தது.

#### 1.4.1.2 பெண்கள் விவகார அபிவிருத்தி

மகாவலி விவசாய, பொருளாதார இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதில் பெண்களின் பங்களிப்புக் குறித்து அதிகளவில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு சிறு குழுக்களுக்கு வலுவூட்டுவதன் மூலம் சேமிப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் சுழல் கடன்

திட்டமொன்றை மேற்கொள்ளல் என்பன தொடர்பாக வழிகாட்டுதல் வழங்கப்பட்டு வருகின்றது. 2012 ஆம் வருடத்தின் போது 39 புதிய குழுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.4.1.3 நிறுவன அபிவிருத்திப் பிரிவு

தொழில்முனைவு, ஆற்றல் அபிவிருத்தி, நிறுவனங்களுக்கு வலுவூட்டுதல், பெண்களுக்கு வலுவூட்டுதல், சமூக கலாசார அபிவிருத்தி மற்றும் விளையாட்டு செயற்பாடுகளுக்கூடாக மகாவலி குடியேற்றவாசிகளின் சமூக, பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல், குடியேற்றத்திற்கு பின்னரான அபிவிருத்தி செயற்பாடுகள என்பன இப்பிரிவின் பிரதான செயற்பாடுகளாக இருந்து வருகின்றன. மனித வள அபிவிருத்தி மற்றும் நிறுவனங்களை வலுவூட்டுதல் என்பவற்றுக்கு மகாவலி அதிகார சபையின் மனித வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவின் மூலம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

இப்பிரிவின் மூலம் 126 தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும், 63 குடியேற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் இவ்வருடத்தின் போது நடத்தப்பட்டன. அது தவிர, சமூக அபிவிருத்தி, சமூக பொருளாதாரம் மற்றும் கல்வி, சுகாதார என்பன தொடர்பாக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 562 ஆகும். 2012 ஆம் வருடத்தின் போது 1,904 சிரமதான செயற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூ. 22.32 மில்லியன் பெறுமதியான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

### 1.4.1.4 காணி அளிப்பு

மகாவலி அதிகார சபையின் மூலம் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டின் முடிவில் 134,373 காணித் துண்டுகளும், 97,166 விவசாய காணித் துண்டுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டில் டிசம்பர் மாத முடிவளவில் 1,882 மேட்டு காணித் துண்டுகளும், 1,331 நீர்ப்பாசன காணித் துண்டுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், 6,105 அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

2012 ஆம் ஆண்டின் போது, அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் 75 காணித் துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், ஏற்கனவே அவ்விதம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும் மொத்த காணித் துண்டுகளின் எண்ணிக்கை 21,814 ஆகும். எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த வரி சேகரிப்பு ரூ. 435.529 மில்லியனாக இருந்து வருவதுடன், அதில் ரூ. 108.056 மில்லியன் இவ்வருடத்தின் டிசம்பர் மாத முடிவுக்குள் சேகரிக்கப்பட்டிருந்தது.

பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த காணி அளிப்புப் பத்திரங்களின் எண்ணிக்கை 233,508 ஆக இருந்து வருவதுடன், அதில் 128,390 அளிப்புப் பத்திரங்கள் 2013 பெப்ரவரி மாத முடிவில் வழங்கப்பட்டிருந்தன. 2012 ஆம் வருடத்தின் போது, 14,997 அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதுடன், இதுவரையில் 6,105 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. காணி சம்பந்தமான 923 பிரச்சினைகள் ஜனாதிபதி அலுவலகத்திற்கு கிடைத்திருப்பதுடன், அதில் 325 புதிய காணிகளுக்கான விண்ணப்பங்களாக இருந்து வருகின்றன. 195 பிரச்சினைகள் காணித் தகராறு சம்பந்தப்பட்டவையாகும். இந்த மொத்த விண்ணப்பங்களில் 462 விண்ணப்பங்களுக்கு தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1.5 விவசாய அபிவிருத்தி

### 1.5.1 விவசாய உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் விவசாயத்திற்கூடாக தேசிய உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், விவசாய இறக்குமதிகளை குறைத்தல், அதிக வினைத் திறன் கொண்ட பயிர்களையும், விலங்கு உற்பத்திகளையும் மேம்படுத்தல் என்பவற்றுக்கென நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய களப் பயிர்கள் தொடர்பாக விவசாயிகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், கலப்பு விதை நெல் உற்பத்தி, இயற்கை உர உபயோகத்தை விருத்தி செய்தல், விவசாய பண்ணைகள் மற்றும் நாற்று மேடைகளை உருவாக்குதல், ஷதிவி நெகும'

தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 15,000 வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்தல் என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே 10,308 வீட்டுத் தோட்டங்களின் அபிவிருத்தி தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 விவசாய பயிர்களின் சாகுபடி

2011Æ2012 பெரும்போகத்தின் போது, மகாவலி பிரதேசங்களில் சாகுபடி செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 92,572 ஹெக்டயார்களாக இருந்து வந்ததுடன், 2012 பெரும்போகத்தின் போது, நெல் அறுவடை 515,246 மெ.தொன்களாக இருந்து வந்தது. பெரும்போகத்தில் சராசரி நெல் அறுவடை ஒரு ஹெக்டயாருக்கு 6.21 மெ.தொன்களாக இருந்து வந்ததுடன், ஆகக் கூடிய விளைச்சல் ஹெக்டயார் ஒன்றுக்கு 6.649 மெ.தொன் ஷபு“ வலயத்தில் கிடைத்தது. மேலதிக பயிர்களின் சாகுபடி 21,523 ஹெக்டயார் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டதுடன், உற்பத்தி 163,293.8 மெ.தொன்களாக இருந்து வந்தது. வரட்சியான காலநிலை காரணமாக 2012 சிறு போகத்தின் போது, சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு 66,194 ஹெக்டயார் வரையில் வீழ்ச்சியடைந்திருந்தது. மகாவலி வலயங்களில் இப்போகத்தின் போது ஒட்டுமொத்த நெல் உற்பத்தி 400,203.8 மெ.தொன்களாக இருந்து வருமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வரட்சி நிலைமை காரணமாக பெற்றுக் கொள்ளக் கூடிய விளைச்சல் 312,312.2 மெ.தொன்களாக இருந்து வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5.3 கறவை மாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் கால்நடை வளர்ப்பு முகாமைத்துவத்திற்கூடாக மகாவலி பிரதேசத்திற்குள் மேலதிக வருமான மார்க்கங்களை அறிமுகம் செய்து வைத்தல் மற்றும் மகாவலி குடியேற்றவாசிகளின் போ'ாக்கு நிலைமையை உயர்த்துதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு கறவை மாடு வளர்ப்பை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அனைத்து மகாவலி பிரதேசங்களும் பால் உற்பத்தியின் முன்னேற்றத்தின் பாவனை திட்டத்திற்கு விலங்கு வளர்ப்பு முகாமைத்துவ பிரிவு, முனைப்பான பங்களிப்பு உதவி வருகின்றது.

இப்பிரிவின் கீழ் இவ்வருடத்தின் போது 76 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், உயர் தரம் வாய்ந்த 86 கறவை மாடுகள் விவசாயிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன. 121 மாட்டுக் கொட்டில்கள் அமைக்கப்பட்டதுடன், 12,577 மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. மேலும், 5,212 மாடுகள் தொடர்பாக செயற்கை முறை கருவூட்டல் மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்பாடுகளுக்கூடாக பால் உற்பத்தி அபிவிருத்திக்கென பங்களிப்பு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம், இதுவரையில் 502 கறவை மாடுகள் வழங்கப்பட்டிருப்பதுடன், 698 மாட்டுக் கொட்டில்களை அமைப்பதற்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 1.5.4 நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் உற்பத்தியை மேம்படுத்துதல்

மகாவலி குடியேற்றவாசிகளின் போ'ாக்கு நிலை மற்றும் பொருளாதார நிலை என்பவற்றை மேம்படுத்துவதில் நன்னீர் மீன்பிடி கைத்தொழில் மிக முக்கியமான ஒரு பங்களிப்பை வழங்கி வருகின்றது. 2012 ஆம் வருடத்தின் போது, மகாவலி வலயங்களுக்கென வழங்கப்பட்ட மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை 2.203 மில்லியனாகும். 2012 டிசம்பர் மாதம் வரையில் மதிப்பிடப்பட்ட நன்னீர் மீன் உற்பத்தி 7,430 மெ.தொன்களாக இருந்து வந்தது. இளைஞர்களுக்கு புதிய வருமான மார்க்கங்களை உருவாக்கிக் கொடுத்தல் மற்றும் தொழில் முனைவுத் திறன்களை ஊக்குவித்தல் என்பவற்றின் கீழ் அலங்கார மீன் வளர்ப்பினை பரவலாக்குவதற்கென மகாவலி வலயங்களுக்குள் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

### 1.5.5 சுற்றாடல் மற்றும் வன வள பாதுகாப்பு

இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 16,478 சதுர கி.மீ. பரப்பளவில் மண் பாதுகாப்பு மற்றும் பயிர் அபிவிருத்திக்கென கன்றுகளை நடும் 65 நிகழ்ச்சித்திட்டங்களும், 60 சுற்றாடல் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. 2012 ஆம் வருடம் தொடர்பாக, இதற்கென

முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ. 15 மில்லியனாகும். இவ்வருடம் டிசம்பர் மாதம் வரையில் செலவிடப்பட்ட தொகை ரூ. 8.167 மில்லியனாகும்.

### 1.6 மகாவலி பண்ணை

மகாவலி திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் காணிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், மகாவலி அபிவிருத்தி பிரதேசங்களின் விதைகள் மற்றும் கன்றுகள் என்பவற்றிற்கான கேள்விகளை நிறைவு செய்து வைத்தல் மற்றும் அதிகளவு வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு மகாவலி விவசாய பிரிவிற்கூடாக 30 விவசாய பண்ணைகளை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 18 விவசாய பண்ணைகளில் சாகுபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 12 பண்ணைகள் தொடர்பாக பூர்வாங்க சாகுபடி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மகாவலி குடியேற்றவாசிகளுக்கு புதிய சாகுபடி முறைகள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதுடன், கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு, நீரின் உற்பத்தித் திறனை உயர்த்துதல் என்பவற்றிற்கென சாகுபடி முறைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு வருகின்றன.

### 1.7 சுற்றாடலுக்கு உசிதமான சுற்றுலா கைத்தொழில்

மகாவலி பிரதேசங்களில் சுற்றாடலுக்கு உசிதமான சுற்றுலா கைத்தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்வதற்கென மகாவலி நீர்த்தேக்கங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வன பிரதேசங்களில் பூங்காக்களை அலங்கரித்தல் என்பவற்றுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர் வழிகளில் சுற்றுலா வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கென நீர்த்தேக்கங்களில் படகு சேவை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றது.

### 1.8 சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி கருத்திட்டங்கள்

மகாவலி பிரதேசங்களில் 18 சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி கருத்திட்டங்களை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 59.3 மெகாவாற் நீர் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 13 கருத்திட்டங்கள் தொடர்பாக சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதுடன், அவற்றில் 3 கருத்திட்டங்கள் ஏற்கனவே வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. ஏனைய 10 கருத்திட்டங்கள் தொடர்பாக நிர்மாண வேலைகள் இப்போது இடம்பெற்று வருகின்றன.

### 1.9 உள்நாட்டு முதலீடுகள்

மகாவலி அபிவிருத்திக்கூடாக தனியார் துறையின் முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் உயர் உற்பத்தி திறன் கொண்ட விவசாய கருத்திட்டங்களுக்கென அபிவிருத்தி செய்யப்பட்ட மகாவலி காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2012 ஆம் வருடத்தின் போது 60 வர்த்தக Æ விவசாய கருத்திட்டங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன.

### 1.10 சேற்றுப் படிவை அகற்றும் நிகழ்ச்சித்திட்டம்

2012 ஆம் வருடத்தில் நிலவிய வரட்சியின் காரணமாக ஏற்பட்ட தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் ஒரு படிமுறையாக உலர் வலயத்தின் பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களில் சேற்றுப் படிவை அகற்றும் கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் மகாவலி வலயங்களில் 03 பிரதான நீர்த்தேக்கங்கள் மற்றும் 53 சிறு குளங்கள் என்பவற்றில் மிக வெற்றிகரமான விதத்தில் சேற்றுப் படிவுகள் அகற்றப்பட்டன.

## 2.0 2013 ஆம் வருடம் தொடர்பான அபிவிருத்தி முன்னுரிமைகள்

### 2.1 ரம்பக்கன்ஓய ஒருங்கிணைந்த கருத்திட்டம்

ரம்பக்கன்ஓய நீர்த்தேக்கத்தின் நிர்மாண வேலைகள் நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மஹஓய பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ரம்பக்கன்ஓய நீர்த்தேக்க கருத்திட்டம் மற்றும் அதனுடன் இணைந்த நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி என்பவற்றின் மூலம் 3,550 குடும்பங்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு இக்கருத்திட்டம் இலங்கை மகாவலி அதிகார சபையினூடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வரும் ரம்பக்கன்ஓய நீர்த்தேக்கத்தின் வேலைகளை 2012 ஆம் வருடத்தின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டது. குடியிருப்புக்கள் மற்றும் ஆற்றின் கீழ் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு இலங்கை மகாவலி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் குடும்பங்களை குடியேற்றுவதற்கு தேவையான குடியிருப்புக்களுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், 04 கிராமங்களின் பூர்வாங்க நில அளவை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், குடியேற்றவாசிகளை தெரிவு செய்வதற்கென ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட 56 குடும்பங்கள் 2012 ஆம் வருடத்தின் போது குடியேற்றப்பட்டதுடன், மிகுதி குடும்பங்களை குடியேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 2.2 கியுல்ஓய நீர்த்தேக்க அபிவிருத்தி

அநுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களை உள்ளடக்கிய விதத்தில் கியுல்ஓய நீர்த்தேக்க கருத்திட்டம் அமைந்துள்ளது. இதுவரை பயன்படுத்தப்படாத மஹஓயா பள்ளத்தாக்கு நீரை விவசாயத்திற்கும், வீட்டு உபயோகத்திற்கும் பயன்படுத்திக் கொள்வது இக்கருத்திட்டத்தின் நோக்கமாக இருந்து வருகின்றது. தொடக்கத்தில் நீர்த்தேக்க பள்ளத்தாக்கில் நீர் வளங்களை தானாகவே இயங்குதற்கு இடமளிக்கப்படுவதுடன், பின்னர் உத்தேச வட மத்திய கால்வாயுடன் அவை இணைக்கப்படவுள்ளன.

(அ) மஹஓயா பிரதான கிளை நதியில் கியுல்ஓயாவுக்கூடாக சம்பத்நுவர பிரதேசத்திற்கு அருகில் 55 கன.மீற்றர் திறன் கொண்ட ஒரு நீர்த்தேக்கத்தை நிர்மானித்தல், 1700 ஹெக்டயார் புதிய காணிகளுக்கு நீரை வழங்குவதற்கென கால்வாய் தொகுதியொன்றை நிர்மாணித்தல் மற்றும் தற்போதைய 05 கிராமிய குளங்களுக்கு போதியளவில் நீரை வழங்கி, அதன் மூலம் 700 ஹெக்டயார் நிலங்களுக்கு சேவைகளை வழங்குதல், புதிதாக 2000 குடும்பங்களை குடியேற்றுதல் மற்றும் ஆற்றின் கீழ் பிரதேச அபிவிருத்தி என்பன இக்கருத்திட்டத்தில் அடங்குகின்றன. மதிப்பிடப்பட்ட கருத்திட்ட செலவு ரூ. 6000 மில்லியனாகும். கருத்திட்ட காலம் 04 வருடங்களாகும்.

### 2.3 மகாவலி ஷடு“ வலயத்தின் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம்

அநுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அமைந்திருக்கும் ஷடு“ வலயம் சுமார் 62,000 ஹெக்டயார் நிலப்பரப்பை கொண்டுள்ளது. இந்த வலயம் நீரோட்ட போக்கின் பிரகாரம் 09 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருப்பதுடன், அவற்றில் 04 மற்றும் 05 பிரிவுகள் தொடர்பான செயற்பாடுகள் 1981 இல் ஆரமபிக்கப்பட்டன. இந்த இரண்டு வலயங்களிலும் 3,100 விவசாய குடும்பங்கள் குடியேற்றப்பட்டதுடன், தேவையான பொது வசதிகளும் வழங்கப்பட்டன. இப்பிரதேசத்தில் நிலவிய பாதுகாப்பற்ற நிலை காரணமாக எஞ்சிய அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டதுடன், குடியேற்றப்பட்ட பெருந்தொகையான குடும்பங்கள் இடம்பெயர நேரிட்டது. நிர்மாணிக்கப்பட்ட குளங்கள், நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் மற்றும் பெருந்தொகையான பொது கட்டடங்கள் என்பன சேதமடைந்தன. இவ்விதம் இடம்பெயர்ந்த 6900 குடும்பங்கள் 2012 – 2013 காலப்

பிரிவின் போது ஷடு" வலயத்தில் மீண்டும் குடியேற்றுவதற்கென திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 2900 குடும்பங்களை 2012 ஆம் வருடத்தின் போதும், மிகுதி 4000 குடும்பங்களை 2013 ஆம் வருடத்தின் போதும் குடியேற்றுவதற்கு உத்தேசப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 2,753 மில்லியனாகும். இதற்கென மகாவலி அபிவிருத்தி சபையின் மூலம் அவசியமான பொது வசதிகள் வழங்கப்படுவதுடன், குடியேற்றத்தின் பின்னரான நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது,

### 2.4 ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த கருத்திட்டம்

இலங்கையில் மிக உயரளவில் வறுமை நிலவுவதாக அறிவிக்கப்படும் ரிதிமாலியத்த பிரதேச செயலக பிரிவை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் ஓர் ஐந்தாண்டு முதலீட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் சமூக, பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை விருத்திச் செய்தல் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பயனுள்ள நிலையான வருமான மார்க்கங்களை உருவாக்கிக் கொடுத்து, குடும்ப பொருளாதார நிலைமையை உயர்த்துவதாகும். இதன் கீழ் வர்த்தக பயிர்களின் உற்பத்தி, கால்நடைகளின் அபிவிருத்தி மற்றும் தொழில்முனைவு அபிவிருத்தி என்பன தொடர்பாக முக்கியமாக கவனம் செலுத்தப்படும்.

### 2.5 மாதுருஓயா வலது கரை அபிவிருத்தி கருத்திட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாதுருஓயா வலது கரை அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றது. 1986 ஆம் ஆண்டில் பிரதான கால்வாயில் முதல் 7 கி.மீற்றர் அளவு தூரம் மற்றும் ே. னு. மு. நீர்த்தேக்கத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், திட்டமிடப்பட்ட ஆற்றின் கீழ் பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகள் நிலவி வந்த பாதுகாப்பு நிலைமை காரணமாக தடைப்பட்டன. அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கென சாத்தியப்பாட்டு அறிக்கையை இற்றைப்படுத்துதல் மற்றும் விரிவான திட்டங்களை தயாரித்தல் என்பன 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. சுற்றாடல் தாக்கம் குறித்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 2.6 உத்தேச வட மத்திய பாரிய கால்வாய்

உத்தேச வட மத்திய கால்வாய் மாதுருஓயா வலது கரையை அபிவிருத்தி செய்வதற்கும் வெலிஓயா ஷடு" வலயத்திற்கான திட்டங்களை தயாரிக்கும் வேலைகளும், நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் மூலம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இனங்காணப்படும் முன்னுரிமையின் அடிப்படையில் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

**2013 ஆம் வருடம் தொடர்பான நிதியொதுக்கு**

| **கருத்திட்டத்தின் வகை** | 2013 ஆம் வருடம் தொடர்பாக விண்ணப்பிக்கப்பட்ட தொகை (ரூ.மில்.) |
|---|---|
| மகாவலி கருத்திட்டம் | 830 |
| நிர்வாக மூலதனம் | 1,120 |
| **மொத்த மூலதனம்** | **1,950** |